Vol.7, Issue 12 | Annual Subscription ₹ 480
Rotary News, May 2025, Chennai


மே 2025

@NewsRotary /RotaryNewsIndia

# ரோட்டரி நியூஸ்

இந்தியா

www.rotarynewsonline.org




Rotary

# RJ MANTRA ENGLISH SCHOOL

IDHAYAM RAJENDRAN CHARITIES, AFFILIATED TO CISCE-TN 082.
VIRUDHUNAGAR, TAMILNADU.

# ADMISSIONS OPEN 2025-2026

## WE HAVE PARTNERED WITH IIT MADRAS



**Our students are privileged to take up IIT courses without JEE through the IIT Madras school connect program.**

**COURSES**

- **Introduction to Data Science and AI**
- **Introduction to Architecture and Design**
- **Introduction to Electronic System**

CENTRE FOR OUTREACH AND DIGITAL EDUCATION · IIT MADRAS

For More Information

www.rjmantra.com | 9489067789 | 8903660689 | admin@rjmantra.com

ADVT.

# உள்ளே




12

சூரியசக்தி மூலம் வாழ்க்கையை ஒளிரச் செய்யும் மும்பை ரோட்டேரியன்கள்



20

உறுப்பினர் வளர்ச்சி மூலம் வலிமையான ரோட்டரியை உருவாக்குதல்



24

உறுப்பினர் இல்லாமல், ரோட்டரி இல்லை



28

DEI-லிருந்து ரோட்டரி பின்வாங்கப் போவதில்லை



44

நன்கொடைக்காக ₹16 லட்சம் திரட்டியது மதுரை இன்டராக்ட்



46

பழங்குடி மாணவர்களுக்கு ஆதரவளித்தல்



54

நகரத்தின் சுவர்களை வண்ணமயமாக்குதல்



Rotary

A publication of Rotary Global Media Network




சுற்றுச் சூழலைக்காக்க மின்பதிப்புக்கு மாறவும்

**மின்னிதழ் கட்டணம் குறைப்பு**

ஜூலை 1, 2024 முதல் எங்கள் மின் பதிப்பு சந்தா ₹420-லிருந்து **₹324**-ஆக குறைக்கப்பட்டுள்ளது.

## ஜவ்வாது மலைவாழ் மக்கள் பற்றிய அருமையான கதை




*ஏப்ரல் இதழின் அட்டைப் பக்கத்தில் தமிழ்நாட்டின் மலைக்கிராமமான ஜவ்வாது மலையின் இயற்கை எழில் கொஞ்சும் படத்தைப் பார்த்து நான் மகிழ்ச்சியடைந்தேன். சென்னை ரோட்டேரியர்கள் பழங்குடியினருக்கு உதவும் விதங்களையும், சிறுதானியக் கதையையும் படித்தது சுவாரஸ்யமாக இருந்தது.*

*ரோட்டரி இந்தியா எழுத்தறிவு இயக்கத்தின் பெயர் ரோட்டரி சர்வதேச வாரியத்தால் எடுக்கப்பட்ட முடிவின்படி இந்தியா எழுத்தறிவு இயக்கம் என மாற்றப்பட்டுள்ளது என்பதை எங்களுக்குத் தெரியப்படுத்தியதற்கு நன்றி. கனடாவின் ஒன்டாரியோவின் வின்ட்சர்-ரோஸ்லேண்ட் ரோட்டரி சங்கத்தின் உணவு விநியோகத் திட்டத்தை மேற்கோள் காட்டி, மற்றவர்களுக்கு உதவ வேண்டியதன் அவசியத்தை RI தலைவர் ஸ்டெஃபனி அர்ச்சிக் தனது செய்தியில் விளக்கியுள்ளார். ஆசிரியர் குறிப்பு ஒரு கண் திறக்கும் விதமாக இருந்தது. அமெரிக்காவில் சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் எதிர்கொள்ளும் கஷ்டங்களையும் அவமானங்களையும் அவர் அழகாக விவரித்துள்ளார், மேலும் இந்நிகழ்வு பற்றிய விவரங்களையும் அளித்துள்ளார்.*

*இஸ்தான்புல் அமைதி மாநாடு “பிளவுபட்ட உலகில் குணப் படுத்துதல்” என்ற கருப்பொருளுடன் நடந்ததையும், TRF தலைவர் மார்க் மலோனியின் சுற்றுச்சூழல் திட்டங்களின் பொறுப்புணர்வு பற்றிய கவனத்தையும் படித்தது சுவாரஸ்யமான தகவல்கள். பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு உடைகள் வழங்கும் திறந்த அலமாரி’ ஒரு புதுமையான யோசனையையும், மற்ற சங்கங்களும் பின்பற்றக் கூடிய ஒரு சிறந்த செயலையும் வழங்குகிறது. கிளப் மேட்டர்ஸ் விளக்கமாகவும், புகைப்படங்கள் நன்றாகவும் இருந்தன.*

*பிலிப் முலப்போன் M T, RC திருவனந்தபுரம் சப்அர்பன் — D 3211*

*தமிழ்நாட்டின் கிழக்குத் தொடர்ச்சி மலையில் உள்ள ஜவ்வாது மலைகளில் ரோட்டரி சேவைத் திட்டம் பற்றிய முகப்புக் கட்டுரை பழங்குடியினரின் துயரத்தை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளது; மேலும் இஸ்தான்புல் அமைதி மாநாடு பற்றிய கட்டுரை அமைதி கட்டியெழுப்புதல் பற்றி விவாதித்துள்ளது. இந்த இதழில் உள்ள மற்ற அனைத்து கட்டுரைகளும் படிக்க சுவாரஸ்யமாக இருந்தன.*

*ஏப்ரல் தலையங்கத்தில் ஆசிரியர் ரஷீதா பகத் சுட்டிக் காட்டியுள்ள அமெரிக்காவிற்கு சட்டவிரோதமாகக் குடியேறியவர்களின் நிலை மிகவும் துரதிர்ஷ்டவசமானது. நம் தாய்நாட்டில் நமது சக குடிமக்கள் கண்ணியமான வருமானம் ஈட்டுவதற்கு வாய்ப்புகளை வழங்குவது இந்திய அரசாங்கத்தின் கடமை.*

*K M K மூர்த்தி, RC செகந்திராபாத் — D 3150*

*ஏப்ரல் தலையங்கத்தைப் பொறுத்தவரை, அமெரிக்காவிற்கு சட்டவிரோதமாகக் குடியேறியவர்களில் பெரும்பாலானோர் பஞ்சாப் மற்றும் குஜராத்தைச் சேர்ந்தவர்கள், மேலும் அவர்களில் பெரும்பாலானோர் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் அல்ல. இந்த சாகசத்திற்காக அவர்கள் ஏஜெண்ட்கள் என்று அழைக்கப்படுபவர்களுக்கு ஒரு கோடி ரூபாய் வரையிலான பெரும் தொகையை செலுத்துகிறார்கள். இது முற்றிலும் பேராசையால் தூண்டப்படுகிறது, அவர்கள்*

### தகவல் நிறைந்த, அனைத்தையும் உள்ளடக்கிய இதழ்

மார்ச் இதழில், ஆசிரியர் குறிப்பு (சிந்திக்க வேண்டிய நேரம்) மற்றும் கொல்கத்தா ரோட்டேரியர்கள் சிறுமிகள் மற்றும் பெண்களுக்கு கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயைத் தடுக்கும் முயற்சிகள் பற்றிய கட்டுரை மிகச் சிறப்பாக இருந்தது. இதுபோன்ற தகவல் நிறைந்த மற்றும் நன்கு ஆராயப்பட்ட கட்டுரைகளை எதிர்கால இதழ்களிலும் தொடர்ந்து வெளியிட பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

வெளிநாட்டு மாணவர்களை வரவேற்பது, தங்க வைப்பது மற்றும் உள்வாங்குவது மற்றும் அமைதி மையங்களை நடத்துவது ரோட்டரியால் மட்டுமே செய்யக்கூடிய செயல். 80க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 40,000க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு நிறம், கலாச்சாரம் மற்றும் இனங்களை கடந்து ரோட்டரி கல்வி அளித்து வருகிறது என்ற அறிக்கையிலிருந்து இது தெளிவாகிறது. நமது வேதங்கள் “அதிதி தேவோ பவ” என்று போதிக்கின்றன, நமது அரசாங்கங்கள் அவ்வப்போது அமைதி ஆணையங் களை உருவாக்குகின்றன, ஆனால் அதற்கு மேல் எதுவும் நடப்பதில்லை.

ரோட்டேரியர்கள் எந்தவித சவாலையும் ஏற்க தயாராகவே இருக்கிறார்கள் என்பது கொல்கத்தாவில் நடந்த கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்த் தடுப்புத் திட்டம் போன்ற முயற்சி களால் தெளிவாகிறது. அங்கு ரோட்டேரியர்கள் பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் மிகச் செலவான தடுப்பூசிகளை வழங்கி வருகின்றனர்.

ராஜ் குமார் கபூர்
RC ரூப் நகர் — D 3080

அட்டைப்படத்தில் ஜவ்வாது மலைகளின் ஒரு சிற்றூரின் பரந்த பசுமையான காட்சி ஒரு

*நம்மிடமிருந்து எந்த அனுதாபத்தையும் பெற தகுதியற்றவர்கள் என்று நான் நினைக்கிறேன்.*

S *ராமச்சந்திர பிரசாத்,* RC *கோயம்புத்தூர் மெட்ரோபோலிஸ்* — D 3201

*ஜவ்வாது மலைவாழ் மக்கள் பற்றி ஏப்ரல் இதழில் வெளியான அருமையான செய்திக்காக ரோட்டரி நியூஸுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகள்.* 10 *பக்கங்களுக்கு மேல் நீடித்த இக்கட்டுரை, பணியின் ஒவ்வொரு அம்சத்தையும் மிக விரிவாகப் படம்பிடித்து, வாசகர்களுக்கு ஒரு நுண்ணறிவுமிக்க கணக்கை வழங்கியது. முழு திட்டத்தையும் படம்பிடிக்கும் விவரங்களை அழகாக விளக்கிய ரோட்டேரியர் சாய் சேஷனுக்கு எங்கள் நன்றிகள் இருந்தாலும், கட்டுரையை எழுதி மிகச் சிறப்பாக வழங்கிய ஆசிரியர் மற்றும் வடிவமைப்பு குழுவினருக்கும் எங்கள் நன்றிகள் உரித்தானது. வடிவமைப்பு உண்மையிலேயே பாராட்டுக்குரியது.*

*சுந்தரம் சேஷாத்ரி,* RC *சென்னை அக்ஷயா* — D 3233

*சட்டவிரோத இந்தியக் குடியேற்றவாசிகள் மனிதாபிமானமற்ற முறையில் நாடு கடத்தப்பட்ட சோகத்தால் நாம் அனைவரும் வருத்தப்பட்டோம். சாதாரண இந்தியக் குடும்பங்களின் குழந்தைகள் வேறு எந்த நாட்டிற்கும் சென்று சம்பாதிக்க வேண்டியதில்லை என்ற நிலையை ரோட்டரி உருவாக்க முடியுமா? நமது பிரதமர் மோடி தனது அமெரிக்கப் பயணத்தின் போது இந்தியாவின் வியக்கத்தக்க பொருளாதார வளர்ச்சியைப் பற்றிக் கூறினார். ஆனால் அமெரிக்காவில் குடியேறிய இந்தியர்கள் யாராவது தாய்நாடு திரும்பினார்களா என்று எனக்குத் தெரியவில்லை.*

P N *பரிக்,* RC *பரூச்* — D 3060

புத்துணர்ச்சியூட்டும் மாற்றமாக இருந்தது. எளிமையான ஆனால் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய, நீடித்த வழிமுறைகளை பின்பற்றுவதன் மூலம் ஈடுபாட்டை மீள்தூண்டுவதற்கான RI தலைவரின் அழைப்பு மிகவும் முக்கியமானது. தலையங்கம் சட்டவிரோதமாக குடியேறியவர்களின் உணர்ச்சிகரமான தலைப்பைத் தொட்டது, அவர்கள் தங்கள் உயிரைப் பணயம் வைத்து ஆபத்தை எதிர்கொள்கிறார்கள். தங்கள் உடனடிச் சூழலில் சமூக களங்கத்தை எதிர்கொள்ளும் அவர்களுக்கு ரோட்டரி மறுசீரமைப்பு மற்றும் பொருத்தமான வேலை வாய்ப்புகளை வழங்குவதில் ஆக்கபூர்வமான பங்கை வகிக்க முடியும். சுற்றுச்சூழலை நாம் முக்கியத்துவப்படுத்தும் நிலையில், ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்துடன் ரோட்டரியின் புதிய மூலோபாய கூட்டாண்மை மேலும் நீடித்த மற்றும் ஆக்கபூர்வமான திட்டங்களை செயல்படுத்தும் என்று நம்புவோம்.

**முன்னாள் RI தலைவர் ஜான் ஜெர்ம்**
***அவர்களின் ரோட்டரி நியூஸ் பாராட்டு***

*ஜூடியும் நானும் ரோட்டரி நியூஸின் மார்ச் இதழை இப்போதுதான் படித்தோம். ரோட்டரி நியூஸ் எப்போதும் உண்மையானதாகவும் தகவல் நிறைந்ததாகவும் இருக்கிறது. மார்ச் இதழ் குறிப்பாக* RIPE *மரியோ டி காமார்கோ மற்றும்* RIPN *சங்கூ யுன் பற்றிய சிறந்த கட்டுரைகளுடன் இருந்தது.*

*முன்னாள்* RI *தலைவர் பில் பாய்டுக்கு செய்யப்பட்ட அஞ்சலியும் மிகச் சிறப்பாக இருந்தது. பில் ஒரு உண்மையான ஜென்டில்மேன் மற்றும் உலகம் முழுவதும் பல உயிர்களை பாதித்த ஒரு நண்பர். அவரது சமீபத்திய சாதனைகளில் ஒன்று துருக்கியில் அமைதி மையத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான குழுவுக்கு தலைமை தாங்கியது. அவர் மிகவும் மிஸ் செய்யப்படுவார்.*

*முன்னாள்* RI *தலைவர் ஜான் ஜெர்ம்*

**அட்டையில்:** லிட்டர் ஆஃப் லைட், பவர் பேக் மற்றும் போர்ஷே இந்தியாவுடன் இணைந்து RC பாம்பே ஜுஹூ பீச்சின் திட்டத்தின் ஒரு பகுதியாக, மும்பையின் கேட்வே ஆஃப் இந்தியாவில் சூரிய சக்தியில் இயங்கும் களிமண் விளக்குகளின் காட்சி.

தங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் உங்கள் சங்கத்தின் நல திட்டங்கள் புகைப்படங்களுடன் rushbhagat@gmail.com அல்லது rotarynewsmagazine@gmail.com என்ற மின்னஞ்சலிற்கு அனுப்பலாம். WHATSAPP செய்திகள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது. மேலும் ரோட்டரி செய்திகளை எங்கள் www.rotarynewsonline.org என்னும் இணைய தளத்தில் **Rotary News Plus** என்னும் இதழில் காணலாம்.

இதழ் ஒரு கம் வாசனையுள்ள பழுப்பு நிற காகிதத்தில் அடைத்து அனுப்பப்படுகிறது; தயவு செய்து விதிகள் படி 120 மைக்ரான் காகிதம் அல்லது பிளாஸ்டிக் கொண்ட சிறந்த வெளிப்புற உறையை மாற்ற முடியுமா?

N ஆந்த்ரி வேடி, RC ஹைதராபாத் மெகா சிட்டி — D 3150

RI தலைமையிடமிருந்து...

# ரோட்டரியின் இளம் செயற்பாட்டாளர்கள்

*நாம் எவ்வளவு காலம் ரோட்டரியில் இருக்கிறோம் என்பது முக்கியமல்ல, இளம் தலைவர்களின் ஆற்றல் மற்றும் புதிய கண்ணோட்டத்தால் நாம் அனைவரும் பயனடைகிறோம். தலைவரின் இந்த மாத செய்தியை தயாரிக்கும் பணியை திறமையான இளம் தலைவரான விடோர் ஜோவென்டினோவிடம் ஒப்படைக்கிறேன். அவர், தனது கட்டுரையில் குழுவாகப் பணியாற்றுவதும், உள்ளடக்கமும் எவ்வாறு மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதை நமக்கு நினைவுபடுத்தியுள்ளார். நீங்கள் அவரது செய்தியைப் படிக்கும்போது, அவரது நுண்ணறிவுகளைப் பற்றி சிந்திக்கவும், அவரது உற்சாகத்தை பகிர்ந்து கொள்ளவும், கற்றுக்கொள்வதற்கான புதிய வாய்ப்புகளை தழுவிக்கொள்ளவும் உங்களை ஊக்குவிக்கிறேன்.*

**— ஸ்டெஃபனி A அர்ச்சிக்**



ரோட்டரியின் இளைஞர் திட்டங்களின் சக்தியை நான் உணர்ந்துகொண்ட சரியான தருணம் எனக்கு நினைவிருக்கிறது. நான் ரோட்டரி இளைஞர் பரிமாற்ற மாணவராக இருந்த ஆண்டில், ஆஸ்திரேலியாவில் ஒருநாள் காலைப்பொழுதாக இருந்தது. ரோட்டரி இளம் தலைமைத்துவ விருதுகள் நிகழ்ச்சியில் இளம் தலைவர்கள் குழுவில் நானும் ஒருவனாக நின்றிருந்தேன். தரையில் நீண்ட தரைவிரிப்பில் நின்றுகொண்டு வெளியே வராமல் அதனை பாதியாக மடிக்க முடியுமா என்று கேட்டு ஏற்பாட்டாளர்கள் எங்களுக்கு சவால் விட்டனர்.

முதலில், அந்த வேலை மிகவும் எளிதானதாகத் தோன்றியது. ஆனால், நாங்கள் நகர்ந்து, உத்திகளை வகுத்து சரி செய்தபோது யதார்த்தம் வெளிப்பட்டது. அதாவது அதற்கு குழுப்பணி, சுறுசுறுப்பு மற்றும் நிலையான தொடர்பு தேவைப்பட்டது.

ரோட்ராக்டர்களும் ரோட்டேரியன்களும் எங்களுக்கு வழிகாட்டினார்கள். ஆனால், எப்படி வெற்றிபெறுவது என்பதை சொல்லித்தரவில்லை. முடிவுகளை நாங்கள் தான் எடுக்க வேண்டும். அதன்பிறகு குறிப்பிடத் தக்க ஒன்று நடந்தது. யாரும் சொல்லாமலே, நாங்கள், தரைவிரிப்பை மடிக்கும்போது யாரும் பின்தங்கியிருக்கக் கூடாது என்று கூட்டாக முடிவு செய்தோம்.

எங்கள் குழுவில் இடம்பெற்றிருந்த ஒருவர் சக்கர நாற்காலியைப் பயன்படுத்துபவர். எங்களை தகவமைத்துக் கொள்வதற்கான வாய்ப்பை அவர் வழங்கினார். அவர் அந்த அனுபவத்தின் ஒரு பகுதியாக இருந்தார். நாங்கள் இடம் மாறி, மாறி தரைவிரிப்பை தூக்கி, எங்கள் நிலையை மறுகட்டமைத்தோம். ஒரு குழுவாக சிந்திக்கவும், திட்டமிடவும், செயல்படவும் எங்கள் நேரத்தைப் பயன்படுத்தினோம். இறுதியில் நாங்கள் ஒன்றாக சவாலை வெற்றிகரமாக எதிர்கொண்டோம்.

நாங்கள் வெற்றியைக் கொண்டாடிய போது, ஒரு பங்கேற்பாளர், “ சமூகம் இப்படித்தான் செயல்படுகிறது. சவால்கள் வரும். ஆனால், மக்களை பின்னால் விட்டுச் செல்வதற்கு பதிலாக அவர்கள் ஒவ்வொருவரையும் ஒருங்கிணைப்பதற்கான வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டும்” என்று கூறினார். இளைஞரான எங்களுக்கு அது ஆழமான சிந்தினையாக இருந்தது. ஆனாலும் அது எங்கள் அனுபவத்தின் சாராம்சத்தை சரியாக படம்பிடித்துக்காட்டியது.

கலந்துரையாடுதல் இளைஞர்கள் உண்மையான மற்றும் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தும் சேவைத் திட்டங்களை உருவாக்க அதிகாரம் அளிக்கிறது. சர்வதேச அளவிலான குடிமக்கள் பரந்த கண்ணோட்டத்துடனும் வலுவான தலைமைத்துவ திறன்களுடனும் வீடு திரும்ப இளைஞர் பரிமாற்றம் வழிசெய்கிறது. மற்றவர்களை ஊக்குவிக்கவும் அணிதிரட்டவும் தகுதியுள்ள இளம் தலைவர்களை RYLA உருவாக்குகிறது. இவைதான் ரோட்டரியின் மாயாஜாலம்.

ஆனால், இந்த திட்டங்களின் வெற்றி இளம் தலைவர்களை நம்பியே உள்ளது. இதற்கு தங்கள் திறனை நம்பும் ரோட்டரி உறுப்பினர்கள் தேவை. ஒரு இன்டராக்ட் சங்கத்தை ஏற்படுத்தவும், மாணவர் பரிமாற்ற நிகழ்வை ஏற்று நடத்தவும், RYLA பங்கேற்பாளர் ஒருவரை ஆதரிக்கவும் நான் உங்களை ஊக்குவிக்கிறேன். நீங்கள் காட்டும் ஈடுபாடு, இந்த திட்டங்களை நிலை நிறுத்துவதை விட முக்கியமானது.

**விடோர் ஜோவென்டினோ**
RAC பெனாபோலிஸ், பிரேசில்



# உங்கள் வார்த்தை/நடத்தை உங்களைத் தீர்மானிக்கும்

சமீபத்தில் சிங்கப்பூர் ஊழியர் ஒருவரின் ராஜிநாமாக் கடிதம் கழிப்பறைத் தாளில் எழுதப்பட்டிருந்ததாக வெளியான செய்தி என் கண்ணில் பட்டது. அதில் குறிப்பிட்டிருந்த செய்தி இதுதான்: "தேவைப்படும்போது பயன்படுத்திவிட்டு பின்னர் தூக்கி எறியும் கழிப்பறை தாள்போல நான் உணர்ந்தேன்". செய்தி இப்படி முடிந்தது: "இந்த நிறுவனம் என்னை எப்படி நடத்தியது என்பதின் அடையாளமாகத்தான் நான் கழிப்பறைத் தாளை ராஜிநாமா கடிதம் எழுத தேர்வு செய்தேன். நான் ராஜிநாமா செய்கிறேன்."

அந்த நிறுவனத்தின் பெண் இயக்குநர், அந்த கடிதத்தை தொழில் ரீதியிலான சமூக வலைத் தளத்தில் (LinkedIn) பகிர்ந்து கொண்டார். அந்த கடிதம் ஏற்படுத்திய ஆழமான தாக்கத்தை வருத்தத்துடன் பகிர்ந்து கொண்டார். "பாராட்டு என்பது தக்கவைப்பதற்கான ஒரு கருவியல்ல." அது ஒருவர் எந்த அளவுக்கு மதிக்கப்படுகிறார் என்பதன் பிரதிபலிப்பாகும். அவர்கள் செய்யும் செயலுக்காக அல்ல, அவர்கள் யார் என்பதையும் பிரதிபலிக்கும். உங்கள் பாராட்டுகளை ஊழியர்கள் உணரச் செய்யுங்கள். அப்போதுதான் அவர்கள் நிறுவனத்தை விட்டு வெளியேற முடிவு செய்தாலும் மனவருத்தத்துடன் அல்ல, நன்றியுணர்வுடன் வெளியேறுவார்கள்."

பெரும்பாலும் பணியிடங்களில் இலக்குகளை எட்டவும், காலக்கெடுவுக்குள் முடிக்கவும் அழுத்தம் அதிகமாக இருப்பதால், முதுநிலை ஊழியர்களும், அதிகாரிகளும் வேலை சரியாகச் செய்யவில்லை என்றாலோ அல்லது தவறு நேர்ந்துவிட்டாலோ பொறுத்துக் கொள்வதில்லை. ஆம், செயல்திறன், வேலையின் தரம், இலக்குகள், காலக்கெடு ஆகியவையே அவர்களுக்கு முக்கியமானது. அதிகாரவர்க்கத்தின் கோபக்கனல் ஒருவரின் மன உறுதியையும், சுயமரியாதையையும் வெகுவாக பாதிக்குமானால், அவர் நிறுவனத்தை விட்டு வெளியேறுவதைத் தவிர வேறு வழியில்லை.

பணியிடம், குடும்பம், நட்புறவு- என எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். இந்த விவாதத்தை ரோட்டரி உலகிற்கு சுருக்குவோம். தலைமைத்துவம் மற்றும் அதன் கீழுள்ள படிநிலை இரண்டும் ரோட்டரியின் முக்கியப் பிரிவுகள். வெளிப்படைத் தன்மையுடன் செயல்படும், 1.4 மில்லியன் உறுப்பினர் கொண்ட ரோட்டரி குடும்பத்தில் அந்தந்த நாடுகளில், மண்டலங்களில் மற்றும் மாவட்டங்களில் உயர்நிலைத் தலைவர்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதை எளிதில் கவனமாக பார்க்க முடியும். அவர்களுக்கு இலக்கு இருக்கிறது. உறுப்பினர்கள் சேர்க்கை, ரோட்டரி அறக்கட்டளைக்கு நன்கொடை கிடைப்பதை உறுதிசெய்தல், உலகம் முழுவதும் உள்ள ரோட்டேரியன்கள் இந்த நிதியை சமூகநலத் திட்டங்களுக்கு பயன்படுத்துவது, போலியோவை எதிர்த்து தொடர்ந்து கடுமையாக போராடுவது என பல பணிகள் உள்ளன. ஆனால், இந்த தலைவர்கள் எவ்வாறு தங்கள் குறிக்கோளை எட்டுகிறார்கள். அவர்களின் நடத்தை எப்படி இருக்கிறது, அவர்கள் சங்க உறுப்பினர்களை எவ்வாறு கையாளுகிறார்கள், எப்படி நடத்துகிறார்கள். உறுப்பினர்களிடமும் குழுவினர்களிடமும் கனிவாக நடந்து கொள்கிறார்களா, தலைவர்கள் ரோட்டேரியன்களால் பல ஆண்டுகளுக்கு நினைவில் கொள்ளப்படுகிறார்களா அல்லது அந்தந்த தலைவர்களின் ரோட்டரி ஆண்டு முடிந்து வேறு ஒருவர் கைக்கு அதிகாரம் மாறியவுடன் மறக்கப்படுகிறார்களா என்பது அவர்கள் நடந்துகொள்வதை வைத்துத்தான் தீர்மானிக்கப்படும். இதுபற்றி சிந்தித்துப் பாருங்கள்.

நான், RI-ன் DEI பணிக்குழுவின் நிறுவன உறுப்பினர்களில் ஒருவரான பிரையன் ரஷ் கூறிய கருத்துடன் நிறுத்திக்கொள்கிறேன். *dei.inquiries@rotary.org* என்னும் இணையதள முகவரியில் இந்தியாவில் DEI-ஐ முன்னிருத்தி புகார்கள் ஏதேனும் உள்ளதா என்று கேட்டபோது, "அந்த மின்னஞ்சல்களை நான் கண்காணிக்கவில்லை" என்று கூறினார். ஆனால், புகார்களைவிட பிரச்னைகள் இருந்தன. அவை சங்கம் அல்லது மாவட்ட அளவிலேயே தீர்த்து வைக்கப்பட்டன. பின்னர் அவர் மேலும் கூறுகையில், "உண்மையைச் சொன்னால், பெரும்பாலானவர்களுக்கு கெட்ட நோக்கம் எதுவும் இல்லை. ரோட்டேரியன்கள் மோசமானவர்கள் அல்ல, ஆனால், தலைமுறை வேறுபாடுகள் உள்ளன. 40 ஆண்டுகளுக்கு முன்பு சொன்னதையும் செய்ததையும் ஏற்றுக்கொள்ள யாரும் தயாராக இல்லை. சில நேரங்களில் மக்கள் அதை உணர்ந்துகொள்வதில்லை.

இது என்னை சிந்திக்க வைத்தது ஒருவரை புண்படுத்துவது அல்லது மரியாதைக் குறைவாக பேசுவது அல்லது அருவருப்பாக பேசுவதற்கு முன் நாம் யோசித்து பார்க்கிறோமா? மற்றவர்களைப் புண்படுத்தும் பேச்சை அல்லது நடத்தையை தலைமுறை அல்லது கலாசார, பிராந்திய மத வேறுபாடுகள் நியாயப்படுத்திவிடுமா? இது பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

ரஷீதா பகத்


Meri LiFE
Lifestyle for Environment
RJ GARBAGE BANK
குப்பை வங்கி
The world's first Garbage bank Proudly presents
JOIN TO CELEBRATE THE ACHIEVERS WHO TAKE EXTRA EFFORTS TO MAKE THIS PLANET LOOK CLEAN AND FEEL HEALTHIER
ECO CHAMPIONSHIP AWARDS - 3.0
MONDAY
23
AUGUST, 2025
VENNANDI VELMURUGAN AUDITORIUM, RJ MANTRA ENGLISH SCHOOL, VIRUDHUNAGAR
APPLY NOW
स्वच्छ भारत
एक कदम स्वच्छता की ओर
LEKHA ads/May 25/ Rotary/NTEN
rj_garbagebank
www.ilovewaste.in
rjgb@idhayam.com
87542 04222

ADVT.

# RI இயக்குனர் செய்தி



# இளம் தலைவர்களின் திறமை மீது ரோட்டரியின் நம்பிக்கை

இளைஞர்களின் திறமையை நம்புவதில் தனி சக்தி ஒன்று உள்ளது. அவர்கள் இன்றே தலைமை தாங்கும் திறன் கொண்டவர்கள். ரோட்டரியின் இளைஞர் சேவை அந்த நம்பிக்கையில் வேரூன்றியுள்ளது. இளைஞர்கள் துணிச்சல், கருணை மற்றும் நல்ல குணங்களை வளர்த்துக் கொள்வதில் உறுதியுடன் இருப்பார்கள். அவர்கள் கனவு காணவும் செயல்படவும் தலைமையேற்கவும் இடம்தர வேண்டும்.

கிராமங்கள், நகரங்கள் மற்றும் பெருநகரங்கள், வளாகங்களில் ரோட்டரியால் ஈர்க்கப்பட்ட இளைஞர்கள் இருக்கிறார்கள். அவர்கள் உலகம் மாறும் என்று காத்திருக்கவில்லை. மாற்றத்தை உருவாக்கி வருகிறார்கள். இரத்ததான முகாம்களை நடத்துகிறார்கள், பருவநிலை மாற்ற பிரசாரங்களில் ஈடுபடுகிறார்கள், எல்லைகளைத் தாண்டி உரையாட தயாராக இருக்கிறார்கள் அல்லது சரியானவற்றுக்கு குரல் கொடுக்கிறார்கள். அவர்கள் சேவை மற்றும் தலைமைத்துவத்தின் மதிப்பை அறிந்து ஒவ்வொரு நாளும் வாழ்ந்து வருகிறார்கள்.

ரோட்டரியில் இளைஞர் சேவை என்பது தலைமைத்துவத்தை மட்டும் கற்பிக்கவில்லை, அது இளைஞர்களை நம்புகிறது. இது கதவுகளைத் திறக்கிறது, ஆனால், அதைவிட முக்கியமானது அது உச்சவரம்புகளை நீக்குகிறது. இது 16 வயது சிறுமியிடம் சமூகத்தை மாற்றியமைப்பதில் அவளின் குரல் முக்கியமானது என்று கூறுகிறது. 24 வயது இளைஞர்களிடம் திட்டங்களை மட்டுமல்ல, இயக்கங்களையும் வழிநடத்த முடியும் என்று சொல்கிறது. அப்படிச் செய்யும்போது தங்களைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றிய அலட்சியப் பார்வை இல்லாத தலைமுறை குடிமக்களை உருவாக்குகிறது.

இளம் தலைவர்களில் பலர், சங்கத்தின் ஒவ்வொரு கூட்டத்தை அல்லது பயிற்சி அமர்வுகளை நினைவில் வைத்திருக்காமல் இருக்கலாம். ஆனால், சுயநலத்தைவிட சேவை மிகவும் சக்திவாய்ந்தது, உண்மையான தலைமை என்பது மற்றவர்களை உயர்த்துவது மற்றும் நல்ல நோக்கத்துடன்கூடிய ஒருவர் இருந்தாலும் அவரால் மாற்றத்தை தொடங்க முடியும் என்று ரோட்டரி அவர்களுக்கு கற்றுக்கொடுத்ததை மறக்காமல் நினைவில் வைத்திருப்பது.

மிகவும் சிக்கலான, பிளவுபட்ட மற்றும் நிச்சயமற்ற உலகில், ரோட்டரி இளைஞர் சேவை என்பது ஒரு அமைதியான புரட்சியாகும். இளம் உள்ளங்கள், மனதை தைரியமாகவும், அதேநேரத்தில் கருணை மற்றும் எழுச்சியுடனும் வைத்திருக்க தயார்படுத்தும் ஒரு சக்தியாகும். அதுதான் உலகிற்கு மிகவும் தேவைப்படும் புரட்சியாகும்.

**அனிருதா ராய்சௌத்ரி**
RI இயக்குனர் 2023–25

TRF
தலைவரிடமிருந்து...



# தருணத்தை சந்திப்போம்!

போலியோவை முடிவுக்கு கொண்டு வருவதற்கான நமது பயணத்தில் சந்தேகமும் நிச்சயமற்ற தன்மையும் இருக்கும் தருணத்தில், நாம் உறுதியாகவும், எல்லாவற்றுக்கும் மேலாக நம்பிக்கையுடனும் இலக்கை நோக்கிச் செல்ல வேண்டும்.

1988-ம் ஆண்டில், உலக சுகாதார நிறுவனத்துடன் (WHO) இணைந்து உலகளாவிய போலி ஒழிப்பு முயற்சியை மேற்கொண்டபோது, 125 நாடுகளில் ஆண்டுதோறும் 3,50,000 பேருக்கு போலியோ பாதிப்பு இருந்ததாக மதிப்பிடப்பட்டது. அப்போதிருந்து உலகளாவிய போலியோ ஒழிப்பு முயற்சியில் யுனிசெப், அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம், கேட்ஸ் அறக்கட்டளை மற்றும் GAVI தடுப்பூசி கூட்டணி உலகெங்கிலும் உள்ள அரசாங்கங்களுடன் இணைந்து, இடைவிடாது செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் 99.9% கொடிய போலியோ வைரஸ் நோய் தாக்குதலை தடுத்துள்ளோம்.

இந்த பயணத்தில் சவால்கள் இல்லாமல் இல்லை. இன்று ஆப்கானிஸ்தானில் போலியோ தடுப்பூசி போடுபவர்கள் வீடு வீடாகச் சென்று போலியோ நோய்த் தடுப்பு பிரசாரம் செய்யவும், தடுப்பூசி போடுவதற்கும் தடைவிதிக்கப் பட்டுள்ளது. அதே நேரத்தில் பாகிஸ்தானில் மோதல்கள், பயங்கரவாதம் மற்றும் இடப்பெயர்வு உள்ளிட்ட பிரச்னைகள் காரணமாக சில பிராந்தியங்களில் குழந்தைகளுக்கு போலியோ நோய் தடுப்பூசி போட முடியவில்லை.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் அமெரிக்கா உலக சுகாதார அமைப்பிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளது. மேலும் அமெரிக்க நிதியுதவியும் முடக்கப்பட்டுள்ளது மற்றும் CDC உடனான தொடர்புகளும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் நமது போலியோ ஒழிப்பு முயற்சிகள் மற்றும் இதர ரோட்டரியின் உலகளாவிய கூட்டாண்மைகள் மற்றும் திட்டங்களுக்கு இவை தடைகளை ஏற்படுத்துகின்றன.

ஆனாலும், முன்பு போலவே இந்த தருணங்களை சந்திக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். இந்தியாவில் போலியோ நோய் பாதிப்பு அதிகரித்து வந்தபோதிலும் நாங்கள் தளராமல் செயல்பட்டு போலியோ ஒழிப்பு முயற்சியில் ஈடுபட்டோம். இதன் காரணமாக 2014-ம் ஆண்டு இந்தியா தீவிர போலியோ தாக்குதல் இல்லாத நாடாக அறிவிக்கப்பட்டது. நைஜீரியாவிலும் நாம் சில தடைகளை சந்தித்தோம். ஆனால், 2020-ம் ஆண்டு WHO நைஜீரியாவை போலியோ இல்லாத நாடாக அறிவித்தது. அதைத் தொடர்ந்து ஆப்பிரிக்க பிராந்தியத்தில் உள்ள 47 நாடுகளும் போலியோ இல்லாத நாடாக சான்றளிக்கப்பட்டது.

இப்போது 2025-ல் மீண்டும் அந்த தருணத்தை சந்திக்கிறோம். சவால்களை எதிர்கொள்ளவும், நிர்வாகத்தில் உள்ள இடையூறுகளை கடந்து வரவும், நிதியை பெறுவதற்கான மாற்று வழிகளையும் ஆராய ரோட்டரி பின்னணியில் இருந்து செயல்பட்டு வருகிறது.

**மார்க் மலோனி**
TRF அறங்காவலர் தலைவர்

**ஆளுநர் குழு**

RID 2981 பாஸ்கரன் S
RID 2982 சிவகுமார் V
RID 3000 ராஜா கோவிந்தசாமி R
RID 3011 மகேஷ் திரிகா
RID 3012 பிரசாந்த் ராஜ் ஷர்மா
RID 3020 வெங்கடேஸ்வர ராவ் M
RID 3030 ராஜீந்தர் சிங் குரானா
RID 3040 அனீஷ் மலிக்
RID 3053 ராகுல் ஸ்ரீவஸ்தவா
RID 3055 மோகன் பராஷர்
RID 3056 ராக்கி குப்தா
RID 3060 துஷார் ஷா
RID 3070 பர்மிந்தர் சிங் குரோவர்
RID 3080 ராஜ்பால் சிங்
RID 3090 சந்தீப் சௌஹான்
RID 3100 தீபா கண்ணா
RID 3110 நீரவ் நிமேஷ் அகர்வால்
RID 3120 பரிதோஷ் பஜாஜ்
RID 3131 ஷீத்தல் ஷரத் ஷா
RID 3132 சுரேஷ் ஹேரலால் சாபூ
RID 3141 சேட்டன் தேசாய்
RID 3142 தினேஷ் மேத்தா
RID 3150 சரத் சௌத்ரி கட்ராகட்டா
RID 3160 சாது கோபால கிருஷ்ணா
RID 3170 சரத் பாய்
RID 3181 விக்ரம்தத்தா
RID 3182 தேவ் ஆனந்த்
RID 3191 சதீஷ் மாதவன்
RID 3192 மகாதேவ பிரசாத் N S
RID 3201 சுந்தரவடிவேலு N
RID 3203 சுரேஷ் பாபு S
RID 3204 சந்தோஷ் ஸ்ரீதர்
RID 3211 சுதி ஜப்பார்
RID 3212 மீரான் கான் சலீம்
RID 3231 ராஜன்பாபு M
RID 3233 மகாவீர் போத்ரா
RID 3234 சரவணன் N S
RID 3240 சுக்மிந்தர் சிங்
RID 3250 பிபின் சாச்சன்
RID 3261 அகில் மிஸ்ரா
RID 3262 யக்ஞன்சிஸ் மோஹாபத்ரா
RID 3291 கிருஷ்ணேந்து குப்தா

அச்சு மற்றும் பதிப்பாளர் **P T பிரபாகர்** (முகவரி: 15 சிவசாமி சாலை, மைலாப்பூர் சென்னை-4). துகார் டவர்ஸ், 3-வது தளம், 34, மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை-600 008-யில் இயங்கும் ரோட்டரி நியூஸ் ட்ரஸ்ட் சார்பில் ராசி கிராபிக்ஸ் பி லிட், 40, பீட்டர்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை- 14 என்ற முகவரியில் அச்சிடப்படுகிறது. **ஆசிரியர்: ரஷீதா பகத்.**

கட்டுரைகளை திருத்தவோ/ சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.

Printed and published by PT Prabhakar, 15 Sivaswamy Street, Mylapore, Chennai 600004, on behalf of Rotary News Trust and printed at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah,Chennai - 600 014, India, and published at Rotary News Trust, Dugar Towers, 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

**அறங்காவலர் குழுவினர்**

| | |
|---|---|
| T N ராஜூ சுப்ரமணியன் RI இயக்குனர் மற்றும் RNT தலைவர் | RID 3141 |
| அனிருதா ராய்சௌத்ரி RI இயக்குனர் | RID 3291 |
| Dr பரத் பாண்ட்யா TRF அறங்காவலர் | RID 3141 |
| ராஜேந்திர K சாபூ | RID 3080 |
| கல்யாண் பானர்ஜி | RID 3060 |
| சேகர் மேத்தா | RID 3291 |
| அசோக் மஹாஜன் | RID 3141 |
| P T பிரபாகர் | RID 3232 |
| Dr மனோஜ் D தேசாய் | RID 3060 |
| C பாஸ்கர் | RID 3000 |
| கமல் சங்வி | RID 3250 |
| Dr மகேஷ் கோட்பாகி | RID 3131 |
| A S வெங்கடேஷ் | RID 3232 |
| குலாம் A வஹன்வதி | RID 3141 |

**RI Directors-elect**

| | |
|---|---|
| முருகானந்தம் M | RID 3000 |
| நாகேஷ் K P | RID 3191 |

**செயற்குழு உறுப்பினர்கள்** (2024–25)

| | |
|---|---|
| மகாதேவ பிரசாத் N S தலைவர், ஆளுநர் குழு | RID 3192 |
| அகில் மிஸ்ரா செயலாளர், ஆளுநர் குழு | RID 3261 |
| ராஜா கோவிந்தசாமி R பொருளாளர், ஆளுநர் குழு | RID 3000 |
| ராக்கி குப்தா ஆலோசகர், ஆளுநர் குழு | RID 3056 |

**ஆசிரியர்**
ரஷீதா பகத்

**துணை ஆசிரியர்**
ஜெய்ஸ்ரீ பத்மநாபன்

**நிர்வாகம் மற்றும் விளம்பர மேலாளர்**
K விஸ்வநாதன்

ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*

Contributions are welcome but will be edited. Content can be reproduced with permission and attributed to RNT.

**துணை தலைவர் செய்தி**



# தொண்டுச் செயல்பாடுகள் - ரோட்டரி வழி

தொண்டு என்பது ஒரு வகையான பொது நலச்செயலாகும். இதில் பொது மக்கள் நலனுக்காக, வாழ்க்கை தரத்தில் கவனம் செலுத்தும் தனிப்பட்ட முன்னெடுப்புகள் இடம்பெறுகின்றன.” இதைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்லான ஃபிலன்த்ராபி என்பது அன்பு என்பதிலிருந்து வருகிறது, ஃபிலோ என்றால் நேசித்தல், விரும்புதல், அந்த்ரோபஸ் என்றால் மனித குலம், இனம். இது TRFக்கான நம் ஆதரவை நன்கு விளக்குகிறது.

“தி மேன் ஆஃப் லா மன்ச்சா” என்ற படைப்பில் டான் க்விக்ஸாட் எங்கும் நல்லதைக் கண்டறியும் முயற்சியில் இறங்குகிறார். இது மிகக் கடினமான முயற்சியாகத் தோன்றுகிறது. ஆனால், அவர் “செய்ய இயலாததைப்பற்றிக் கனவு கண்டர், வெல்லமுடியாத எதிரியுடன் மோதினார், துணிச்சலானவர்கள் செல்லத் துணியாத இடத்துக்குச் சென்றார்.”

ரோட்டரியில், நம் பயணம் எங்கும் நல்லதைக் காண்பது, நல்லதைச் செய்வதுதான். ஆனால், ரோட்டரியில் செய்ய இயலாதது செய்யக்கூடியதாக ஆகிறது. ஏனெனில், ரோட்டரியன்களின் கனவில் ஒரு முதன்மையான வேறுபாடு உள்ளது. அவர்களுடைய கனவுகள் எதார்த்தமானவை. அவர்கள் அன்றாட வாழ்க்கையில் பிறரைப்பற்றி எண்ணுகிறார்கள். அவர்கள் சாலையில் உடைந்த கண்ணாடியைப் பார்த்தால், அக்கம்பக்கத்தில் உள்ள சிறுவர்கள் விளையாடும்போது இது அவர்களுடைய காலைக் கிழித்துவிடுமோ என்று எண்ணி அதை அகற்றுகிறார்கள்.

அதனால், நான் ஒரு வழிபாட்டைச் சொல்கிறேன்: “கடவுள் ரோட்டரியன்கள் அனைவருக்கும் தங்களால் மாற்றத்தை உண்டாக்க இயலும் என்கிற துணிச்சலையும் உறுதிப்பாட்டையும் வழங்கட்டும். அதன்மூலம், பிறர் செய்ய இயலாது என்று சொல்லும் செயல்களை, திட்டங்களை அவர்கள் தொடர்ந்து செய்வார்கள்.” இதைச் செய்வதற்கு மிகச் சிறந்த வழி, எங்கும் நல்லதைச் செய்வதற்கு ஏற்ற வழி, ரோட்டரி அறக்கட்டளை.

இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு, நம் மனிதத்தன்மை நல்கைகள் திட்டம். பல்வேறு நல்கைகளின் வழியாக TRF உங்கள் பரிசுகளை உங்களுக்கு அருகிலும், உலகெங்கும் வாழ்க்கைகளை மாற்றுகிற சேவைத் திட்டங்களாக ஆக்குகிறது. அதனால், ஆண்டு நிதியை ஆதரிப்பது மிகவும் முதன்மையாகிறது. இன்றைக்கு நாம் ஆண்டு நிதிக்கு வழங்கும் பங்களிப்புகள்தான் நாளைக்கு நாம் நல்கைகளை வழங்க உதவுகின்றன.

நாம் நேரெண்ணத்துடன் முன்னேறி இளம்பிள்ளைவாதத்தை முடித்துவைக்கப் பணியாற்றுகிற இந்த நேரத்தில், இளம்பிள்ளைவாத நிதியை ஆதரிப்பது முன்பு எப்போதையும் விடத் தேவை. ரோட்டரியன்களுடைய பங்களிப்புகள் இல்லாமல், இளம் பிள்ளைவாதம் இல்லாத உலகம் என்கிற நம் கனவை நம்மால் நனவாக்க இயலாது.

நன்கொடை நிறுவல் நிதிதான் TRFன் எதிர்காலம். நாம் நன்கொடை நிறுவல் நிதியில் முதலீடு செய்தால், ரோட்டரியன்களின் வருங்காலத் தலைமுறைகள் ரோட்டரியின் நல்ல பணியை முன்னெடுத்துச்செல்வது உறுதியாகும்.

நாம் ஒன்றாகச் சேர்ந்தால் உலகை மாற்றலாம், மாற்றுவோம். அதுதான் ரோட்டரியின் மாயம். உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் மனமார்ந்த வாழ்த்துகள். அமைதியும் மகிழ்ச்சியும் பரவட்டும்!

**பரத் பாண்ட்யா**
TRF அறங்காவலர்

Rotary PEOPLE OF ACTION

# சூரியசக்தி மூலம் வாழ்க்கையை ஒளிரச் செய்யும் மும்பை ரோட்டேரியன்கள்

ரஷீதா பகத்



*சூரிய ஒளியில் இயங்கும் விளக்கின் உதவியுடன் படிக்கும் மாணவி.*



கடந்த ஆண்டு அக்டோபர் 30 ஆம் தேதி, மும்பையில் உள்ள பிரபலமான கேட்வே ஆஃப் இந்தியாவில், “கனவுகளின் களம்: பிரகாசமான எதிர்க்காலத்துக்கான ஒரு பாதை” என்னும் தலைப்பில் கண்கொள்ளாத வியக்கத்தக்க வகையில் கலை நிகழ்வு நடைபெற்றது. இந்த பிரமிக்க வைக்கும் கண்காட்சியில் 1,996 கைவினைக் கலைஞர்களால் செய்யப்பட்ட, சூரியசக்தியால் இயங்கும் பூ விளக்குகள் (அலங்கார விளக்குகள். ஒவ்வொன்றும் நம்பிக்கை, புதுமை மற்றும் பசுமையான, நிலையான எதிர்காலத்திற்கான வாக்குறுதியை வெளிப்படுத்தும் வகையில் இடம்பெற்றன” என்கிறார் RID 3141-க்கு உட்பட்ட மும்பை ஜுஹு கடற்கரை ரோட்டரி சங்கத்தின் சேவை திட்ட இயக்குநர் லதா தேசாய்.

மகாராஷ்டிரம் மற்றும் குஜராத்தில் உள்ள ஏழைக் குடும்பத்தினர்களுக்கு சூரியசக்தி மூலம் மின்சாரம் கிடைக்கச் செய்யும் நோக்குடன், இவரது சங்கம் (இந்த சங்கத்தில் 65 உறுப்பினர்கள் இருந்தாலும் அவர்களில் பாதிக்கும் மேலானவர்கள் பெண்கள்) மக்கள் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தும் திட்டங்களைச் செயல்படுத்தி வருவதாக,ரோட்டரி செய்திக்குழுவிடம் பேசுகையில் அவர் தெரிவித்தார். மேலும் மூன்றுவிதமான முன்முயற்சிகள் மூலம் ரோட்டரி மீதான நன்மதிப்பை மேம்படுத்தும் செயல்களிலும் சங்கம் ஈடுபட்டு வருகிறது. போர்ஷே இந்தியா, லிட்டர் ஆஃப் லைட் இந்தியா அமைப்பு மற்றும் பவர் பேக் ஆகியவற்றுடன் இணைந்து மும்பையின் வரலாற்றுச் சின்னமான கேட் வே ஆஃப் இந்தியாவில் ஒரு கலை விழாவை நடத்துவது, பள்ளி குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான பயிலரங்கு மற்றும் இரண்டு மாநிலங்களில் உள்ள ஏழை பழங்குடியின மக்களுக்கு சூரிய சக்தி விளக்குகளை வழங்குவது ஆகியவை இந்த திட்டத்தில் அடங்கும்.

இந்தியாவில் மின்சார வாகனங்கள் அறிமுகமாகியுள்ள நிலையில், சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் போர்ஷே இந்தியா நிறுவனம், கேட் வே ஆஃப் இந்தியாவில் இந்த கலைவிழாவை

நடத்த முடிவு செய்தது. நிலையான எரிசக்திக்கான ஆதாரங்கள், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு இவற்றில் கவனம் செலுத்தும் விதமாக இந்த நிறுவனம் சூரியசக்தி விளக்கு என்னும் கருபொருளை கையில் எடுத்துக் கொண்டது. இதற்காக இந்த நிறுவனம் பிலிப்பின்ஸில் சூரிய ஒளி பல்புகள் (பாட்டில் பல்புகள்- இவை சூரிய ஒளிமூலம் பகல் நேரத்தில் ஒளிரச் செய்யும்- பெட்டிச் செய்தியை பார்க்கவும்) திட்டத்தை பிரபலப்படுத்தி வரும் இல்லாக் டயஸ் என்பவரைத் தொடர்பு கொண்டது. ஆனால், டயஸ் இந்தியாவில் எந்த பணியும் செய்யாததால், இந்தியாவில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் ஈடுபட்டுள்ள விராட் தோஷி என்னும் தனது நண்பரைத் தொடர்பு கொண்டு பேசினார். விராட் எனது மகனின் நண்பர் என்பதால் அவர் உடனடியாக என்னிடம் தொடர்பு கொண்டார். இந்த நிகழ்வில் ஒரு கூட்டாளியாக ரோட்டரி சங்கம் ஆர்வமாக இருக்குமா? என்று கேட்டார். சென்சார் மூலம் இயங்கும் விளக்குகள் (கையை தட்டினால் இயங்கும் விளக்குகள்) தயாரிப்பு தொடர்பாக பள்ளிக்குழந்தைகள் மற்றும் உள்ளூர் கலைஞர்களுக்கு நாங்கள் பயிலரங்குகள் நடத்தியது அவருக்குத் தெரியும் என்பதால் என்னிடம் தொடர்பு கொண்டார்.

மும்பை ஜுஹு கடற்கரை ரோட்டரி சங்கம் இதை ஒரு பெரிய வாய்ப்பாகக் கருதி கூட்டாண்மை அழைப்பை ஏற்றுக் கொண்டது. கடந்த 2024 அக்டோபரில் மும்பையில் உள்ள விலி பார்லேயில் ஒரு பள்ளியில் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு சூரியசக்தி மின் விளக்குகளின் பயன்பாடு குறித்து பயிலரங்கு நடத்தியபோது விராஜ் மற்றும் டயஸ் இருவரும் அங்கு வந்திருந்தனர். புதுப்பிக்கவல்ல எரிசக்திதான் தீர்வு என்பதை அடுத்த தலைமுறையினருக்கு வலியுறுத்தும் வகையில் இந்த பயிலரங்குக்கு எங்கள் ரோட்டரி சங்கம் ஏற்பாடு செய்திருந்தது. இந்த பயிலரங்கம் லிட்டர் ஆஃப் லைட் மற்றும் தோஷியின் பவர் பேக் நிறுவனத்துடன் இணைந்து நடத்தப்பட்டது.

சங்கத்தின் தலைவர் மன்ஸி தக்கர் கூறுகையில், “இந்த பயிலரங்கில், ஏழைக் குழந்தைகளுக்கான வித்யாநிதி பள்ளியைச் சேர்ந்த 100 மாணவர்கள் பங்கேற்றனர். அவர்களுக்கு சூரியசக்தி மின்விளக்குகள் தயாரிப்பு பற்றி கற்றுக்கொடுக்கப்பட்டது. இந்த அனுபவம் சூரிய சக்தி தொடர்பான





*RC மும்பை ஜுஹூ பீச் சமுக சேவைகள் இயக்குநர் லதா தேசாய், மாணவர்களுக்கு விளக்குகளை விநியோகித்தார்.*

தொழில்நுட்ப அறிவை வழங்கியதுடன் அல்லாமல், மாணவர்களிடம் ஒரு பொறுப்புணர்வையும் உருவாக்கியது. எங்களது மாவட்ட ஆளுநர் சேடன் தேசாய் இந்நிகழ்வில் கலந்து கொண்டு, அடுத்த தலைமுறைக்கு பிரகாசமான எதிர்காலத்தை வடிவமைப்பதில் கல்விக்கும் நிலைத்தன்மைக்கும் இடையிலான அத்தியாவசிய தொடர்பை எடுத்துரைத்தார். மேலும் இளைஞர்களை தூய்மையான, பசுமை உலகத்தின் தூதர்களாக மாற்றினார்.

கேட்வே நிகழ்ச்சிக்கு திரும்பிய லதா, "போர்ஷே இந்தியா முதலில் அதன் மின்சார வாகன மாதிரியான மக்கான் எலெக்டிக் மாதிரியை அந்த இடத்தில் வைக்க விரும்பியது. ஆனால், சமீபத்தில் மும்பையில் அரசியல்வாதி ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்தை அடுத்து பாதுகாப்பு குறித்த அச்சம் எழுந்ததால் ஆட்டோமொபைல் நிறுவனத்தால் அதுபோன்ற காட்சிக்கு அனுமதி பெறமுடியவில்லை. எனவே சுற்றுச்சூழல் பாதுகாப்பான எரிசக்தி என்னும் கருப்பொருளை விளக்கும் வகையில் 2000 சென்சார் மூலம் இயங்கும் (கையைத் தட்டினால் எரியும்) விளக்குளை கலை நுணுக்கத்துடன் காட்சிக்கு வைத்தனர். இவற்றின் விலை ரூ.3,000. மேலும் இவை உள்ளூர் கலைஞர்களால் உருவாக்கப்பட்டவை. இந்த விளக்குகள் வெறும் கலைப்படைப்புகள் மட்டுமல்ல,



**இடது:** *சோலார் ஸ்டடி விளக்குகளை அசெம்பிள் செய்ய கற்றுக்கொள்ளும் மாணவர்கள்.*

# பிளாஸ்டிக் பாட்டில்கள் முதல் களிமண் விளக்குகள் வரை

இல்லாக் டயஸ் ஒரு சுற்றுச்சூழல் ஹீரோ மற்றும் சமூக அக்கறையுள்ள தொழில்முனைவர். அவரது அரசு சாரா சேவை நிறுவனம்தான் லிட்டர் ஆஃப் லைட். "இதுவரை அவரது நிறுவனம் 3,82,000 பிலிப்பின்ஸ் மக்களுக்கு உதவியுள்ளது. மேலும் உலகம் முழுவதும் 6,90.000 பேர் இவரால் எரிசக்தி பெற்று பயனடைந்துள்ளனர்" என்று அவரது வலைத்தள தகவல்கள் தெரிவிக்கின்றன. 2002-ம் ஆண்டு பிரேசிலைச் சேர்ந்த ஆல்பிரடோ மோஸர் என்பவர் கொடுத்த யோசனையில் பிறந்ததுதான் இந்த லிட்டர் சேவை நிறுவனம்.நிலையான மின்சாரம் இல்லாத பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு பிளாஸ்டிக் பாட்டில்கள் மூலம் இயற்கை ஒளியைக் கிடைக்கச் செய்தவர் இவர். இதை அடிப்படையாக வைத்துத்தான் பின் சூரிய சக்தியில் இயங்கும் பாட்டில் பல்புகள் இல்லாக் டயஸால் உருவாக்கப்பட்டது மற்றும் பிலிப்பின்ஸில் உள்ளூர் தொழில்முனைவோரால் வர்த்தக மாதிரியாக  மாற்றப்பட்டது. தண்ணீர் நிரப்பப்பட்ட 1.5 லிட்டர் பிளாஸ்டிக் பாட்டில்கள் மூலம் (தண்ணீரில் பாசி வளர்வதைத் தடுக்க பிளீச் செய்யப்படுகிறது.) குறைவான மின்சாரம் அல்லது மின்சாரமே இல்லாத பள்ளிகள், வீடுகளில் சூரிய சக்தி மூலம் மின்சாரம் கிடைக்க பயன்படுத்தப்படுகிறது.

இந்த சூரிய சக்தி பாட்டில் பல்புகள் வீட்டின் கூரையில் பொருத்தப்பட்டு, அங்கிருந்து சூரிய ஒளி அறைக்குள் பிரதிபலிக்கச் (ஒளி விலகல் மூலம்) செய்யப்படுகிறது. இந்த திட்டத்தின் புதுமை, மலிவான பயன்பாடு, நீடித்த மற்றும் எளிதில் கிடைக்கக்கூடிய பொருள்களைப் பயன்படுத்தி பிரகாசமான இயற்கை ஒளியைப் பெறுவதாகும். இது நகர்ப்புற ஏழைகள் மலிவு விலையில், சுற்றுச்சூழல் பாதுகாப்பான முறையில் மின்சார விளக்குகளுக்குப் பதிலாக பகல் நேரத்தில் பயன்படுத்த வழிசெய்கிறது.

இந்த யோசனை நிலையானதாக வளர உதவும் வகையில், பாட்டில் பல்புகளை உள்ளூர் மக்கள் சேர்ந்து தயாரிக்கும் உள்ளூர் தொழில்முனைவோர் வர்த்தக மாதிரியை டயஸ் செயல்படுத்தினார். இதன் மூலம் அவர்கள் தங்கள் வேலைக்கு தகுந்த ஒரு சிறிய வருமானத்தை ஈட்ட முடியும்.

மும்பை ரோட்டேரியனான லதா தேசாய் கூறுகையில், டயஸ் பின்னர் சென்சார் மூலம் இயங்கும் விளக்குகளை வடிவமைத்தார். இதை எங்கள் சங்கம் பல்வேறு திட்டங்களுக்கு பயன்படுத்திக் கொண்டது. இந்த சென்சார் விளக்குகள் மூலம் சுமார் 6 மணி நேரம் மின்சாரம் பெறமுடியும். மேலும் சூரிய ஒளியில் வைக்கக்கூடிய ஒரு தட்டையும் நாங்கள் வழங்குகிறோம். அதை சூரிய ஒளியில் வைத்து  சூரிய சக்தி விளக்குகளை ரீசார்ஜ் செய்யலாம். பிளாஸ்டிக் பாட்டில்களைக் கொண்டு செயல்படுத்தும் மிகப் பெரிய திட்டத்தை செயல்படுத்துவது குறித்து நான் இல்லாக் டயஸுடன் இணைந்து பணியாற்றி வருகிறேன். மேலும் இத்திட்டத்தில் இந்தியா முழுவதும் உள்ள ரோட்டரி சங்கங்களை ஈடுபடுத்தி மாற்றத்தை உருவாக்கும் எண்ணமும் உள்ளது என்றார் லதா.



**பிலிப்பைன்ஸ் கிராமம் ஒன்றில் சோலார் பாட்டில் பல்பு பொருத்தப்பட்டுள்ளது.**



சுற்றுச்சூழல் விழிப்புணர்வின் வெளிப்பாடாகவும் இருந்தன. இது கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் பதிவுசெய்யப்பட்டது. இது உலகின் கவனத்தை ஈர்த்தது. புதுப்பிக்கவல்ல எரிசக்திக்கு ஒரு சான்றாகவும், ஒவ்வொரு சிறிய அடியும் ஒரு பெரிய நிலையான உலகத்துக்கு பங்களிக்க முடியும் என்பதை நினைவுபடுத்தும் வகையிலும் இருந்தது” என்றார். 2026–27 ஆண்டுக்கு சங்கத்தின் தலைவராகவும் லதா தேர்வுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த நிகழ்வில் 15 மாணவர் களுடன் எங்கள் சங்கத்தைச் சேர்ந்த 15 ரோட்டரி உறுப்பினர்களும் பங்கேற்றது பெருமையாக இருந்தது. “இந்த நிகழ்வு பற்றிய போர்ஷே நிறுவனத்தின் ஆவணப் படம் பல்வேறு இணையதளங்களிலும், சமூக வலைத்தளங்களிலும், ஊடகங்களிலும் வெளியானது ரோட்டரி மீது நன்மதிப்பை உயர்த்துவது போல் அமைந்திருந்தது. அந்த நிறுவனத்தின் சந்தைப் படுத்துதல் பிரிவு தலைவர் ஜெர்மனியிலிருந்து வந்து இந்த நிகழ்வில் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இந்த விளக்குகள் களிமண்ணால் தயாரிக்கப்பட்டது. மேலும் இவற்றை தயாரித்தவர்கள் பெரும்பாலும் பெண் கலைஞர்கள். அதுமட்டுமல்ல, அவர்கள் எங்களை விநியோக கூட்டாளர்களாகவும் தேர்ந்தெடுத்தனர்”.

இந்த விளக்குகளைத் தயாரிக்கும் திட்டத்துக்காக நிறுவனம் ரூ.58.95 லட்சம் வரை செலவிட்டுள்ளது. எங்கள் சங்கம் போக்குவரத்து மற்றும் பயிற்சிக்காக ரூ.80,000 நிதி திரட்டியது. மகாராஷ்டிரம் மற்றும் குஜராத்தில் பழங்குடியினர் பகுதியில் ரூ.41 லட்சம் மதிப்புள்ள விளக்குகளை விநியோகிக்கும் பொறுப்பையும் அது ஏற்றுக்கொண்டது. இந்த திட்டத்தைச் செயல்படுத்த மூன்று மாதங்களுக்கு மேல் ஆனது. மீதமுள்ள 100 விளக்குகள் நாங்கள் இணைந்து செயல்படும் நிறுவனத்தின் 11–12-ம் வகுப்பு மாணவர்களுக்கு விநியோகிக்கப்படும். அவர்கள் எல்லோரும் குடிசைப் பகுதியில் வசிக்கின்றனர். எனவே அவர்களுக்கு சூரியசக்தி விளக்கு தேவைப்படுகிறது. மேலும் அவர்கள் மின்சாரவியல் படிப்பும் படித்து வருகின்றனர். எனவே அவர்களுக்கு சூரிய சக்தி பற்றி கற்றுக்கொடுப்பது முக்கியமானது” என்று அவர் மேலும் கூறினார்.

மின்சாரம் பற்றாக்குறையாக உள்ள பகுதிகளில் சங்க உறுப்பினர்கள் ரூ.48 லட்சம் மதிப்புள்ள சூரிய சக்தி விளக்குகளை விநியோகம் செய்தது தொடர்பான விவரங்களை லதா பகிர்ந்து கொண்டார். முதல் கட்ட விநியோகம், மகாராஷ்டிர மாநிலம், பால்கர் மாவட்டத்தில் ஹலோலி கிராமத்தில் உள்ள சாய் பாபா வித்யாலயாவில் நடந்ததாகக் கூறினார். சங்கத்தின் தலைவர் மான்சி மேலும் கூறுகையில், “இது மலை அடிவாரத்தில் அமைந்துள்ள சிறிய

கிராமமாகும். மும்பையிலிருந்து மூன்று மணிநேர பயண தூரத்தில் உள்ளது. இங்கு அடிக்கடி மின்சாரம் தடைபடுகிறது. மேலும் மழைக்காலத்தில் மின்சார விநியோகம் பாதிக்கப்படுகிறது” என்றார்.

குஜராத்தின் வதோதராவில் உள்ள ஒரு கிராமத்தில் ஒரு ஆசிரமத்தில் 75 விளக்குகள் கொண்ட ஒரு தொகுப்பு விநியோகிக்கப்பட்டது. அங்கு அடிக்கடி ஏற்படும் மின் தடை மற்றும் இருள் காரணமாக சமீபத்தில் ஆசிரமத்தில் இருந்த ஒருவரை விஷப்பாம்பு கடித்துவிட்டது.

ரோட்டரியில் சேருவதற்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே லதா, ஏராளமான சமூக சேவையில் ஈடுபட்டவர். “எங்கும் மின்சாரம் தேவைப்படுவதால் இந்த இடங்கள் கடின உழைப்பிற்கு பிறகே தேர்ந்தெடுக்கப்பட்டன. இதுபோன்ற பல பகுதிகளை நான் பார்வையிட்டுள்ளேன். தேவை எங்கு அதிகம் உள்ளதோ அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்துள்ளோம். மேலும் மாணவர்களின் படிப்புக்கு வெளிச்சம் முக்கியம் என்பதால் அவர்களுக்கு சூரியசக்தி மின்சாரம் கிடைப்பதை உறுதிசெய்கிறோம். பால்கரில் உள்ள தம்சாய் கிராமத்தில் மின்தடை என்பது சர்வசாதாரணம். அதனால் அங்கு வசிக்கும் உள்ளூர் மக்களுக்கு கூடுதலாக 27 சூரிய சக்தி விளக்குகளை விநியோகித்தோம். இந்த திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்த மனோர் ஹைவே ரோட்டரி சங்கத்தின் ஆதரவு முக்கியமாக இருந்தது.

“சூரிய சக்தி விளக்குகள் வெறும் வெளிச்சம் தரும் விளக்காக இல்லாமல், குழந்தைகள் படிக்கவும், குடும்பத்தினர் அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபடவும், மின்சாரம் ஒழுங்கற்ற நிலையில் இருக்கும் போது சமூகங்கள் செழிக்கவும் ஆதாரமாக இருந்துள்ளது” என்று அவர் மேலும் கூறினார். இந்த வசதியைப் பெற்றவர்களும் பள்ளி முதல்வரும் மகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்தனர். மேலும் எங்களது இந்த முயற்சி ஆழமான தாக்கத்தை அடிக்கோடிட்டு காட்டியது.

மான்சி முடிவாக கூறுகையில், “போர்ஷே நிறுவனத்தின் ஆவணப்படம், ஏழை மக்களின் வாழ்க்கையை மாற்றுவதற்கான RCBJB-இன் முயற்சிகளை படம்பிடித்து காட்டுவதுபோல் இருந்தது. நிலைத்தன்மை என்னும் செய்தியை நேர்மறையான முறையில் வெகுதூரத்திற்கு கொண்டு சென்றது. நிலையான தீர்வுகள் மூலம் சமூகத்தை மேம்படுத்துவதற்கான எங்கள் அர்ப்பணிப்பு உறுதியாக உள்ளது. போர்ஷே, லிட்டர் ஆஃப் லைட் மற்றும் பவர் பேக் நிறுவனங்களின் கூட்டாண்மை மிகவும் மீள்தன்மை கொண்ட, சுற்றுச்சூழல் உணர்வுள்ள எதிர்காலத்தை உருவாக்குவதற்கான பயணத்தில் ஒரு வரையறுக்கப்பட்ட தருணத்தை குறிக்கிறது. கூட்டுச் செயல்பாடு, சலனமில்லாத அர்ப்பணிப்பு மற்றும் பிரகாசமான எதிர்காலம் என்கிற கண்ணோட்டம் மூலம் எங்கள் சங்கம் வாழ்க்கையை ஒளிரச் செய்கிறது.■




Your Pathway to Medicine Starts at
Xavier University School of Medicine
& KLE Belgaum
6 Years
Pre-Med to Doctor of Medicine /
Doctor of Veterinary Medicine Programme
Empathy in Action:
Your Medical Journey at
XUSOM
Healing Together:
The Future of Animal Care at
XUSOVM
Register for our Webinar
Admission open for September 2025
Xavier Students are eligible for H1/J1 Visa Programme
To Apply Visit:
application.xusom.com
admissions@xusom.com
WhatsApp
+1 516-927-0418

ADVT.

# உறுப்பினர் வளர்ச்சி மூலம் வலிமையான ரோட்டரியை உருவாக்குதல்

ஜெய்ஸ்ரீ

“நல்லதை நினையுங்கள், மக்களுக்கு நல்லது செய்யுங்கள்,” என்று RI இயக்குனர் எலெக்ட் M முருகானந்தம், தமிழ் கவிஞர் மகாகவி பாரதியாரை மேற்கோள் காட்டினார். புவனேஸ்வரில் நடைபெற்ற திஷா என்ற மூன்று நாள் இலக்கு நிர்ணய பயிற்சி முகாமில் மண்டலங்கள் 5 மற்றும் 6-ன் வருங்கால மாவட்ட மற்றும் மண்டல தலைவர்களுடன் பேசிய அவர், இதை 2025–26 ரோட்டரி ஆண்டுக்கான RIPE மரியோ டி கேமார்கோவின் நல்லிணக்கத்திற்காக ஒன்றுபடுவோம் (Unite for Good) என்ற செய்தியுடன் தொடர்புபடுத்தினார்.

முருகனந்தம், ஆளுநராக இருப்பது எளிதான விஷயம் அல்ல என்றும், DGN, DGE, DG ஆகியவற்றுக்காக 365 நாட்கள் மற்றும் IPDG-ஆக 180 நாட்கள் என மொத்தம் 1,500 முழுநேரப் பணிநாட்கள் இந்த பொறுப்புக்கு தேவைப்படுகிறது என்றும் வலியுறுத்தினார். “இப்படியான அர்ப்பணிப்புக்கு பிறகு, உங்கள் மாவட்டத்தை எதிர்மறையான தாக்கத்துடன் விட்டுச் செல்லாதீர். வளர்ச்சியுள்ள, புத்துணர்ச்சியுள்ள சங்கங்களுடனும் வலுவான ரோட்டரியை உருவாக்கி ஒரு பாரம்பரியத்தை விட்டுச்செல்லுங்கள்” என்றார்.

இந்தியாவில் ரோட்டரி அறக்கட்டளைக்கான நன்கொடைகளில் மகத்தான முன்னேற்றம் இருந்தாலும், உறுப்பினர் எண்ணிக்கை வளரவில்லை என்று அவர் சுட்டிக்காட்டினார். இந்தியா, இலங்கை, மாலத்தீவுகள், நேபாளம் மற்றும் பூட்டான் ஆகியவற்றை உள்ளடக்கிய மண்டலங்கள் 5 மற்றும் 6, கடந்த ஐந்து ஆண்டுகளில் உறுப்பினர் வளர்ச்சியில் தேக்கமடைந்துள்ளது. RIDE K P நாகேஷுடன் இணைந்து தயாரிக்கப்பட்ட RAG பகுப்பாய்வை அவர் வெளியிட்டார். அதில் 25 உறுப்பினர்களுக்கும் குறைவாக உள்ள சங்கங்களில் 42 சதவீதம் சிவப்பு பிரிவிலும், 25–50 உறுப்பினர்கள் உள்ள சங்கங்கள் 36 சதவீதம் மஞ்சள் பிரிவிலும், 50க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ள சங்கங்கள் 22 சதவீதம் பச்சை பிரிவிலும் உள்ளன.

சங்க அளவில் உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரிப்பதன்



RIDEs K P *நாகேஷ் மற்றும்* M *முருகானந்தம்,*



இடமிருந்து: PRID A S *வெங்கடேஷ்,* RIDE *முருகானந்தம்,*
PRIP *சேகர் மேத்தா,* RIDE *நாகேஷ் மற்றும் அறங்காவலர் பரத் பாண்டியா.*

மூலம், சிவப்பிலிருந்து மஞ்சள், மஞ்சளிலிருந்து பச்சை என சங்கங்களை முன்னேற்ற DGEக்களை அவர் கேட்டுக்கொண்டார். இதற்காக, உதவி ஆளுநர்களின் திறனைப் பயன்படுத்த அவர் முன்மொழிந்தார். ஒவ்வொரு மண்டலத்திலும் 600 AG-க்கள் உள்ளனர். ஒவ்வொரு AG-யும் ஒரு ரோட்டரி சங்கத்தை உருவாக்கி, ஒரு பெரிய நன்கொடை யாளரை அடையாளம் கண்டால், நாம் 600 புதிய சங்கங்களையும், பவுண்டேஷன் நன்கொடைகளில் கணிசமான வளர்ச்சியையும் காண்போம் என்று பரிந்துரைத்தார்.

அடுத்து ரோட்டராக்ட் மற்றும் இன்டராக்ட் அமைப்புகளை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தினார். இதற்காக 1:2:3 என்ற வியூகத்தை முன்வைத்தார் - ஒவ்வொரு ரோட்டேரியரும் இரண்டு ரோட்டராக்டர்களையும் மூன்று இன்டராக்டர்களையும் சேர்க்க வேண்டும்; மேலும் ஒவ்வொரு ரோட்டரி சங்கமும் குறைந்தது இரண்டு ரோட்டராக்ட் மற்றும் மூன்று இன்டராக்ட் சங்கங்களை உருவாக்க வேண்டும். "மண்டலம் 5-ல் 72 சதவீத சங்கங்களும், மண்டலம் 6-ல் 73 சதவீத சங்கங்களும் ஒரு ரோட்டராக்ட் சங்கத்தைக் கூட உருவாக்கவில்லை; மேலும் 70 சதவீத சங்கங்கள் இன்டராக்ட் சங்கங்களை நிறுவவில்லை" என்று குறிப்பிட்டு, ரோட்டராக்ட் மற்றும் இன்டராக்ட் அமைப்புகளின் வளர்ச்சியை முன்னுரிமைப்படுத்த தலைவர்களை வலியுறுத்தினார். 50 வயதிற்குப் பிறகு, நம் வாழ்வில் இரண்டு விஷயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன - நமது ஆரோக்கியம், நமது குழந்தைகள். உங்கள் குழந்தைகளை வருங்கால ரோட்டராக்டர்களாகவும் இன்டராக்டர்களாகவும் பாருங்கள். “இதை ஒரு முன்னுரிமையாக ஆக்குங்கள்” என்று 16 வயதில் ரோட்டராக்டராக தனது ரோட்டரி பயணத்தைத் தொடங்கிய முருகானந்தம் கூறினார்.

மற்றொரு கவலைக்குரிய போக்கு, மண்டலங்கள் 5 மற்றும் 6 சமீபத்திய ஆண்டுகளில் 32,000 ரோட்டராக்டர்களை இழந்துள்ளன. கவனமான முயற்சியின் மூலம், அடுத்த ஆண்டில் மட்டும் இந்தியா 25,000 ரோட்டராக்டர்களையும் இன்டராக்டர்களையும் மீண்டும் பெறமுடியும் என்று அவர் கூறினார்.

TRF இலக்குகள் குறித்து பேசிய அவர், போலியோ ஒழிப்புக்கு தொடர்ச்சியான கவனம் தேவை என்பதை மீண்டும் வலியுறுத்தினார். கடந்த ஆண்டு பாகிஸ்தானில் 74 வழக்குகளும், ஆப்கானிஸ்தானில் 25 வழக்குகளும் பதிவாகியுள்ள நிலையில், இந்த ஆண்டு இதுவரை ஏழு வழக்குகள் பதிவாகியுள்ளன. இந்த நாடுகளுடனான இந்தியாவின் அருகாமை தீவிர விழிப்புணர்வு மற்றும் தடுப்பூசி முயற்சிகளை அவசியமாக்குகிறது. மாவட்டங்கள் மில்லியன் மற்றும் பன்மில்லியன் டாலர் நன்கொடையாளர்களாக இருப்பதை உறுதிசெய்ய AG-க்களை ஈடுபடுத்த வேண்டும் என்றும் அவர் பிரதிநிதிகளை வலியுறுத்தினார். தனது பதவிக்காலத்தில் இரண்டு மண்டலங்களில் இருந்து 50 AKS உறுப்பினர்கள், 50 எண்டோவ் மெண்ட்கள் மற்றும் 100 சதவீத வருடாந்திர மற்றும் போலியோ நிதி நன்கொடைகளைப் பார்க்க விரும்புவதாக அவர் கூறினார்.

உறுப்பினர் வளர்ச்சிக்கான முருகானந்தத்தின் உத்திகளுடன் நாகேஷ் மேலும் சிலவற்றைச் சேர்த்தார். அவர் மிஷன் 2.25



இடமிருந்து: PRID C *பாஸ்கர், அறங்காவலர் பாண்டியா மற்றும்* RIDE *நாகேஷ்.*

லட்சம் என்ற லட்சியத் திட்டத்தை வலியுறுத்தினார். இதன் மூலம் 365 நாட்களில் 365 புதிய ரோட்டரி சங்கங்கள் தொடங்கப்படும் – ஒரு நாளைக்கு ஒரு சங்கம். இந்த இரு இயக்குநர்களும் முன்னெடுக்கும் இந்த முயற்சி, ஒவ்வொரு சங்கத்திலும் சராசரியாக 30 உறுப்பினர்களைச் சேர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. “பிரிப்பதன் மூலம் பெருக்குங்கள்; பெருக்குவதன் மூலம் வளருங்கள். நமது உறுப்பினர் எண்ணிக்கை அதிகரிப்பது மாவட்டங்களின் பிரிவினைக்கு வழிவகுக்கும், இது இறுதியில் நம் அனைவருக்கும் நல்லது” என்றார்.

அவரது அடுத்த சூத்திரம் CSR கூட்டாண்மைகளை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தியது. “ஒவ்வொரு சங்கமும் ஒரு CSR கூட்டாண்மையை கூடப் பெற்றால், நமது சேவைத் திட்டங்களின் அளவும் தாக்கமும் பன்மடங்கு அதிகரிக்கும், மேலும் ரோட்டரியின் செல்வாக்கும் மேம்படும்” என்று குறிப்பிட்டார்.

உலகளாவிய சூழ்நிலை மாறும்போது, TRF புதிய சவால்களை எதிர்கொள்கிறது. இதற்கு புதுப்பிக்கப்பட்ட கவனம் மற்றும் மூலோபாய நடவடிக்கை தேவை,” என்று TRF அறங்காவலர் பரத் பாண்டியா கூறினார். மேலும், வரலாற்று ரீதியாக போலியோ திட்டத்திற்கு ஆண்டுதோறும் சுமார் 250 மில்லியன் டாலர்களை வழங்கிய அமெரிக்க அரசாங்கம், நிதியை குறைத்து CDC-யின் அரசாங்கங்களுடனான தொடர்புகளையும் கட்டுப்படுத்தியுள்ளது. USAID மூடப்பட்டது மற்றும் WHO-க்கான ஆதரவு குறைக்கப்பட்டது போலியோ கண்காணிப்பு முயற்சிகளை மேலும் சிரமப்படுத்தியுள்ளன. போலியோபிளஸ் சொசைட்டிகளில் உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரிக்கவும், போலியோ நிதிக்கு தாராளமாக பங்களிக்கவும் அவர் பிரதிநிதிகளை வலியுறுத்தினார்.

அடுத்து, ரோட்டரியின் சமாதான திட்டங்கள் மற்றும் ப்ரோக்ராம் அஃப் ஸ்கேல்ஸ் குறித்து அவர் எடுத்துரைத்தார். ஆசியாவிற்கு ஒரு மைல்கல்லாக, எட்டாவது சமாதான மையம் விரைவில் புனேவில் உள்ள சிம்பயோசிஸ் சர்வதேச பல்கலைக்கழகத்தில் நிறுவப்படும். நான்காவது ப்ரோக்ராம் அஃப் ஸ்கேல்ஸ் RC டெல்லி பிரீமியருக்கு வழங்கப்பட்டது. இந்த திட்டம் உத்தரப்பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் மகாராஷ்டிராவின் கிராமப்புறங்களில் தண்ணீர் அணுகலையும், விவசாய நிலைத்தன்மையையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்திற்கு, ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டம் புதிய உலகளாவிய கூட்டாளராக இணைந்துள்ளது.

2021-ல் சேகர் மேத்தாவின் தலைமையில் தொடங்கப்பட்டதிலிருந்து இந்தியாவில் CSR மானியத் திட்டம் "குறிப்பிடத்தக்க வேகத்தைப் பெற்றுள்ளது. 2021-ல் $2.8 மில்லியனிலிருந்து 2023-ல் $8.1 மில்லியனாக உயர்ந்துள்ளோம். இந்த ஆண்டு இறுதிக்குள் $10 மில்லியனைத் தாண்டுவோம் என்று எதிர்பார்க்கப் படுகிறது. ஏற்கனவே இந்த ரோட்டரி ஆண்டில் 145 கார்ப்பரேட் கூட்டாளர்களுடன் $7.2 மில்லியனைத் தாண்டியுள்ளோம். ஆனால் 6–7 மாவட்டங்கள் மட்டுமே CSR மானியங்களை தீவிரமாகப் பின்தொடர்கின்றன. CSR வாய்ப்புகளைப் பயன்படுத்தி தாக்கத்தை அதிகரிக்க அனைத்து மாவட்டங்களும் கார்ப்பரேட்களுடன் ஈடுபட வேண்டும்" என்று பாண்டியா குறிப்பிட்டார்.

50 சதவீத ரோட்டேரியர்கள் மட்டுமே மீண்டும் நன்கொடையளிப்பவர்கள் என்பதை சுட்டிக்காட்டிய அவர், அனைத்து ரோட்டேரியர்களையும் TRFக்கு பங்களிக்க ஊக்குவிக்க வேண்டும் என்று பிரதிநிதிகளை வலியுறுத்தினார். "அறக்கட்டளை ஒரு வரலாற்று மைல்கல்லை எட்டும் தருவாயில் உள்ளது – 2025-ம் ஆண்டிற்குள் $2.025 பில்லியனை எட்டுவது. ஜனவரி 31, 2025 நிலவரப்படி, இந்த லட்சிய இலக்கை அடைய நாம் வெறும் $99 மில்லியன் மட்டுமே குறைவாகவே உள்ளோம். அறக்கட்டளையின் எண்டோவ்மென்ட் நிதி ஜனவரி 1, 2024 முதல் ஜனவரி 31, 2025 வரை $249 மில்லியன் என்ற அசாதாரண வளர்ச்சியைப் பெற்றுள்ளது. இலக்கை அடைய, நாம் நன்கொடைகளை வழங்கக்கூடிய தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுடன் உறவுகளை அடையாளம் காணவேண்டும்" என்றார்.

PDG தேபாசிஷ் மிஸ்ரா இந்த நிகழ்வின் தலைவராக இருந்தார். இதில் சில DRR-கள் உட்பட 256 வருங்கால தலைவர்கள் பங்கேற்றனர். மேலும் பல அமர்வுகள் பல்வேறு ரோட்டரி அம்சங்கள் குறித்த அவர்களின் அறிவை வளப்படுத்தியதுடன், வரவிருக்கும் ரோட்டரி ஆண்டுக்கான இலக்குகளை நிர்ணயிக்கவும் உதவியது.

படங்கள்: ஜெய்ஸ்ரீ

# District Wise TRF Contribution

As on March 31, 2025

Source: RI South Asia Office

Annual Fund (AF) includes SHARE, AoF and World Fund.
PolioPlus excludes Bill and Melinda Gates Foundation.

(in US Dollars)

| District Number | | Annual Fund | PolioPlus Fund | Endowment Fund | Other Funds | Total Contribution |
|---|---|---|---|---|---|---|
| 2981 | | 59,998 | 14,157 | 104 | 38 | 74,296 |
| 2982 | | 44,281 | 12,631 | 10,421 | 87,188 | 154,520 |
| 3000 | | 47,590 | 24,015 | 1,000 | 342,578 | 415,183 |
| 3011 | | 95,654 | 6,377 | 70,480 | 1,475,776 | 1,648,286 |
| 3012 | | 10,318 | 151 | 1,500 | 1,122,688 | 1,134,657 |
| 3020 | | 103,390 | 40,135 | 96,977 | 151,372 | 391,874 |
| 3030 | | 56,624 | 4,983 | 14,563 | 210,975 | 287,145 |
| 3040 | | 5,142 | 257 | 0 | 89,183 | 94,582 |
| 3053 | | 59,371 | 700 | 0 | 83,524 | 143,595 |
| 3055 | | 45,393 | 4,267 | 2,071 | 68,208 | 119,939 |
| 3056 | | 28,041 | 2,056 | 60 | 133 | 30,290 |
| 3060 | | 173,877 | 6,399 | 13,775 | 658,381 | 852,431 |
| 3070 | | 27,114 | 1,623 | 0 | $0 | 28,736 |
| 3080 | | 23,220 | 9,617 | 17,384 | 9,561 | 59,781 |
| 3090 | | 16,851 | 109 | 18,942 | $0 | 35,902 |
| 3100 | | 30,391 | 5,445 | 0 | 51,677 | 87,513 |
| 3110 | | 17,693 | 1,477 | 4,164 | 426,070 | 449,403 |
| 3120 | | 58,988 | 1,211 | 8,337 | 65,312 | 133,848 |
| 3131 | | 539,693 | 20,812 | 142,420 | 1,427,359 | 2,130,284 |
| 3132 | | 61,236 | 2,565 | 23,339 | 78,698 | 165,838 |
| 3141 | | 475,851 | 36,936 | 204,941 | 2,745,166 | 3,462,894 |
| 3142 | | 404,265 | 56,723 | 50,060 | 582,056 | 1,093,103 |
| 3150 | | 149,922 | 31,809 | 144,486 | 907,465 | 1,233,682 |
| 3160 | | 22,798 | 3,370 | 1,000 | 5,787 | 32,955 |
| 3170 | | 49,252 | 22,872 | 58,863 | 317,540 | 448,528 |
| 3181 | | 135,296 | 16,945 | 77 | 0 | 152,318 |
| 3182 | | 105,766 | 4,104 | 12 | 29,270 | 139,151 |
| 3191 | | 70,703 | 8,226 | 158 | 284,506 | 363,593 |
| 3192 | | 123,120 | 9,941 | 23,500 | 342,488 | 499,049 |
| 3201 | | 87,040 | 35,187 | 32,370 | 782,895 | 937,492 |
| 3203 | | 48,977 | 13,024 | 16,034 | 134,621 | 212,657 |
| 3204 | | 40,102 | 14,874 | 48,001 | 12,545 | 115,521 |
| 3211 | | 29,909 | 4,284 | 0 | 29,670 | 63,863 |
| 3212 | | 291,823 | 21,170 | 103,500 | 170,187 | 586,679 |
| 3231 | | 16,723 | 7,620 | 68,192 | 43,132 | 135,667 |
| 3233 | | 63,748 | 20,480 | 5,199 | 461,047 | 550,474 |
| 3234 | | 125,386 | 30,165 | 95,746 | 970,475 | 1,221,773 |
| 3240 | | 192,038 | 30,885 | 50,000 | 203,966 | 476,889 |
| 3250 | | 147,544 | 5,661 | 19,231 | 175,965 | 348,400 |
| 3261 | | 5,081 | 632 | 8,335 | 10,878 | 24,926 |
| 3262 | | 75,224 | 2,356 | 2,307 | 15,643 | 95,529 |
| 3291 | | 147,532 | 13,748 | 193,500 | 150,830 | 505,610 |
| 3220 | Sri Lanka | 61,508 | 4,803 | 5,052 | 23,920 | 95,283 |
| 3271 | Pakistan | 9,775 | 40,036 | 0 | 10,500 | 60,311 |
| 63 | (former 3272)* | 6,757 | 2,319 | 0 | 0 | 9,076 |
| 64 | (former 3281)* | 6,259 | 2,916 | 1,000 | 1,050 | 11,225 |
| 65 | (former 3282)* | 1,021 | 1,221 | 0 | 0 | 2,242 |
| 3292 | | 93,601 | 26,079 | 90,026 | 125,311 | 335,017 |

*** Undistricted**

# உறுப்பினர் இல்லாமல், ரோட்டரி இல்லை

ஜெய்ஶ்ரீ

“உறுப்பினர் இல்லையென்றால் ரோட்டரி இல்லை. ரோட்டரியின் இருப்புக்கு உறுப்பினர்துவம் தான் மையம். சேவைத் திட்டங்கள் இல்லாவிட்டாலும் நாம் ஒரு அமைப்பாக இருப்போம், ஆனால் உறுப்பினர் இல்லாமல் ரோட்டரி இல்லை” என்று புவனேஸ்வரில் நடைபெற்ற திஷா நிகழ்ச்சியில் புதிதாகப் பொறுப்பேற்கவுள்ள தலைவர்களுக்கு உரையாற்றிய PRIP சேகர் மேத்தா கூறினார். இந்த நிகழ்ச்சி RIDE-க்கள் M முருகானந்தம் மற்றும் K P நாகேஷ் ஆகியோரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. உறுப்பினர் வளர்ச்சியில் நிலையாக கவனம் செலுத்தப்படாததை மேத்தா குறிப்பிட்டார். TRF-க்கான நன்கொடைகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படும் நிலையில், உறுப்பினர் வளர்ச்சி முயற்சிகள் பெரும்பாலும் புறக்கணிக்கப் படுகின்றன. “மாவட்ட ஆளுநர்கள், உதவி ஆளுநர்கள் மற்றும் சங்கத்தலைவர்கள் நிதி உறுதிமொழிகளை அயராது பின்தொடர்வது போலவே, உறுப்பினர் வளர்ச்சிக்கும் இதே அணுகுமுறை பயன்படுத்தப்பட வேண்டும்” என்றார்.

நிதி திரட்டுவதில் ரோட்டரியின் வெற்றி வியக்கத்தக்கது. போலியோ ஒழிப்புக்காக $120 மில்லியன் திரட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டபோது, ரோட்டரி $242 மில்லியன் திரட்டி அதை மிஞ்சியது. அதேபோல், அறக்கட்டளைத் தலைவராக இருந்த கல்யாண் பானர்ஜி $300 மில்லியன் என்ற ஒரு பெரிய இலக்கை நிர்ணயித்தபோது, அந்த இலக்கும் எட்டப்பட்டது என்று அவர் குறிப்பிட்டார். “TRF-க்காக நாம் நிர்ணயித்த எந்த இலக்காக இருந்தாலும், 99 சதவீத நேரங்களில் நாம் வெற்றி பெற்றுள்ளோம். ஆனால் ஒவ்வொரு முறை நாம் உறுப்பினர் சேர்க்கைக்கு இலக்கு நிர்ணயிக்கும்போதும் தோல்வியடைந்துள்ளோம்.” ‘ஒவ்வொருவரும் ஒருவரை அழைத்து வாருங்கள்’ என்ற தனது தலைவர் பதவிக்கால வலியுறுத்தலை அவர் நினைவுகூர்ந்தார், ஒவ்வொரு சங்கத்தலைவரும் குறைந்தது ஒரு தரமான உறுப்பினரை அறிமுகப்படுத்தி அவர்களைத் தக்கவைக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

வளர்ச்சியை எளிதாக்க, மாவட்டங்களைப் பிரிப்பது அவசியம் என்று மேத்தா கூறினார். இந்தியா தற்போது உலகளாவிய ரோட்டரி உறுப்பினர்களில் 15 சதவீதத்தை பங்களிக்கிறது, ஆனால் அதன் விகிதாசார பங்கைக் காட்டிலும் மிகக் குறைவான 42 மாவட்டங்களை மட்டுமே கொண்டுள்ளது.



PRIP *சேகர் மேத்தா*




RIDE M முருகானந்தம், சுமதி, திஷா தலைவர் PDG டெபாசிஷ் மிஸ்ரா மற்றும் அபர்ணா ஆகியோர் பார்த்துக் கொண்டிருக்க, PRID C பாஸ்கர் மற்றும் RIDE K P நாகேஷ் விளக்கை ஏற்றுகிறார்கள்.

'பிரித்து வளருங்கள்' என்பது ஒரு கருத்து மட்டுமல்ல; அது ஒரு அவசியம். "அதிக மாவட்டங்கள் என்றால் COL-இல் அதிக பிரதி நிதித்துவம், இது உலகளாவிய அளவில் இந்தியாவின் குரல் கேட்கப்படுவதை உறுதிபடுத்தும். மாவட்டங்களைப் பிரிப்பதற்கு குறைந்தபட்சம் 60 சதவீத சங்கங்கள் தேவையான உறுப்பினர் தகுதிகளை பூர்த்தி செய்வதை உறுதி செய்யுங்கள்" என்று அவர் கூறினார், மேலும் உறுப்பினர் வளர்ச்சி மற்றும் TRF-க்கான RIDE-க்களின் லட்சிய இலக்குகளைப் பாராட்டினார்.

சுவாரஸ்யமான வெற்றி கதைகள் மூலம், ஒரு அமைப்பின் தொலைநோக்கு மற்றும் இலக்குகளை அடைவதில் ஒரு தலைவரின் பங்கை PRID C பாஸ்கர் விளக்கினார். தலைவர்கள் கலைஞர்கள் அல்ல; அவர்கள் வழிகாட்டிகள். மற்றவர்களை அவர்களின் பங்கை ஏற்றுக் கொள்வதற்கு வழிகாட்டுவது, ஊக்கப் படுத்துவது மற்றும் அதிகாரமளிப்பது அவர்களின் பங்கு என்று அவர் கூறினார். மாவட்ட பயிற்சித் திட்டங்கள் வழக்கமான அமர்வுகளைத் தாண்டி, சங்கத்தலைவர்களுக்கு திறம்பட வழிகாட்டத் தேவையான திறன்களையும் மனநிலையையும் வழங்க வேண்டும். 2017-ல் திஷாவைத் தொடங்கியதை அவர் நினைவு கூர்ந்தார். "அதன் முதல் தலைவரான அறங்காவலர் பரத், அதற்கு திஷா என்று பெயரிட்டார், இதன் பொருள் வழிகாட்டுதல், தலைமை மற்றும் நாம் பின்பற்ற வேண்டிய பாதை."

"உங்கள் சங்கத்தலைவர்களுடன் வலுவான உறவுகளை உருவாக்குங்கள். அவர்களிடம் இரக்கத்துடன் இருங்கள், அவர்களின் கவலைகளைக் கேளுங்கள், அவர்கள் ஆதரவாகவும் ஊக்கமாகவும் உணரும் ஒரு சூழலை உருவாக்குங்கள்" என்று புதிதாகப் பொறுப்பேற்கவுள்ள தலைவர்களுக்கு பாஸ்கர் அறிவுறுத்தினார்.

"கடந்த பத்தாண்டுகளில் ரோட்டரியின் வளர்ச்சி ஆண்டுக்கு சராசரியாக 400 புதிய உறுப்பினர்கள் மட்டுமே, இது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல" என்று அவர் குறிப்பிட்டார். "இன்று இந்தியா வளரும் பொருளாதாரம் அல்ல. ஆண்டுதோறும் 7 சதவீத நிலையான வளர்ச்சி, மிகச் சிறிய விற்பனையாளர்கள் கூட டிஜிட்டல் மயமாக்கலை அடைவது, உள்கட்டமைப்பு, தொழில் மற்றும் விவசாயத்தில் முன்னேற்றம், விண்வெளியில் நமது வெற்றிகரமான முயற்சிகள் மற்றும் சீராக உயரும் தனிநபர் வருமானம் ஆகியவை இந்தியாவின் முன்னேற்றத்தைக் காட்டுகின்றன. இந்த திறனைப் பயன்படுத்த, சங்கத்தலைவர்களுக்கு அதிகாரமளிக்கப்பட வேண்டும், ஊக்கப்படுத்தப்பட வேண்டும் மற்றும் திறம்பட பயிற்சி அளிக்கப்பட வேண்டும்."

"வெற்றி கடினமாக உழைப்பதில் மட்டுமல்ல, புத்திசாலித்தனமாக உழைப்பதிலும் உள்ளது," என்று PRID A S வெங்கடேஷ் கூறினார், மேலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சி மற்றும் தாக்கத்தை அடைய மூன்று முக்கியமான அணுகுமுறைகளை பட்டியலிட்டார் – சரியான கேள்விகளைக் கேட்பது, பெரிய கனவு காண்பது மற்றும் ஒத்துழைப்பை வளர்ப்பது. தனிப்பட்ட கதைகள் மூலம் பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்து, "நீங்கள் எதை அடைய விரும்பினாலும், அது உங்கள் மனதில் தொடங்குகிறது. இது வளங்கள், திறன்கள் அல்லது நேரம் பற்றியது அல்ல; இது நம்பிக்கை



RIDE *முருகானந்தம் மற்றும் சுமதி* PRID A S *வெங்கடேஷுடன்.*

பற்றியது. ரோட்டரியில் சாத்தியமற்ற இலக்குகளை எதிர்கொள்ளும்போது, குறைந்தபட்ச எதிர்ப்பின் பாதையை எடுத்து இது சாத்தியமில்லை என்று சொல்வது எளிது. ஆனால் நமது திறனை நாம் நம்பினால், அதை நாம் சாதிக்க முடியும்."

'ரோட்டரியில் நாம் ஏன் ஒரே விஷயங்களைத் திரும்பத் திரும்பக் கற்றுக்கொள்கிறோம்' என்று சில ரோட்டேரியர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளித்த அவர், ஒரே கருத்துகளை மீண்டும் மீண்டும் கற்றுக்கொள்வது தேவையற்றது அல்ல என்றார். "அது நம் திறன்களை இயல்பாகும் வரை மெருகூட்டுவது பற்றியது. கற்றுக்கொள்வதற்கு எதுவும் இல்லை என்று நாம் நம்பும் தருணத்தில், நாம் வளர்வதை நிறுத்துகிறோம். மீண்டும் மீண்டும் கற்பது நம் திறன்களை வலுப்படுத்துகிறது, நாம் செய்வதில் நம்மை மேலும் சிறப்பாக ஆக்குகிறது."

ரோட்டரியின் லட்சிய உறுப்பினர் இலக்குகளை அடைய, வெங்கடேஷ் கேட்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று பரிந்துரைத்தார்... "தொடர்ந்து மற்றும் சீராக", மற்றும் சரியான கேள்விகளைக் கேட்க வேண்டும். "நீண்ட காலமாக, நாம் முக்கியமானவை என்று நம்பும் கேள்விகளைக் கேட்டு வருகிறோம். ரோட்டரியின் அற்புதமான வேலையைப் பற்றி பெருமையாகப் பேசும் போக்கு நம்மிடம் உள்ளது, இந்த உண்மைகள் எவ்வளவு சுவாரஸ்யமாக இருந்தாலும் காத்திருக்க முடியும் என்பதை மறந்துவிடுகிறோம். நாம் பேசும் நபர் ஆரம்பத்தில் அந்தத் தகவல்கள் அனைத்திலும் ஆர்வம் காட்டாமல் இருக்கலாம். அதற்கு பதிலாக அவரிடம், 'நீங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்கள்?' என்று கேட்க முயற்சிக்கவும். இந்த எளிய ஆனால் சக்திவாய்ந்த கேள்வி அவர்களின் ஆர்வங்கள், அபிலாஷைகள் மற்றும் உந்துதல்களைப் புரிந்து கொள்வதற்கான கதவைத் திறக்கிறது. ஒரு தனிநபரின் மதிப்புகள் மற்றும் அபிலாஷைகளுடன் ஒத்துப் போகும்போது ரோட்டரியின் கதை மிகவும் கட்டாயமாகிறது. அந்நேரத்தில், நாம் இனி தகவல்களைத் திணிக்க வில்லை; அவர்களின் ஆர்வங்களுடன் ஒத்துப்போகும் ஒரு வாய்ப்பை வழங்குகிறோம்" என்று அவர் கூறினார்.

பின்னர், ரோட்டரியில் பெரும் மாற்றத்தை அடைவதில் தலைவர்களைக் கட்டுப்படுத்தும் இரண்டு காரணிகளை அவர் எடுத்துரைத்தார் – எல்லாவற்றையும் ஒரே ஆண்டில் முடித்துவிட வேண்டும் என்ற ஆசை; மற்ற சங்கங்கள் மற்றும் மாவட்டங்கள் முழுவதும் ஒத்துழைக்க தயக்கம். "ரோட்டரி ஆண்டுக்குள் திட்டங்களை முடிக்கும் நோக்கத்துடன் குறுகிய கால இலக்குகளை நிர்ணயிக்கிறோம். இது பொறுப்புக்கூறலை உறுதி செய்தாலும், பெரிய கனவு காணவும் பல ஆண்டுகள் நீடிக்கும் லட்சிய திட்டங்களை மேற்கொள்ளும் நமது திறனைக் கட்டுப்படுத்துகிறது. நம்மில் பலர் பல சங்கம், பல மாவட்டம் அல்லது பல நாட்டுத் திட்டங்களைக் கருத்தில் கொள்ளத் தயங்குகிறோம். நமது சங்கங்கள் மற்றும் மாவட்டங்களின் எல்லைக்குள் செயல்படும் போக்கு நம்மிடம் உள்ளது, இதனால் அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் வாய்ப்புகளை இழக்கிறோம். பெரிய கனவு காண, தனிப்பட்ட காலக்கெடு மற்றும் புவியியல் எல்லைகளின் வரம்புகளிலிருந்து நாம் விடுபட வேண்டும்" என்று வெங்கடேஷ் கூறினார்.

புவனேஸ்வரத்தைச் சேர்ந்த IAS அதிகாரியாக இருந்து நாடாளுமன்ற உறுப்பினரான அபராஜிதா சாரங்கி, தலைமைப் பதவிகளில் பெண்களின் பங்கேற்பை அதிகரிப்பதன் முக்கியத் துவத்தை வலியுறுத்தினார். நிஃப்டி 500 நிறுவனங்களில் 5 சதவீதத்திற்கும் குறைவானவர்களே பெண் தலைவர்களாகவும், 7 சதவீதத்தினர் மட்டுமே பெண் நிர்வாக இயக்குநர்களாகவும் உள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார். ரோட்டரியின் DEI முயற்சிகளை அவர் பாராட்டினார் மற்றும் பொது இடங்களில் திருநங்கைகளுக்காக பிரத்யேக கழிப்பறைகளை நிறுவ பரிந்துரைத்தார்.

படங்கள்: ஜெய்ஸ்ரீ

# பெங்களூருக்கு வருகை தந்த அறங்காவலர் தலைவர் மலோனி



RIDE K P நாகேஷ், TRF அறங்காவலர் தலைவர் மார்க் மலோனி, AKS உறுப்பினர் இர்பான் ரசாக் மற்றும் அறங்காவலர் பரத் பாண்ட்யா.



அறங்காவலர் தலைவர் மலோனி மற்றும் கே DGN ரவிசங்கர் டகோஜு மற்றும் பாவோலாவுடன்.



PDG ஜிதேந்திர அனேஜா, RIDE நாகேஷ், அறங்காவலர் பாண்டியா, DG சதீஷ் மாதவன் (3191), ரசாக், PDG சுரேஷ் ஹரி, அறங்காவலர் தலைவர் மலோனி, ரோட்டரி பெங்களூர் மிட்டவுன் தலைவர் பழனி மற்றும் DG N S மகாதேவ் பிரசாத் (3192).

TRF அறங்காவலர் தலைவர் மார்க் மலோனி மற்றும் அறங்காவலர் பரத் பாண்ட்யா இருவரும் கடந்த மார்ச் மாதம் இரண்டு நாள் பயணமாக பெங்களூர் வந்திருந்தனர். முந்தைய RI மாவட்டம் 3190-ன் முதல் AKS உறுப்பினர் இர்ஃபான் ரசாக்கிற்கு “சுயநலமில்லா சேவை”க்கான விருதை தலைவர்கள் வழங்கினர். RIDE K P நாகேஷ், DG சதீஷ் மாதவன் (RID 3191) மற்றும் முன்னாள் மாவட்ட ஆளுநர்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர். பின்னர் அவர்கள் RID 3192 DGN ரவிசங்கர் டோகோஜுவை அவரது இல்லத்தில் சந்தித்தனர்.

ஒரு அங்கீகார நிகழ்வில், அறக்கட்டளைக்கு நிதிப்பங்களிப்புச் செய்த 31 CSR கூட்டாளர்களையும், RID 3191-ன் 24 பெரு நன்கொடையாளர்களையும், RID 3192-ன் 45 நிறுவனங்கள் மற்றும் 40 பெருநன்கொடையாளர் களையும் அறங்காவலர் தலைவர் கௌரவித்தார். இந்த இரண்டு மாவட்டங்களும் ரோட்டரி ஆண்டு 2024–25-ல் TRF-க்கு தனித்தனியாக 1.2 மில்லியன் டாலர் நிதிப்பங்களிப்புச் செய்ய உறுதியளித்தன. PDG சுரேஷ் ஹரி (RID 3192) மற்றும் DGN அனில் குப்தா (RID 3191) இருவரும் நிகழ்ச்சிக்கு தலைமை வகித்தனர்.■

# பெங்களூருவில் தெற்காசிய அமைதி மாநாடு

ரோட்டரி செய்திக்குழு

“ஆரோக்கியமான உலகம், பசுமையான நாளை” என்னும் கருபொருளை முன்வைத்து பெங்களூருவில் கடந்த மார்ச் 23-ம் தேதி தெற்காசிய சர்வதேச அமைதி மாநாடு நடைபெற்றது. RID 3192 சார்பில் DG N S மகாதேவ பிரசாத் தலைமையிலான குழு மாநாட்டுக்கு ஏற்பாடு செய்திருந்தது. சங்கர் ஸ்ரீனிவாஸ் மாநாட்டுத் தலைவராக இருந்தார்.

உலக அளவில் நிலையான அமைதியை ஏற்படுத்துவதற்கு தேவையான ஐந்து முக்கிய அம்சங்கள் இந்த நிகழ்வில் விவாதிக்கப்பட்டது. காலநிலை மீள்தன்மை, பருவநிலை பாதுகாப்பு முயற்சிகள் மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை, பொது சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு எல்லையை விரிவுபடுத்தி, ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்கான உத்திகளை வகுத்தல், அடிமட்ட அளவில் சமூகப் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்த சமூக அடிப்படையிலான தீர்வுகள், தெற்காசிய நாடுகளிடையே இராஜதந்திர மற்றும் பொருளாதார உறவுகளை வலுப்படுத்த பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் நிலையான எதிர்காலத்தை உருவாக்குவதற்கு பாரம்பரியம் மற்றும் நவீன நடைமுறைகளை ஒருங்கிணைத்தல் ஆகியவை இதில் அடங்கும்.

இந்தியா, இலங்கை, பூடான் மற்றும் நேபாளத்தைச் சேர்ந்த சுமார் 3,000 பிரதிநிதிகள் மாநாட்டில் பங்கேற்றனர். DEI ஆலோசனைக்குழுவின் உறுப்பினர் பிரையன் ரஷ் RI-தலைவரின் சிறப்பு பிரதிநிதியக மாநாட்டில் கலந்துகொண்டார். அவர் பேசுகையில், அமைதிக்கான திறவுகோல் என்னவென்றால் மற்றவர்கள் அமைதியை அடைய உதவுவதாகும் என்று குறிப்பிட்டார்.

சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மூலம் அமைதியை நிலைநாட்டுவதில் ரோட்டரியின் கண்ணோட்டம் என்பது பற்றி DGN ரவிசங்கர் டகோஜு பேசினார். 2050 ஆம் ஆண்டுக்குள் பருவநிலை மாற்றம் மற்றும் புவி வெப்ப மடைதலால் ஆசிய மக்கள் தொகையில் 40 மில்லியனுக்கும் மேலான மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்று உலக வங்கி மதிப்பிட்டுள்ள தாகக் குறிப்பிட்டார். சுற்றுச்சூழல் நிலைத் தன்மையில் ரோட்டரி எடுத்துவரும் சிறப்பான முயற்சிகளை அவர் எடுத்துரைத்தார். மேலும் காடு வளர்ப்புத் திட்டத்தில் கவனம் செலுத்துமாறும் மாநாட்டுப் பிரதி நிதிகளை அவர் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்.

சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கான ரோட்டரி செயல் குழு (ESRAG) தலைமையில் “அமைதியைக் கட்டி யெழுப்புவதற்கான சுற்றுச்சூழல் தீர்வுகள் ” என்னும் தலைப்பில் நடைபெற்ற குழு விவாதத்தில் பல்லுயிர் பாதுகாப்புத் திட்டத்தின் தலைவர் மீனாட்சி வெங்கடராமன், சமூக மேம்பாட்டாளர் அருண் வாடி, RAGs குழு தலைவர் மற்றும் COP 23 திட்டத்தின் மேலாளர் கிறிஸ்டோபர் புட்டாக் மற்றும் COP 28 திட்டக்குழு தலைவர் யாசர் அட்ராசிக் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

சமூக மாற்றத்திற்கு பங்களிப்புச் செய்த தனியார், அமைப்புகளுக்கு DEI விருதுகள் வழங்கப்பட்டன. கொள்கை பரிந்துரைகள், பிராந்திய ஒத்துழைப்புக்கான இருதரப்பு மற்றும் பலதரப்பு கூட்டாண்மை, சமூகத்தால் இயக்கப்படும் சுற்றுச்சூழல் மற்றும் பொது சுகாதாரத் திட்டங்கள் ஆகியவை அமைதி மாநாட்டின் வெளிப்பாடுகளாகும்.

கர்நாடக மாநிலத்தில் உள்ள ஏழைக் குழந்தைகளுக்கான உறைவிடப் பள்ளியில் (KREIS) 6 முதல் 9-ம் வகுப்பு வரை படிக்கும் 1.8 லட்சம் மாணவர்களுக்கு ஆங்கிலம், கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களில் டிஜிட்டல் பயிற்சி அளிக்க, RID 3192 மாவட்டம், சென்னை ஐ.ஐ.டி.யின் ஒரு அங்கமான ஐஐடி சென்னை, பிரவர்தக் அமைப்புடன் 10 ஆண்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. மாநிலத்தில் உள்ள 821 பள்ளிகளில் பயிற்சி ஆய்வகங்களை உருவாக்குவதும் இந்த ஒப்பந்தத்தில் அடங்கும்.■

*RID 3192 DG N S மகாதேவ் பிரசாத் RIPR மற்றும் ரோட்டரி DEI ஆலோசனைக் குழு உறுப்பினர் பிரையன் ரஷ்க்கு நினைவுப் பரிசு வழங்குகிறார். (இடமிருந்து) கிளப் சர்வீசஸ் இயக்குனர் ரேணுகேஸ்வர சுவாமி, DEI இயக்குனர் அபா சக்சேனா, ராஜேஸ்வரி பிரசாத், மாவட்ட செயலாளர் K T நிரஞ்சன், N S ரங்கசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.*



# பண்டைய அணைகளை மறுசீரமைக்கும் புனே சென்ட்ரல் ரோட்டேரியர்கள்

ரஷீதா பகத்

RID 3131-ன் புனே சென்ட்ரல் ரோட்டரி சங்கத்தின் தலைவர் பிரிகேடியர் PKM ராஜா தலைமையிலான ரோட்டேரியர்கள் குழு, சமீபத்தில் சத்தாராவுக்கு மூன்று மணி நேரம் மற்றும் 130 கி.மீ தூரம் பயணம் செய்து, 70 ஆண்டுகளுக்கும் மேலாக பெரிய கட்டமைப்பு சேதங்களை சந்தித்த ஒரு பழங்கால அணையை சரிசெய்ய அவர்கள் மேற்கொண்ட கடின உழைப்பின் விளைவுகளைப் பார்க்க சென்றபோது, ஏராளமான, பளபளப்பான நீரை வைத்திருக்கும் நீர்நிலையின் கரையில் அமர்ந்திருக்கும் பறவைகளின் கூட்டத்தைப் பார்த்து மகிழ்ச்சியில் மூழ்கினர்.

இது பிப்ரவரி 2025-ல் நடந்தது. ஒரு காலத்தில் பாசனம், குடிநீர் மற்றும் கால்நடைகளுக்கு முக்கியமான நீர் ஆதாரமாக இருந்த அந்த பழங்கால அணை, காலப்போக்கில் கடுமையான விரிசல்களையும் பிற கட்டமைப்பு சேதங்களையும் சந்தித்தது, இது நீர் கசிவை ஏற்படுத்தி சேமிப்பு திறனை கடுமையாக குறைத்தது. இந்த அணையின் பரிதாபகரமான நிலை சில உள்ளூர் மக்களால் ரோட்டேரியர்களின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டபோது, முந்தைய மோசமான பருவமழை காரணமாக அணை முற்றிலும் வறண்டு போயிருந்தது. இதன் விளைவாக, இப்பகுதி முழுவதும் நிலத்தடி நீரை மேம்படுத்துவதற்கு இந்த நீர்நிலையை நம்பியிருந்த 5 கி.மீ சுற்றளவில் உள்ள பெண்கள், வீட்டு உபயோகத்திற்காக ஒரு குடம் அல்லது வாளி தண்ணீரை எடுக்க 2–3 கி.மீ தூரம் நடக்க வேண்டியிருந்தது.



*சதாரா மாவட்டத்தில் உள்ள ராஜாபூர் அணை தண்ணீரால் நிரம்பி புலம்பெயர்ந்த பறவைகளை ஈர்க்கிறது.*

2022-ம் ஆண்டில் இப்பகுதியில் ஒரு சிறிய அணையை சரிசெய்து புனரமைக்கும் சிறிய திட்டத்தை ஏற்கனவே செய்திருந்த சங்க உறுப்பினர்கள், ராஜபூர் அணையை புனரமைத்து புதுப்பிக்கும் மிக பெரிய சவாலை மேற்கொள்ள வேண்டும் என்று உணர்ந்தனர்.

இத்திட்டம் அவர்களின் சங்கத்தின் ஒரு முக்கிய திட்டமாக மாறியதன் பின்னணியை விளக்கிய அதன் முன்னாள் தலைவர் கமடோர் அஜய் சிட்னிஸ், 1940களில் கட்டப்பட்ட இந்த அணை, இப்பகுதியைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கு சேமிப்பை வழங்குவதற்காக கட்டப்பட்டது என்று கூறுகிறார். "ஆனால் 2023-ல் கிட்டத் தட்ட பருவமழை இல்லாததாலும், 2022-ல் மிகக் குறைந்த பருவமழை பெய்ததாலும், இந்த அணையின் சேமிப்பு பகுதி முற்றிலும் வறண்டு போயிருந்தது."

முன்னதாக, சங்கத்தின் முன்னாள் தலைவர் மற்றும் முக்கிய நன்கொடையாளர் கிரி சக்ரானி, உள்ளூர் பொறியாளர்-வணிகர்-கொடையாளர் பத்மாகர் பிடேவை சந்தித்தார், அவர் மகாராஷ்டிராவின் சத்தாரா மாவட்டத்தில் உள்ள இந்த கிராமங்களில் நீர் கிடைப்பதை மேம்படுத்துவதற்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்துள்ளார். கடந்த மூன்று ஆண்டுகளில் ஏற்பட்ட பெரிய விரிசல்கள் மற்றும் மோசமான பருவமழை காரணமாக இந்த அணை வறண்டு, அதனை நீர் ஆதாரமாக நம்பியிருந்த மக்களின் வாழ்க்கையில் துயரத்தை ஏற்படுத்தியது பற்றி அவர் விளக்கினார். கடுமையான நீர் பற்றாக்குறையின் மத்தியில், தனியார் டேங்கர்கள் மூலம் கணிசமான செலவில் தண்ணீர் வாங்குவதைத் தவிரவும் அல்லது நம்பமுடியாத மற்றும் பற்றாக்குறையான அரசாங்க தண்ணீர் டேங்கர்களுக்காக காத்திருப்பதைத் தவிரவும் வேறு வழியில்லை என்று உள்ளூர் பஞ்சாயத்து தலைவர் ஹனுமந்த் தண்டக் ரோட்டேரியர்களிடம் விளக்கினார்.

சங்கத்தின் மையக் குழு ஒன்று பழுது மற்றும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள முடிவு செய்தது, மேலும் RID3131-ல் உள்ள மிகப்பெரிய சங்கங்களில் ஒன்றான 117 உறுப்பினர்களைக் கொண்ட இந்த சங்கத்தின் ரோட்டேரியர்கள் இந்த முக்கியமான சமூக நலத் திட்டத்திற்கு நன்கொடை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியது. கடந்த பிப்ரவரி மாதம், ரோட்டரி ஆன் தீப்தி சிட்னிஸ் மற்றும் முன்னாள் தலைவர் சக்ரானி ஆகியோரால் பாரம்பரிய பூஜையுடன் அணையின் பணிகள் தொடங்கின, மேலும் இந்த அணை அமைந்துள்ள ராஜபூர் கிராமத்தின் அனைத்து மக்களும் இதில் கலந்து கொண்டனர்.

மகாராஷ்டிராவின் இந்த பிராந்தியத்தில் உள்ள நீர்நிலைகளின் வலையமைப்பின் பின்னணியை





**இடமிருந்து:** *RC புனே சென்ட்ரல் முன்னாள் தலைவர் கிரிதர்லால் சக்ராணி, ஷிரீஷ் நட்கர், நிதின் ராஜோர், சங்கத் தலைவர் பிரிகேடியர் P K M ராஜா, PP அஜய் துபே, ராகேஷ் மகிஜா மற்றும் IPP கமாண்டர் அஜய் சிட்னிஸ் ஆகியோர் ராஜாபூர் அணைக்கு அருகில் கிராமவாசிகளுடன்.*

கமடோர் பின்வருமாறு விளக்குகிறார்: சத்தாரா மாவட்டம் பொதுவாக இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. மேற்குப் பகுதியில் மேற்கு தொடர்ச்சி மலைகள் உள்ளன, மகாபலேஷ்வர் மற்றும் பஞ்சுகினி போன்ற மலைவாசஸ்தலம் இங்கே அமைந்துள்ளன; இவை தென்மேற்குப் பருவமழையின் போது பெருமளவு மழையைப் பெறும் அதிர்ஷ்டம் வாய்ந்த இடங்கள். ஆனால் கிழக்குப் பகுதியில் சமவெளிகள் மற்றும் மென்மையான மேடுகளுடன் கூடிய நிலப்பரப்புகள் உள்ளன, இது ஒரு மழைவிலக்குப் பகுதியில் அமைந்துள்ளதால், தென்மேற்குப் பருவமழை விலகும் காலத்தில்தான் மழையைப் பெறுகிறது.

இந்த பிராந்தியத்தில் உள்ள மக்களின் நீர் தேவைகளைப் பூர்த்தி செய்ய, 20-ம் நூற்றாண்டின் முதல் பாதியில் சுமார் 180 மண் அணைகள் கட்டப்பட்டன என்று அவர் கூறுகிறார். “பல ஆண்டுகளாக இந்த அணைகளில் கடுமையான கசிவுகள் ஏற்பட்டுள்ளன, இதனால் இந்த நீர்நிலைகளில் சேமிக்கப்படும் நீர் நவம்பர்–டிசம்பர் வரை மட்டுமே நீடிக்கிறது, அதன் பிறகு வறண்டு போகிறது. அரசாங்கம் இந்த அணைகளை பழுது பார்க்க முயற்சித்திருக்கிறது, ஆனால் இத்தகைய திட்டங்களில் வழக்கமாக நடப்பது போல், அதிகமான பணம் செலவாகிறது ஆனால் மிகக் குறைவான பயனே கிடைக்கிறது,” என்றார்.

அப்போதுதான் பண்டு பிடே என்று உள்ளூர் மக்களால் அன்புடன் அழைக்கப்படும் பிடே போன்ற தனிப்பட்ட குடிமக்கள் இதில் ஈடுபட்டு, உள்ளூர் பெண்களுக்குத் தேவையான தண்ணீர் மற்றும் நிவாரணத்தை இந்த பகுதிக்கு கொண்டு வர ரோட்டேரியர்களையும் மிகவும் பயனுள்ள கூட்டாண்மைக்கு அழைத்து வந்தனர்.

2023 முதல் இரண்டு ஆண்டுகளாக, ராஜபூர் அணையின் பழுது மற்றும் புனரமைப்புப் பணிகளுக்காக சங்கம் தேவையான சுமார் 12 லட்சம் நிதியை திரட்டியது என இந்தத் திட்டத்தின் மையக் குழுவின் மற்றொரு ஆர்வமுள்ள உறுப்பினரான முன்னாள் தலைவர் உதய் தர்மாதிகாரி கூறுகிறார். முக்கிய நன்கொடையாளர் சக்ரானி, மற்றும் மற்ற நன்கொடையாளர்களில் முன்னாள் தலைவர் அஜய் துபே, ராகேஷ் மக்கிஜா, ஷிரீஷ் நட்கர் மற்றும் நிதின் ராஜோர் ஆகியோர் அடங்குவர்.

கார்ப்பரேட் சமூக பொறுப்பு (CSR) கூட்டாளர்கள் மற்றும் உலகளாவிய மானியங்களுடன் (GGs) பெரிய திட்டங்களுக்கு நன்கு அறியப்பட்ட சங்கம், CSR நிதிகளுக்கு ஏன் செல்லவில்லை என்று கேட்டதற்கு, “நாங்கள் அவர்களின் CSR நிதிகளுக்காக நிறுவனங்களுக்குச் செல்லும் போது, அவர்கள் முதலில் ஏற்கனவே செய்யப்பட்ட தரமான வேலையைப் பார்க்க விரும்புகிறார்கள், அதன் பிறகுதான் அவர்கள் பணத்தை வழங்குகிறார்கள். மரங்களை நடுவது அல்லது நீர் பாதுகாப்பு திட்டங்கள் போன்ற சுற்றுச்சூழல் தொடர்பான திட்டங்களுக்கு,



அவர்களின் பணத்துடன் வேலையின் எந்த பகுதி செய்யப்படும் என்பதை உறுதியான முறையில் அவர்களுக்குக் காட்டுவது கடினம். அதனால்தான் இந்த முதல் பெரிய அணை புனரமைப்பிற்கு நாங்கள் எங்கள் சொந்த பணத்தை திரட்டுவோம் என்று நினைத்தோம், ஆனால், இப்போது எங்களுக்கு சாத்தியமான CSR கூட்டாளருக்குக் காண்பிப்பதற்கு இந்த வெற்றிகரமான திட்டம் இருப்பதால், நாங்கள் நிச்சயமாக CSR நிதிகளைப் பெற்று இந்த பகுதியில் பெரிய மற்றும் துணிச்சலான நீர் திட்டங்களைச் செய்வோம்.”

கடந்த இரண்டு ஆண்டுகளில் அவரது சங்கம், CSR மானியங்கள், GGக்கள் மற்றும் சங்க உறுப்பினர்களால் திரட்டப்பட்ட பணம் ஆகியவற்றுடன் கிட்டத்தட்ட 11 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்களைச் செய்துள்ளது என்று அவர் மேலும் கூறுகிறார். இந்த ஆண்டும், புனே சென்ட்ரல் ரோட்டரி சங்கத்தால் செய்யப்படும் சமூக சேவைப் பணிகள் சுமார் 7 கோடி ரூபாயைத் தொடும்.

இத்தகைய பணிகளில் செய்ய வேண்டிய துல்லியமான பணிகள் குறித்து கமடோர் சிட்னிஸ் விளக்குகிறார்: “அணைச் சுவரின் அடியில் 10 அடி அகலமுள்ள ஒரு பள்ளம் தோண்டப்படுகிறது. அந்த பள்ளம் வலிமையான பாறை கற்களை தொடும் அளவுக்கு ஆழமாகத் தோண்டப்படும். அணையின் முன்பக்கத்தில் வளர்ந்துள்ள காட்டுமரம் மற்றும் கொடிகள் அகற்றப்படும். நீர் ஒழுகுவதற்கான மூல காரணம் கண்டறியப்பட்டு சிமெண்டில் அடைக்கப்படும். அதற்குப் பிறகு, பளிச்சென்ற தடிமனான பிளாஸ்டிக் சீட்டுகள் அந்த பள்ளத்திலும் அணையின் முன்பக்கத்திலும் விரிக்கப் படும். பிறகு, தோண்டிய மண் மற்றும் களிமண்ணால் மீண்டும் அந்த பள்ளம் நிரப்பப்படும். இதெல்லாம் முடிந்த பிறகு, நாங்கள் மழையை எதிர்பார்த்து காத்திருப்போம்!”

இந்த ஆண்டு, இப்பகுதி ஏராளமான மழையால் ஆசீர்வதிக்கப்பட்டது என்று அவர் மேலும் கூறுகிறார். மழை தொடங்கியவுடன், வண்டல் அகற்றும் பணி நிறுத்தப்பட்டது, மேலும் நீர் நிரம்பத் தொடங்கியது. செப்டம்பர் மாதத்திற்குள், நீர்த்தேக்கம் நிரம்பி, அணையின் மேற்கு விளிம்பில் அமைந்துள்ள கழிவு




*அணை பகுதியில் பள்ளம் தோண்டப்படுகிறது.*

வாரணையிலிருந்து நீர் வெளியேறத் தொடங்கியது. நவம்பர் மாதத்தில், சங்கத்தலைவர் பிரிகேடியர் ராஜா தலைமையில் ஒரு குழுவினர் அந்த இடத்திற்குச் சென்று, தங்கள் உழைப்பின் பலன்களைத் தாங்களே பார்த்தனர்.

ரோட்டேரியர்களை கிராம சர்பஞ்ச் தண்டக், உள்ளூர் பள்ளியின் தலைமை ஆசிரியர் மற்றும் கிராம மக்கள் அணையில் வரவேற்றனர். “அவர்களுடன் நாங்கள் அணையின் நீளம் முழுவதும் நடந்தோம், மிகவும் மகிழ்ச்சியான சர்பஞ்ச் கிராமத்தின் குடிநீர் பிரச்சனைகள் இறுதியாக முடிந்துவிட்டன என்று எங்களிடம் கூறினார். அவர்கள் இனி சமூக கிணற்றை நிரப்புவதற்கும், கிராம மக்களுக்கு கிடைக்கச் செய்வதற்கும் டேங்கர்கள் மூலம் தண்ணீர் பெற வேண்டியதில்லை.”

இந்தத் திட்டத்தில் அணை கரையை வலுப்படுத்துதல், நீர்த்தேக்கத்தின் வண்டல் அகற்றுதல், கசிவு வழிகளை வலுப்படுத்துதல் மற்றும் மண் அரிப்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை செயல்படுத்துதல் ஆகியவை அடங்கும். இது நீர் தக்கவைப்பை மேம்படுத்தியது மட்டுமல்லாமல், காலநிலை மாறுபாடுகளுக்கு எதிராக நீண்ட கால நெகிழ்ச்சியையும் உறுதி செய்துள்ளது என்று கமடோர் சிட்னிஸ் மேலும் கூறுகிறார்.



**இடமிருந்து:** IPP *கொமடோர் அஜய் சிட்னிஸ், ஷிரீஷ் நட்கர், சங்கத் தலைவர் பிரிகேடியர் ராஜா, நிதின் ராஜோர், ராகேஷ் மகிஜா மற்றும் PP அஜய் துபே.*

இப்போது, அணையில் தண்ணீர் நிரம்பி வழிகிறது (இது கடந்த நவம்பரில்), சமூக கிணறு தண்ணீரால் நிரம்பி இருந்தது, மேலும் கிராமத்தில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் சுத்தமான குடிநீர் கிடைத்தது. மேலும், பல ஆண்டுகளாக வறண்டு போயிருந்த சில கிணறுகள் இறுதியாக தண்ணீரைப் பார்த்தன, அவற்றில் சில நிரம்பி வழிந்தன. "அவர் குரலில் இருந்த மகிழ்ச்சி அங்கு வந்திருந்த அனைவராலும் எதிரொலிக்கப்பட்டது. ஒரு மாதத்திற்கு மேலாக மழை பெய்யாவிட்டாலும், கழிவு வெயிரில் தண்ணீர் இன்னும் பாய்ந்து கொண்டிருந்தது என்பது இன்னும் ஆச்சரியமாக இருந்தது. இந்த முழுப் பகுதியிலும் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்ததால் இது நிகழ்ந்தது என்று பண்டு பிடே எங்களுக்கு விளக்கினார். அணைக்குள் நீர் ஊடுருவியது மட்டுமல்லாமல், 5 கி.மீ சுற்றளவில் உள்ள கிராமங்களில் உள்ள கிணறுகளும் இந்தத் திட்டத்தால் பயனடைந்தன."

இந்தத் திட்டத்தால் சுமார் 15,000 பேர் பயனடைந்தனர் என்று தர்மாதிகாரி மேலும் கூறினார். "இந்த வெற்றிக் கதை வரவிருக்கும் ஆண்டுகளில் உறுப்பினர்களிடமிருந்து அதிக பங்களிப்பை ஊக்குவிப்பது மட்டுமல்லாமல், CSR நிதியைப் பெறவும் உதவும், இதனால் இந்தத் திட்டத்தின் நோக்கத்தை அதிகரித்து மேலும் அணைகளை பழுது பார்த்து புனரமைக்க முடியும்."

கிராம மக்களுக்கு சொந்தமான மற்றும் உரிமையான உணர்வை உருவாக்கவும் ரோட்டேரியர்கள் உள்ளூர் மக்களிடம் தங்களால் முடிந்த சிறிய பங்களிப்பை வழங்குமாறு ஊக்குவித்தனர் என்று அவர் மேலும் கூறுகிறார். மேலும் அவர்கள் பழுதுபார்க்கும் பணிகளுக்கு உழைப்பை கொடுப்பதிலும் ஈடுபட்டனர். "கிராம மக்கள் பங்கேற்றதால், மகிழ்ச்சி குறியீடு உண்மையில் அதிகரித்தது, பெண்களுக்கு 2–3 கி.மீ தூரம் தண்ணீர் எடுக்க நடக்க வேண்டிய தேவையிலிருந்து காப்பாற்றியதால், ஆண்களை விட பெண்கள் மகிழ்ச்சியாக இருந்தனர்."



*ராஜாபூர் அணையின் புனரமைப்பின் மங்களகரமான தொடக்கமாக PP சக்ராணி ஒரு தேங்காய் உடைக்கிறார்.*

இந்த திட்டத்தின் தாக்கம் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. சில நேரம் செலவிட கிடைத்ததால், பெண்கள் சுய உதவி குழுக்களாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளனர் மற்றும் தையல், கோழி வளர்ப்பு மற்றும் பிற தொழில்களுக்கான பயிற்சி அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது, இதன் மூலம் அவர்கள் ஒரு மிதமான வருமானத்தை பெற முடியும். சுத்தமான நீர் கிடைப்பது நீர் மூலம் பரவும் நோய்களை குறைத்து, இப்பகுதியில் உள்ள பள்ளிகளில் வருகையை மேம்படுத்தியுள்ளது என்று அவர் மேலும் கூறுகிறார். பெண்களின் பொது ஆரோக்கியமும் மேம்பட்டுள்ளது.

"பிப்ரவரியில் நாங்கள் புலம் பெயர்ந்த பறவைகளை அணையில் கண்டோம், கடந்த வாரம் நாங்கள் சோதித்தபோது கூட, ராஜபூர் அணையில் போதுமான தண்ணீர் இருப்பதாக எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. மேம்பட்ட நிலத்தடி நீர் மட்டம் விவசாயிகளுக்கும் உதவியுள்ளது என்று நான் கூறுவேன், இந்த பகுதி மழை மறைவுப் பகுதி என்பதால் அவர்களுக்கு பெரிய பயிர் முறைகள் இல்லை. ஆனால் அவர்கள் வளர்க்கும் காய்கறிகள் மற்றும் பிற பொருட்களுக்கு சிறந்த நீர் கிடைப்பதால் அதிக விளைச்சலை பெறுகின்றன."

இளைஞர்களின் இடம் பெயர்வு (அவர்களில் சிலர் முன்பு மும்பையில் டப்பாவாலாக்களாக பணியாற்று வதற்காக வெளியேறினர்) நிற்கும் என்று நம்புகிறேன் என்று அவர் மேலும் கூறுகிறார். இந்த பிராந்தியத்தில் உள்ள அரசு பள்ளிகளின் நிலைமைகளை மேம்படுத்துவது சங்கத்தின் அடுத்த இலக்காகும்.■



# COL 2025

கவுன்சில் ஆன் லேஜிஸ்லேஷன் என்பது ரோட்டரி உறுப்பினர்கள் ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கும் ஒருமுறை கூடி, அமைப்பை முன்னோக்கி நகர்த்துவதற்கான முன்மொழிவுகளைப் பற்றி விவாதித்து வாக்களிக்கும் இடமாகும். உலகெங்கிலும் உள்ள ரோட்டரி மாவட்டங்களின் பிரதிநிதிகள், ஏப்ரல் 13–17 வரை அமெரிக்காவின் இல்லினாய் மாகாணத்தின் சிகாகோவில் நடைபெற்ற 2025 கவுன்சில் ஆன் லெஜிஸ்லேஷனில் (COL) கூடியிருந்தனர். நீண்ட விவாதத்திற்குப் பிறகு கட்டண உயர்வுக்கு ஒப்புதல் அளித்தனர், மேலும் குறைவான உறுப்பினர்களுடன் சங்கங்கள் சாசனப்படுத்தப்படுவதையும் அனுமதிப்பது என்று முடிவெடுத்தனர்.

இந்தக் கூட்டத்தொடரில் மிகவும் விவாதிக்கப்பட்ட விஷயங்களாக இருந்தது உறுப்பினர் கட்டண உயர்வு மற்றும் ஆண்டுதோறும் நடைபெறும் மாவட்ட மாநாடுகளை விருப்பமாக்குவதற்கான முன்மொழிவு.

ரோட்டரி சர்வதேச தலைவர் ஸ்டெஃபனி அர்ச்சிக், கவுன்சிலின் தொடக்க நாளில் உரையாற்றுகையில், ரோட்டரியின் பன்முக கலாச்சார மற்றும் கூட்டுறவு தன்மையை வலியுறுத்தினார். “இந்த கவுன்சில் ரோட்டரியின் ஜனநாயக செயல் முறையின் இதயம் மற்றும் நமது சர்வதேச உணர்வின் சிறந்த பிரதி நிதித்துவமாகும். இது ரோட்டரியின் பன்முக கலாச்சாரத்தின் மிகவும் சக்திவாய்ந்த வெளிப்பாடுகளில் ஒன்றாகும். இங்கே, உலகின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் குரல்கள் ஒன்றிணைகின்றன - போட்டியிட அல்ல, ஒத்துழைக்க,” என்று சுமார் 480 பிரதிநிதிகள் மற்றும் COL பார்வையாளர்களிடம் அவர் கூறினார்.

ஒவ்வொரு ரோட்டரி உறுப்பினரும் RIக்கு செலுத்தும் கட்டணத்தில் $3.50 உயர்வை பிரதிநிதிகள் ஒப்புக் கொண்டனர், இதனால் 2025–26-ம் ஆண்டிற்கான கட்டணம் $82லிருந்து 2026–27ஆம் ஆண்டில் $85.50 ஆகவும், அடுத்த இரண்டு ஆண்டுகளில் ஒவ்வொன்றிலும் மேலும் $3.75 ஆகவும் அதிகரிக்கும்.

ஒவ்வொரு கவுன்சிலின் தொடக்கத்திலும் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்ட ஐந்தாண்டு கால நிதி முன்னறிவிப்பு, எந்த உயர்வும் இல்லாவிட்டால் 2029–30-ம் ஆண்டளவில் RI $42 மில்லியன் பற்றாக்குறையை கொண்டிருக்கும் என்று கணித்தது. அமைப்பின் கொள்கைகள் சமநிலையான வரவு செலவுத் திட்டத்தை கொண்டிருக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்துகின்றன.

“நாம் செய்யும் எல்லாவற்றிற்கும் உறுப்பினர் கட்டணங்களே முதன்மை நிதி ஆதாரம். இது உங்கள் சங்கங்கள், உறுப்பினர்கள் மற்றும் மாவட்டங்களுக்கு அத்தியாவசிய சேவைகளை வழங்குகிறது. பணவீக்கம் தொடர்ந்து செலவுகளை அதிகரித்து வருவதால், கட்டணங்கள் அதற்கேற்ப இருப்பதை நாம் உறுதிப்படுத்த வேண்டும். உலகிற்கு ரோட்டரி முன்பை விட இப்போது அதிகம் தேவைப்படுகிறது. நமது அமைப்பின் எதிர்காலத்தைப் பாதுகாப்பது உங்கள் கையில் உள்ளது” என்று RI இயக்குனர் ராஜு சுப்பிரமணியன் கவுன்சிலில் கூறினார்.

கட்டண உயர்வை ஆதரிப்பவர்கள், RI தொடர்ந்து செலவுகளைக் குறைத்து வருகிறது என்றும், அமைப்பு திறமையாக செயல்படுவதற்கான புதிய வழிகளைக் கண்டுபிடிக்கும் என்றும் வலியுறுத்தினர். ஒவ்வொரு ஆண்டும் சுமார் நான்கு சதவீதம் உயரும் இந்த கட்டண உயர்வு, 2024ஆம் ஆண்டின் உலகளாவிய பணவீக்க விகிதத்தை விடக் குறைவானது.

ஆனால், கட்டண உயர்வு உறுப்பினர் எண்ணிக்கையை குறைக்கும், உறுப்பினர்களே ரோட்டரியின் உயிர்நாடி என்று எதிர்ப்பாளர்கள் கூறினர்.

“கடந்த 10 ஆண்டுகளாக, உறுப்பினர் எண்ணிக்கை குறைந்து



RIDs *ராஜு சுப்பிரமணியன் மற்றும் அனிருதா ராய் சவுத்ரி மற்றும்* RIDEs M *முருகானந்தம் மற்றும்* K P *நாகேஷ் ஆகியோருடன் இந்திய அணி.*

40 வயதுக்கு மேற்பட்ட தற்போதைய ரோட்டராக்டர்களின் குறைந்த எண்ணிக்கையை எதிர்ப்பாளர்கள் காரணம் காட்டி, வரம்புகள் தேவை யில்லை என்றும், அத்தகைய கட்டுப்பாடுகள் உறுப்பினர்களை ரோட்டரியிலிருந்து வெளியேற கட்டாயப்படுத்தலாம் என்றும் கூறினர்.

ஒரு சங்கம் கொண்டிருக்கக்கூடிய கௌரவ உறுப்பினர்களின் எண்ணிக்கையை சங்கத்தின் செயலில் உள்ள உறுப்பினர்களில் ஐந்து சதவீதமாகக் கட்டுப்படுத்துவதை நிராகரித்தது. பல சங்கங்கள் முன்னாள் உறுப்பினர்களுடன் தொடர்பில் இருக்க கௌரவ உறுப்பினர் பதவியைப் பயன்படுத்துகின்றன என்று எதிர்ப்பாளர்கள் குறிப்பிட்டனர், அத்தகைய நீண்டகால ரோட்டேரி யர்கள் மதிப்புமிக்க நிபுணத்துவத்தை வழங்கக்கூடியவர்கள் ஆவர்.

வருகிறது," என்று 2650 மாவட்டத்தை (ஜப்பான்) பிரதிநிதித்துவப்படுத்தும் ஷோபி டோன் கூறினார். கட்டண உயர்வு காரணமாக ஏற்படும் உறுப்பினர் இழப்பு சிறிய சங்கங் களையே அதிகம் பாதிக்கிறது என்று அவர் குறிப்பிட்டார். RI அதிக ஊழியர்கள் இல்லாமல், சிறந்த செயல்திறனைப் பெற வேண்டும் என்றார். 45 நிமிட விவாதத்திற்குப் பிறகு கட்டண உயர்வுக்கான முடிவு வெற்றி பெற்றது.

20 உறுப்பினர்களுக்கு பதிலாக 15 உறுப்பினர்களுடன் சங்கங்கள் சாசனப்படுத்தப்படுவதை அனுமதிக்கும் ஒரு நடவடிக்கையையும் கவுன்சில் ஒப்புக்கொண்டது. புதிய சங்கங்களைத் தொடங்குவதற்கான தடைகளை இந்த மாற்றம் நீக்கும் என்றும், புதுமையான சங்க மாதிரிகளை முயற்சிப்பதன் மூலம் ரோட்டரி வளரவும் அதன் பரப்பை விரிவுபடுத்தவும் உதவும் என்றும் ஆதரவாளர்கள் தெரிவித்தனர். கவுன்சிலின் தலைவர் கென் ஷப்பார்ட், பிரதிநிதிகளின் கடின உழைப்பிற்கு நன்றி தெரிவித்தார்.

**மற்ற நடவடிக்கைகளில், கவுன்சில்:** நீண்ட விவாதத்திற்குப் பிறகு, ஆண்டுதோறும் மாவட்ட மாநாட்டை நடத்துவது கட்டாயமில்லை, விருப்பமானது என்று வாக்களித்தது. ரோட்டராக்டர்களுக்கு வயது வரம்பு நிர்ணயிக்கும் இரண்டு நடவடிக்கைகளை தோற்கடித்தது.

மண்டல எல்லைகளை நிர்ணயிப்பதில் ரோட்டேரியர்களின் எண்ணிக்கையுடன் கூடுதலாக கலாச்சாரம் மற்றும் மொழியையும் கருத்தில் கொள்ள வாரியத்தை அனுமதிக்க ஒப்புக்கொண்டது. ஒவ்வொரு கவுன்சிலின் தொடக்கத்திலும் வழங்கப்படும் ஐந்தாண்டு கால நிதி முன்னறிவிப்பில், RI மேற்கொண்ட குறிப்பிட்ட செயல்முறை மேம்பாடுகள் மற்றும் செலவு குறைப்பு நடவடிக்கைகள் குறித்த அறிவிப்புகள் இருக்க வேண்டும் என்று வாக்களித்தது.

Presidents elect பயிற்சி கருத்தரங்கை கற்றல் கருத்தரங்கம் என்றும், மாவட்ட பயிற்சி கூட்டத்தை சங்க தலைமைத்துவ கற்றல் கருத்தரங்கம் என்றும் பெயர் மாற்ற ஒப்புதல் அளித்தது. COL-ஐ சுருக்கமாகக் கூறும் ஒரு செயல் அறிக்கை சங்கங்களுக்கு அனுப்பப்படும், மன்றத்தின் நடவடிக்கைக்கு ஏதேனும் எதிர்ப்பு இருந்தால் அதைச் சமர்ப்பிக்க சங்கங்களுக்கு குறைந்தது இரண்டு மாதங்கள் அவகாசம் வழங்கப்படும். சாத்தியமான சங்க வாக்குகளில் குறைந்தபட்சம் ஐந்து சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சங்கங்களிடமிருந்து எதிர்ப்பு இருந்தால், கவுன்சிலின் சட்டத்தை ஏற்றுக் கொள்வது நிறுத்தி வைக்கப்படும்.



RIDEs *நாகேஷ்* (இடது) *மற்றும் முருகானந்தம்* (வலமிருந்து இரண்டாவது) *மற்றும்* RIPE *மரியோ டி காமர்கோ* (நடுவில்).

©Rotary.org

# நன்கொடைக்காக ₹16 லட்சம் திரட்டியது மதுரை இன்டராக்ட்

V முத்துகுமரன்



*இன்டராக்ட் உறுப்பினர்கள் பள்ளியில் உணவுக் கடைக்கு உணவு தயாரிக்கிறார்கள்.*

மதுரை, RID 3000, லட்சுமி பள்ளியின் இன்டராக்ட் சங்கம் நடத்திய இரண்டு நாள் தனித்துவமான நிதி திரட்டும் நிகழ்வில் 1,000க்கும் மேற்பட்ட மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்கேற்றனர். இந்த நிகழ்வு இந்தியாவிலுள்ள பள்ளி சங்கங்கள் தொண்டு நிகழ்ச்சிகளுக்காக நிதி மற்றும் வளங்களை திரட்டுவதற்கான ஒரு முன்மாதிரியாக அமைந்துள்ளது.

கேரிங் பியான்ட் கிளாஸ்ரூம்' என்று பெயரிடப்பட்ட இந்த பிரமாண்ட திருவிழாவில் (நவம்பர் 23–24, 2024) விளையாட்டு, கலை, அறிவியல் மற்றும் கலாச்சார நடவடிக்கைகளில் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுடன் இணைந்து மகிழ்ந்தனர். “இவை அனைத்தும் இன்டராக்ட் சங்கம் தொண்டுக்காக நிதி திரட்டுவதற்கான நிகழ்ச்சிகள்” என்று பள்ளி முதல்வர் P சுபாஷினி கூறுகிறார். ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான நிழல் பொம்மலாட்டம் பிளாஸ்டிக் பயன்பாட்டைத் தவிர்ப்பது, கைபேசிக்கு அடிமையாவது மற்றும் ஆரோக்கியமான உணவு மற்றும் வாழ்க்கை முறையின் அவசியம் ஆகியவற்றில் கவனம் செலுத்தியது; நடுநிலைப் பள்ளி மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்களுக்கு புராஜெக்ட் ரோபோட்டிக்ஸ் மின்னணு சர்க்யூட்கள், இன்ப்ராரெட் சென்சார், இயக்கவியல் போன்றவற்றை கிரேயா அமர்வுகள் மூலம் கற்பித்தது.

சிறப்பம்சங்களில் ஒன்று ஒரு நடமாடும் கோளரங்கம், இதில் பெற்றோர்களும் குழந்தைகளும் விண்வெளி ஆய்வு மற்றும் பிரபஞ்சத்தின் மர்மங்கள் பற்றிய 15 நிமிட டிரெய்லர் திரைப்படங்களைப் பார்த்தனர். விண்வெளிப் பயணம் மற்றும் வேற்றுக்கிரகவாசிகள் பற்றி அறியும் ஆர்வத்தைத் தூண்டும் ஒரு மெய்நிகர் ரியாலிட்டி நிகழ்ச்சியையும் இந்த நடமாடும் கோளரங்கத்தில் அவர்கள் கண்டு மகிழ்ந்தனர். கால்பந்து, த்ரோபால், கூடைப்பந்து மற்றும் டேபிள் டென்னிஸ் போன்ற கள விளையாட்டுகள் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களிடையே ஒரு பிணைப்பை உருவாக்கியது.

கலை – பேப்பர்கிராஃப்ட், ஃபோம் போர்டு பிரிண்டிங் – மற்றும் STEM

பட்டறைகளில் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் (9–12 வகுப்புகள்) தங்கள் பெற்றோருடன் கலந்துகொண்டு, அந்தந்த துறை நிபுணர்களுடன் கலந்துரையாடினர். மாலை ஒரு இசை நிகழ்ச்சியில், பாட்டு மற்றும் இசைக்கருவிகள் ஒரு மாயாஜாலத்தை உருவாக்கின. இறுதிநாளில் நிகழ்வை முடிக்குமுன், மூத்த தலைமை ஆசிரியர் சாந்தி மோகன் நடத்திய தொம்போலா குலுக்கல் போட்டி சிறப்பாக நடைபெற்றது.



*பள்ளியில் சணல் பொருட்கள் கடை.*

### முன்னோடிகள்

நவம்பர் நிதி திரட்டலில் ₹7.16 லட்சம் வசூலித்த இன்டராக்ட் சங்கம், இத்தொகையை TVS நிர்வாகத்தால் ஊக்குவிக்கப்படும் ஆரோக்கியா வெல்ஃபேர் டிரஸ்டின் ஒரு NGO பிரிவான கல்பதருவுக்கு வழங்கும். இந்த அமைப்பு முதியோர் இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் பின்தங்கிய கிராமப்புற பெண்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகிறது.

இந்த சங்கம் 18 வருடங்கள் பழமையானது என்றாலும், “கடந்த இரண்டு வருடங்களாகத்தான் நாங்கள் இந்த இரண்டு நாள் பிரமாண்ட நிகழ்ச்சியை நடத்தி வருகிறோம், எங்களது முதல் நிதி திரட்டலில் ₹9 லட்சம் வசூலித்தோம்” என்று இன்டராக்ட் சங்கத்தின் பொறுப்பாசிரியர் சிவராம்யா கூறுகிறார். “கடந்த மூன்று வருடங்களாக, இன்டராக்டர்கள் கல்பதருவுடன் இணைந்துள்ளனர், இது சிறப்பு இல்லங்கள் மற்றும் ஏழை குடும்பங்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் மற்றும் மானியங்களை திறமையாக விநியோகம் செய்வதற்கான தளவாடங்களையும் வசதிகளையும் கொண்டுள்ளது” என்று மதுரையில் உள்ள எட்டு லட்சுமி பள்ளிகளை நிர்வகிக்கும் TVS குழுமப்பள்ளிகளின் இயக்குநர் R ஸ்ரீனிவாசன் கூறுகிறார். RC மதுரை மிட் டவுனின் முன்னாள் தலைவரும், தற்போது RC பெங்களூரு JP நகரின் உறுப்பினருமான ஸ்ரீனிவாசன், TVS குழுமத்தின் நான்கு இன்டராக்ட் சங்கங்களின் ஒருங்கிணைப்பாளராகவும் உள்ளார். அனைத்து இன்டராக்ட் சங்கங்களும் RC மதுரை மிட் டவுனால் ஸ்பான்சர் செய்யப்படுகின்றன.

8ம் வகுப்பு மாணவன் ஆதிவ் ஜெயின் தாய் வினிதா, “இந்த பிரமாண்டமான காட்சி பல ஆண்டுகளாகத் தொடர வேண்டும், ஏனெனில் இந்த நிகழ்வு பங்கேற்பாளர்கள் மற்றும் பயனாளிகள் இருவருக்கும் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்துகிறது” என்றார். சங்கத்தலைவர் ஐஸ்வர்யா மீனா (11ம் வகுப்பு), “எங்கள் நிதி திரட்டும் முயற்சிகள் பங்கேற்பாளர்கள் மற்றும் பயனாளிகள் மத்தியில் வரும் ஆண்டுகளில் நிலையான மகிழ்ச்சியை உருவாக்குவதன் மூலம் நேர்மறையான மாற்றத்தை உருவாக்கும்” என்று நம்பிக்கையுடன் கூறுகிறார். ஒரு பொது விதியாக, 11ம் வகுப்பு மாணவர்கள் மட்டுமே சுமார் 550 உறுப்பினர்களைக் கொண்ட இன்டராக்ட் சங்கத்தின் அதிகாரிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள், அதன் உறுப்பினர்கள் அனைவரும் 9–12 வகுப்புகளைச் சேர்ந்தவர்கள் என்று முதல்வர் சுபாஷினி கூறுகிறார்.

25 வருடங்கள் பழமையான லட்சுமி பள்ளியின் இன்டராக்டர்களைப் பாராட்டிப் பேசிய ரோட்டரி ஃபவுண்டேஷனின் முன்னாள் உறுப்பினரும், 2001ல் RID 3000 மதுரையிலிருந்து ஒசாகா, ஜப்பானுக்கு GSE குழுவை வழி நடத்தியவருமான ஸ்ரீனிவாசன், “ரோட்டரியின் பள்ளிப்படை அதன் இலட்சியங்களுக்கு ஏற்ப உயர்ந்து, ரோட்டரி மதிப்புகளின் சிறந்த தூதர்களாகத் திகழ்கிறது” என்றார். பெங்களூரில் வசித்தாலும், “நான் எப்போதும் எனது இன்டராக்டர்கள் மற்றும் TVS பள்ளிகளின் மாணவர்களுடன் தொடர்பில் இருக்கிறேன்” என்றார்.■



*இன்டராக்ட் கிளப் ஆஃப் லட்சுமி பள்ளி தலைவர் ஐஸ்வர்யா மீனா (இடமிருந்து 5வது, பின் வரிசை) மற்றும் ஆசிரியர் சிவரம்யா மற்றும் உறுப்பினர்கள்.*



RC தானே ஹிரானந்தனி லெஜண்ட்ஸ் தலைவர் நிலேஷ் தஹிஃபுலே (நடுவில் அமர்ந்திருக்கிறார்) சங்க உறுப்பினர்களுடன் நிகழ்வு நடந்த இடத்தில்.







Rotary PEOPLE OF ACTION

# பழங்குடி மாணவர்களுக்கு ஆதரவளித்தல்

ஜெய்ஸ்ரீ

தானே மாவட்டம், ஷாஹாபூருக்கு அருகிலுள்ள ஒரு பழங்குடி கிராமத்திற்கு RC தானே ஹிரானந்தனி லெஜெண்ட்ஸ், RID 3142-ன் தலைவர் நிலேஷ் தஹிஃபுலே மற்றும் இரண்டு சங்க உறுப்பினர்கள் எதேர்ச்சையாக சென்றிருந்தனர். இதன் விளைவாக, சுற்றியுள்ள 19 கிராமங்களைச் சேர்ந்த 1250 இளம் குழந்தைகளுக்கு ஒரு நாள் உற்சாக நிகழ்ச்சி நடத்தப்பட்டது. “அங்குள்ள குழந்தைகளுடன் உரையாடிய போது, அவர்களின் இயல்பான திறமையையும் ஆர்வத்தையும் கண்டு ஆச்சரியப்பட்டோம். சரியான ஊக்கமும் வழிகாட்டுதலும் இருந்தால், அவர்கள் ஒரு நல்ல எதிர்காலத்தை உருவாக்க உதவ முடியும். மேலும் உள்ளூர் பள்ளிகளில் அர்ப்பணிப்புள்ள ஆசிரியர்கள் இருப்பதால் கற்றலுக்கு ஒரு வலுவான அடித்தளத்தை அமைத்துள்ளது. அப்போது தான் மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்துவதோடு அவர்களின் மன மற்றும் உடல் நலனில் கவனம்











செலுத்துவதற்காக 'நவ்ரங் திட்டத்தைத் திட்டமிட்டோம். நகர்ப்புற குழந்தைகளைப் போலல்லாமல், இந்த குழந்தைகள் முதன்முறை கற்பவர்கள் மற்றும் பிரகாசமான எதிர்காலத்தை வடிவமைக்க கூடுதல் கவனிப்பு தேவை" என்று தஹிஃபுலே கூறினார்.

முதலில், பல்வேறு குக்கிராமங்களில் உள்ள பொதுத் தேர்வுகளுக்குத் தயாராகும் 10-ம் வகுப்பு மாணவர்களுக்கு சங்கம் முன்னுரிமை அளித்தது. ஆசிரியர்களும் சில பெற்றோர்களும் ஷாஹாபூரில் உள்ள ஒரு கலையரங்கிற்கு அவர்களுடன் சென்றனர், அங்கு ஒன்பது சிறப்பு அமர்வுகள் நடத்தப்பட்டன. "ஒவ்வொரு மாணவரும் வீட்டு வாசலில் இருந்து அழைத்துச் செல்லப்பட்டு மீண்டும் வீட்டிற்கு கொண்டு செல்லும்படி போக்குவரத்தை ஏற்பாடு செய்தோம்" என்று தஹிஃபுலே கூறினார்.

அவர்களின் தன்னம்பிக்கையை அதிகரிக்கவும், முறையான வழியில் படிக்கவும் சங்கம் மாநில பாடத்திட்டத்துடன் இணைந்த ஒரு படிப்பு செயலியை அறிமுகப்படுத்தியது.

ஒரு தொழில் வழிகாட்டுதல் கருத்தரங்கம் அவர்களுக்கு உதவித்தொகை, உயர் கல்வி வாய்ப்புகள் மற்றும் நிறுவனங்கள் பற்றிய தகவல்களை வழங்கியது. அமர்வின் ஆசிரியரான ஷரத் வடேகர், பாடங்களை எவ்வாறு சிறிய பகுதிகளாகப் பிரித்து நன்கு புரிந்துக்கொள்வது என்றும் மாணவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்.

கல்வியைத் தாண்டி, இந்நிகழ்ச்சி இளம் மனங்களை பாதிக்கும் முக்கியமான பிரச்சினைகளையும் கையாண்டது. சங்க உறுப்பினர் அனுஜ் யாதவ் போதைப்பொருள் பயன்பாடு குறித்து ஒரு அமர்வு நடத்தி, அதில் அதிகப்படியான மொபைல் பயன்பாடு மற்றும் சமூக ஊடகங்களை தவறாக பயன்படுத்துவதால் ஏற்படும் ஆபத்துகள் குறித்து மாணவர்களை எச்சரித்தார். மனநல நிபுணர்களுடன் மாணவர்களை இணைக்க ஒரு QR குறியீடு பகிரப்பட்டது. இந்த மனநல செயலி RID 3142-ன் ஒரு முன்முயற்சியாகும்.

ஒரு மருத்துவ முகாமில் மாணவர்கள் தலசீமியா மற்றும் இரத்த சோகைக்காக பரிசோதிக்கப்பட்டனர். "சுமார் 20 குழந்தைகளுக்கு இந்த குறைபாடுகளில் ஒன்று இருப்பது கண்டறியப் பட்டது, மேலும் தானே சிவில் மருத்துவமனையில் அவர்களின் சிகிச்சைக்கு உதவ முன்வந்துள்ளோம்" என்று தஹிஃபுலே கூறினார்.

டாக்டர் விஸ்வநாத் ராஜ்புத் நடத்திய CPR முதலுதவி அமர்வு குழந்தைகள் மற்றும் ஆசிரியர்களிடமிருந்து உற்சாகமான வரவேற்பைப் பெற்றது. "இந்த குழந்தைகள் குறைந்த மருத்துவ வசதிகள் உள்ள தொலைதூர கிராமங்களிலிருந்து வருவதால், அவர்களுக்கு உயிர்காக்கும் முதலுதவி திறன்களை வழங்க விரும்புகிறோம்" என்று திட்டத்தலைவர் தீரஜ் மஹாத்ரே விளக்கினார்.

குறைந்த வளங்கள் இருந்த போதிலும் குழந்தைகளுக்கு கற்பிப்பதில் அவர்களின் அர்ப்பணிப்பிற்காக பழங்குடி அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த 16 ஆசிரியர்களை சங்கம் கவுரவித்தது. பார்வையாளர்களுக்கு காலை, மதிய உணவு மற்றும் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன; மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் மற்றும் எழுது பொருட்கள் விநியோகிக்கப்பட்டன. "குழந்தைகள் பொழுதுபோக்கு அமர்வின் போது பாடுவதையும் நடனமாடுவதையும் பார்ப்பது மனதிற்கு இதமாக இருந்தது. அவர்களின் தேர்வுகள் நெருங்கி வருவதால், ஊக்கமளிக்கும் இந்த பட்டறைகள் அவர்களுக்கு நிச்சயமாக உதவும். அடுத்த ஆண்டும் நவ்ரங் திட்டத்தைத் தொடர திட்டமிட்டுள்ளோம்" என்று தஹிஃபுலே கூறினார். ■

Rotary PEOPLE OF ACTION

# இந்தியா–பாகிஸ்தான் ரோட்டேரியன்களிடம் பிணைப்பை ஏற்படுத்திய கர்தார்பூர் சாகிப் பயணம்

ரஷீதா பகத்

RI மாவட்டம் 3055 மற்றும் இந்தியா முழுவதும் உள்ள பிற மாவட்டங்களைச் சேர்ந்த 34 உறுப்பினர்களைக் கொண்ட ரோட்டேரியன்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினர் சமீபத்தில் ஆன்மிகம் மற்றும் நட்புறவுப் பயணமாக பாகிஸ்தானில் உள்ள கர்தார்பூர் சாகிப் புனிதத்தலத்துக்கு சென்றுவந்தனர். “நாங்கள் அங்கு லாகூர் மற்றும் வேறு சில பகுதிகளைச் சேர்ந்த சுமார் 60 பேர் கொண்ட ரோட்டேரியன்கள் அடங்கிய குழுவினரை சந்தித்தோம். அவர்களுடன் இரண்டு மணிநேரத்தை செலவிட்டோம். கொடிகளை பரிமாறிக் கொண்டோம். அவர்களுடன் சேர்ந்து



உணவு சாப்பிட்டோம். இந்தப் பயணத்தின்போது ஆன்மிகத்தையும் ஒற்றுமையையும் கொண்டாடியதுடன் மட்டும் நில்லாமல், சர்வதேச அமைதி. சேவை மற்றும் சர்வதேச கூட்டுறவையும் வலியுறுத்துவதாக இருந்தது” என்றார் ஆமதாபாத் ஹெரிடேஜ் ரோட்டரி சங்கத்தின் செயலர் ஹரிஷ் தேக்சந்தானி.

“இது ஒரு மறக்கமுடியாத நிகழ்வு. எல்லைதாண்டிய உறவுகளை வளர்ப்பதின் கூட்டுறவின் சக்தியை அடிக்கோடிட்டு காட்டுகிறது” என்று குறிப்பிட்ட அவர், இந்திய ரோட்டேரியன்களை தங்களது பூமியில் வரவேற்க ஆர்வமாக காத்திருந்தனர் பாகிஸ்தான் ரோட்டேரியன்கள். இதில் திட்டமிடலும் ஒருங்கிணைப்பும் இருந்தது. பாகிஸ்தானில் ரவி நதிக் கரையில் அமைந்துள்ள கர்தார்பூர் சாகிப், ஆழ்ந்த மத மற்றும் கலாசார முக்கியத்துவம் கொண்டது. சீக்கிய மதத்தின் நிறுவனத் தலைவர் குருநானக் தேவ் துயில் கொள்ளும் இடமாகவும் இருக்கிறது. சீக்கியர்கள் மட்டும் அல்ல, பல்வேறு சமூகத்தினரும் இங்கு வந்து செல்கிறார்கள். நான் ஒரு சிந்தி. எங்கள் குழுவில் சீக்கியர்கள் அல்லாத இதர குழுவினரும் உள்ளனர்.




நம்பிக்கையும் பக்தியும் எங்கள் இதயங்களில் இருந்தது. பிரார்த்தனை செய்தபடியே நாங்கள் அனைவரும் அங்கு சென்றோம்” என்றும் அவர் கூறினார்.

விசா பெறுவதில் சிக்கல்கள் இருந்ததா என்று கேட்டபோது, கர்தார்பூர் சாகிப்புக்கு பயணம் மேற்கொள்ள விசா தேவையில்லை. ஆனால், நாங்கள் சென்ற நாளின் மாலைக்குள் அங்கிருந்து திரும்பிவிட வேண்டும் என்பதுதான் நிபந்தனையாக இருந்தது என்று அவர் விளக்கினார். உரிய ஆவணங்களுடன் நீங்கள் மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு விண்ணப்பிக்க வேண்டும். பயணம் மேற்கொள்வதற்கு முன்பாக போலீஸ் விசாரணை நடத்தப்பட்டு அனுமதி வழங்கப்படும். அமிர்தசரசிலிருந்து இரண்டு மணி நேர பேருந்து பயணம் மூலம் இந்தியா-பாகிஸ்தான் எல்லைப் பகுதியை அவர்கள் அடைந்தனர். அங்கு அவர்களின் குடியுரிமை தொடர்பான ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டன. பாகிஸ்தான் இன்னமும் போலியோவிலிருந்து விடுதலை பெற்ற நாடாக அறிவிக்கப் படாததால், எங்கள் குழுவினரைச் சேர்ந்த அனைவருக்கும் போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டது. அங்கிருந்து BSF மின்சார வாகனம் மூலம் பாகிஸ்தான் எல்லையில் இறக்கி விடப்பட்டோம். அங்கிருந்து நடந்து பாகிஸ்தான் எல்லைக்குள் சென்றோம். சிறிது தூரம் சென்ற பிறகு, பாகிஸ்தான் எல்லை கண்காணிப்பு வீரர்களின் பேருந்து எங்களை ஏற்றிக் கொண்டு 4 கி.மீ. தொலைவில் இருந்த கர்தார்பூர் சாகிப்பில் எங்களை இறக்கிவிட்டது.

கர்தார்பூர் சாகிப் புனிதத்தலத்தில் பாகிஸ்தான் ரோட்டேரியன்கள் எங்களுக்காக காத்திருந்தனர். ஆமதாபாத் ஹெரிடேஜ் ரோட்டரி சங்கத்தின் தலைவர் ராஜிவ் குலாதி, அனைவரையும் அறிமுகப்படுத்திய பின் RID 3055 மாவட்ட ஆளுநர் மோகன் பராசர் அனுப்பியிருந்த சிறப்புச் செய்தியையும் வாசித்தார்.

அமிர்தசரஸிலிருந்து கர்தார்பூர் வளாகத்துக்கான பயணம் கவனமாக ஒருங்கிணைக்கப்பட்டிருந்தது, இது ஒரு ஆன்மீகப் பயணம் மட்டுமல்ல,

ரோட்டரியின் சர்வதேச வரம்பை, வல்லமையை நிரூபிப்பதாகவும் அமைந்திருந்தது என்கிறார் சங்கத்தின் தலைவர் ராஜிவ் குலாதி.

இந்த பயணத்தின் மனதைக் கவரும் அம்சம் என்னவென்றால் பாகிஸ்தானில் உள்ள ரோட்டேரியன்கள் எங்களுக்கு அளித்த உற்சாக வரவேற்பு. பாகிஸ்தான் குழுவில் மூன்று PDGs மற்றும் DGN இடம் பெற்றிருந்தனர். சிந்து அமைதிப்பூங்காவின் ஒருங்கிணைப்பாளர் அனில்காய் மற்றும் சங்கத்தின் தலைவர் குலாதி இருவரும் முழு நிகழ்வையும் திட்டமிட்டு செய்தனர். கொடிகள் பரிமாற்றம் தவிர ரோட்டேரியன்கள் பரிசு களையும் பரிமாறிக்கொண்டனர். பாகிஸ்தானியர்களுக்கு குஜராத்தின் சுவையான காக்ராக்கள் வழங்கப்பட்டன. இந்தியர்கள் அவர்களிடமிருந்து அழகான சால்வைகளை பரிசாகப் பெற்றனர் என்று தேக்சந்தானி தெரிவித்தார்.



*RC அகமதாபாத் ஹெரிடேஜ் தலைவர் ராஜீவ் குலாட்டி (வலமிருந்து இரண்டாவது) மற்றும் செயலாளர் ஹரிஷ் தேக்சந்தானி (வலமிருந்து மூன்றாவது) கர்த்தார்பூர் சாஹிப் குருத்வாராவில் லங்கர் பிரசாதத்தை சாப்பிடுகிறார்கள்.*

அன்றைய நாளின் இறுதியில் ஒரு சிறந்த ஆன்மிக பயண அனுபவம் தவிர, இரு தரப்பையும் சேர்ந்த ரோட்டேரியன்களும் சிறந்த தருணங்களைக் கொண்டிருந்தனர். கர்தார்பூர் சாகிப்பில் லாங்கர் பிரசாதத்தை பகிர்ந்துகொண்டது, சாதி, மதம் மற்றும் கலாசார வேறுபாடுகளை மறந்து மனித நேயத்தை பகிர்ந்து கொண்டது என்றென்றும் நினைவில் கொள்ளப் படும் என்று அவர் மேலும் கூறினார்.

பஹல்கம் சுற்றுலாப் பயணிகள் மீது நடத்தப்பட்ட கொடூரமான பயங்கரவாத தாக்குதல் மற்றும் இந்தியா-பாகிஸ்தான் எல்லைகள் மூடப்பட்டதைத் தொடர்ந்து, இந்தியர்கள் சிறிது காலத்திற்கு கர்தார்பூர் சாஹிப்பை அடைய முடியாது.■



Rotary

# ரோட்டரி சங்கம் தான் ரோட்டரியின் இதயமும், அடித்தளமும்.

சங்கத்தின் **ஒற்றுமைக்கும்**
**வளர்ச்சிக்கும்** நீங்கள் பாடுபடுங்கள்.

**வெளிச் சங்கத்தினரின் கருத்தோ,
பதவியிலுள்ளவர்களின் அரசியலோ,
உங்கள் சங்க முடிவுகளில்
தலையிடவோ, ஊடுருவவோ
அனுமதிக்க வேண்டாம்.**



**அதிகாரம் அல்ல சேவையே
நமக்குப் புனித வழிகாட்டி.**

நம் ரோட்டரி சங்கத்தை
வலிமைப்படுத்தி,
ஒருங்கிணைந்த ரோட்டரியை
வளர்ப்போம்.

**Rtn. AKS டாக்டர் கே. ஸ்ரீநிவாசன்**
ரோட்டரி திருச்சிராப்பள்ளி &
ஈரோடு சென்ட்ரல், மண்டலம் 5

ADVT.

# பேரழிவு தயார்நிலை பாடங்கள்

## கிரண் ஜெஹரா

“நான் இதுவரை ஒரு தீயணைப்பானை பிடித்ததே இல்லை. இது ஒரு புதிய அனுபவமாக இருக்கும்” என்று தாராப்பூரில் உள்ள தீப் குளோபல் பள்ளியின் 9-ம் வகுப்பு மாணவியும், இன்டராக்ட் சங்கத்தின் உறுப்பினருமான சிவானி சிங் எண்ணினார். அந்த சிவப்பு நிற சிலிண்டர் அவர் எதிர்பார்த்ததை விட கனமாக இருந்தது. பயிற்றுவிப்பாளரின் வழிகாட்டுதலின்படி, அவர் கட்டுப் படுத்தப்பட்ட தீயின் அடிப்பகுதியை நோக்கி குழாயை வைத்து நெம்புகோலை அழுத்தினார். நுரை பீறிட்டு தீயை அணைத்தது. “நான் ஒரு மார்வெல் அவெஞ்சரைப் போல் உணர்ந்தேன்,” என்று அவர் கூறுகிறார். அவள் திரும்பிப் பார்த்தபோது, 150 மாணவர்கள் அமைதியாகப் பார்ப்பதை உணர்ந்தார். “அப்போதுதான் எனக்குப் புரிந்தது - இது ஒரு சாதாரணப் பள்ளி நிகழ்வல்ல. அவசரநிலையில் உயிர்களை மீட்க கற்றுக்கொள்கிறோம். நாங்களும் உண்மையான அவெஞ்சர்களாக மாறிக்கொண்டு இருக்கிறோம்” என்று புன்னகைக்கிறார்.

“இந்த தயார்நிலை உணர்வையும், நோக்கத்தையும் மாணவர்களுக்கு ஊட்டுவதே எங்கள் சங்கம் நடத்திய RYPEN 2025 (ரோட்டரி யூத் புரோகிராம் ஃபார் என்ரிச்மெண்ட்) நிகழ்வின் முக்கிய நோக்கமாக இருந்தது” என்று திட்டத்தலைவரும் RC போய்சார் தாராபூர், RID 3141 உறுப்பினரான டாக்டர் பராக் குல்கர்ணி கூறினார்.

மகாராஷ்டிராவின் பால்கர் மாவட்டத்தில் உள்ள தாராபூர் இண்டஸ்ட்ரீஸ் மேனுஃபேக்சரர்ஸ் அசோசியேஷன் ஹாலில் (TIMA) நடத்தப்பட்ட இந்த நிகழ்வு, 14 பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களை அத்தியாவசிய உயிர்காக்கும் திறன்களைக் கற்க ஒன்றிணைத்தது. “முந்தைய RYPEN நிகழ்வுகள் தலைமைத்துவ வளர்ச்சியில் கவனம் செலுத்தியிருந்தன. ஆனால், இந்த ஆண்டின் கருப்பொருள் பேரழிவுகளுக்கு தயாராக இருப்பது. மாணவர்கள் விரிவுரைகளை எதிர்பார்த்தார்கள், ஆனால் அதற்கு பதிலாக, ஒவ்வொரு நொடியும் முக்கியத்துவம் வாய்ந்த நிஜ வாழ்க்கை அவசரநிலைகளை அவர்கள் எதிர்கொண்டார்கள்” என்று அவர் கூறுகிறார்.






**இடமிருந்து:** CPR *நிர்வாகம், தீயணைப்பு கருவியைப் பயன்படுத்துதல் மற்றும் சுகாதார அவசர நிலையைக் கையாளுதல் ஆகியவை விளக்கப்படுகின்றன.*

“தாராப்பூர் ஒரு சாதாரண நகரம் அல்ல. நான்கு அணு மின் உலைகளும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளும் உள்ள இந்நகரம், பல்வேறு அபாய நிகழ்வுகளை எதிர்கொண்டுள்ளது. இது தூங்கும் நகரங்கள் என அழைக்கப்படும் பால்கர், டஹானு ஆகிய பகுதிகளுக்கு இடையே அமைந்துள்ளது. அவை அதிக ஆபத்துள்ள அணுசக்தி வசதிகள் என்பதால், தாராபூர் எப்போதும் விழிப்புடன் இருக்கிறது. அவசரநிலை ஏற்பட வாய்ப்பு இருக்கிறதா என்பது கேள்வி அல்ல, அது நிகழும்போது மாணவர்கள் தயாராக இருக்கிறார்களா என்பதுதான் கேள்வி” என்று குல்கர்ணி விளக்குகிறார்.

நிகழ்வை ஒருங்கிணைத்த சந்தியா ஷஹாபுரே கூறுகிறார்: “அவசரநிலை எதுவாக இருந்தாலும், அது வயது, பாலினம், சமுதாயம் போன்றவற்றைப் பார்க்காது. பேரழிவுகள் எங்கேயும் நேரலாம் – பள்ளியில், வீட்டில் அல்லது பொது இடங்களில். மாணவர்களுக்கு இளம் வயதிலேயே பயிற்சி அளிப்பது உயிர்காக்கும் திறன்களை மனதில் பதிய வைக்க உதவுகிறது. பொதுமக்களுக்கு பேரிடர் தயார்நிலை குறித்து கற்பிப்பது சவாலானதாக இருந்தாலும், மாணவர்கள் ஒரு கட்டமைக்கப்பட்ட சூழலில் இருப்பதால், அவர்களை ஈடுபடுத்துவது எளிதாகிறது.”

குல்கர்னி மற்றும் சங்கத்தலைவர் விலாஸ் ஷாஹாபூரே தலைமையிலான இந்த நிகழ்வு உயிர்காக்கும் திறன்களில் நேரடிப் பயிற்சியை வழங்குவதற்காக கவனமாக கட்டமைக்கப்பட்டது. முதல் அமர்வு தீயணைப்புப் பணியில் கவனம் செலுத்தியது, இதில் PB பாட்டில் தலைமையிலான தாராபூர் தீயணைப்புப் படை, தீயை அணைப்பது, தீக்காயங்களைத் தடுப்பது மற்றும் புகை நிறைந்த கட்டிடங்களிலிருந்து தப்பிப்பது எப்படி என்று செய்து காட்டினர்.

அடுத்து, மாணவர்கள் பால்கரின் துணை கட்டுப்பாட்டாளர் மற்றும் ஜனாதிபதி விருது பெற்ற KR குர்குடே மற்றும் சிவில் பாதுகாப்பு படையின் அதிகாரி நிலேஷ் S வாஸ் ஆகியோரிடமிருந்து மீட்புப் பணிகளைப் பற்றி கற்றுக்கொண்டனர். மாணவர்கள் நீர் மீட்பு, உயரமான கட்டிடங்களிலிருந்து வெளியேறுவது மற்றும் அதிகப்படியான இரத்தப் போக்கை நிறுத்துவது ஆகியவற்றில் பயிற்சி பெற்றனர். “ஒரு சட்டையை தற்காலிக ஸ்ட்ரேசராக மாற்றுவது எவ்வளவு எளிது என்பதை உணர்ந்தபோது மாணவர்கள் ஆச்சரியப்பட்டனர்” என்று குல்கர்னி கூறுகிறார்.

மருத்துவ அவசர உதவிக்கான அமர்வில், CPR, முதலுதவி மற்றும் காயத்தை டிரெஸ்ஸிங் செய்தல் ஆகியவற்றில் மாணவர்களுக்கு குல்கர்னி பயிற்சியளித்தார். சின்மயா வித்யாலயாவைச் சேர்ந்த 9-ம் வகுப்பு மாணவர் வைபவ் பியூஷ் மாலிக், ஒரு பொம்மையின் மீது CPR பயிற்சி செய்துவிட்டு, “மருத்துவர்கள் மட்டுமே இதைச் செய்வார்கள் என்று நினைத்தேன். ஆனால் இப்போது என்னாலும் ஒரு உயிரைக் காப்பாற்ற முடியும்” என கூறினார்.

IPCA லேபாரட்டரீஸ், பாகேரியா இண்டஸ்ட்ரீஸ் மற்றும் மோஹினி ஆர்கானிக்ஸ் ஆகியவற்றின் CSR ஆதரவுடன் இந்த நிகழ்வு சாத்தியமானது, ரூ.50,000 செலவில் அனைத்து பொருட்களும், போக்குவரத்து வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டது. சங்கம் பங்கேற்பாளர்களுக்கு உணவு வழங்கியது.

இந்நிகழ்வில் இளைஞர் சேவைக்கான மாவட்ட தலைவர் ஆனந்த் ராம்னானி மற்றும் உதவி ஆளுநர் நினத் சேவ் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.■







# நகரத்தின் சுவர்களை வண்ணமயமாக்குதல்

ரஷீதா பகத்





தாங்கள் வசிக்கும் நகரத்தை அழகுபடுத்துவதற்கும், பொது இடங்களில் சுவர்களில் கிறுக்குவது, துப்புவது மற்றும் பிற இழிவான செயல்களைத் தடுக்கும் முயற்சியாகவும், RC தலேகான் தபாடே உறுப்பினர்கள் சமீபத்தில் பள்ளி குழந்தைகளிடையே சுவர் ஓவியப் போட்டியை நடத்தினர், அது மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது.

நகரத்தில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் சங்கம் விடுத்த இந்த அழைப்பில், 21 பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 80 குழந்தைகள் பங்கேற்றனர், இதன் விளைவாக நகரத்தின் சில பகுதிகளில் பிரகாசமான, வண்ணமயமான மற்றும் மகிழ்ச்சியான தோற்றமுடைய சுவர்கள் உருவாகி நகரின் அழகியலை மேம்படுத்தியுள்ளன.

திட்டத்தைப் பற்றி விளக்கிய சங்கத்தலைவர் கமலேஷ் கார்லே, தனது











அடிப்படை நோக்கம் “நாம் சுத்தமான மற்றும் அழகான நகரத்தில் வாழ்வதை உறுதி செய்வதே” என்று கூறினார். “நான் சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு புனேவிலிருந்து சுமார் 35 கி.மீ தொலைவில் உள்ள தலேகானுக்கு குடிபெயர்ந்தேன். நகரத்தில் பல சுவர்கள் அழுக்காக இருப்பதைக் கவனித்தேன். இவற்றை சமூக ரீதியாகவும் சுற்றுச்சூழல் ரீதியாகவும் பொருத்தமான செய்திகளை கொண்ட துடிப்பான ஓவியங்களாக ஏன் மாற்றக்கூடாது என்று நினைத்தேன்.”

பிப்ரவரி 25 ஆம் தேதி நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு முன்னதாக, 33 ஆண்டுகள் பழமையான இந்த சங்கத்தின் உறுப்பினர்கள் சுவர்களை சுத்தம் செய்யும் பணியை மேற்கொண்டனர். புனேவில் அவரது தாத்தாவால் நிறுவப்பட்ட மற்றும் அவரது அத்தை கலை கற்பிக்கும் ஒரு நுண்கலை பள்ளியுடன் தொடர்பு இருந்ததால், அவர்களின் மாணவர்களில் ஒருவரை கண்டுபிடிக்குமாறு தனது அத்தையிடம் கேட்டுக்கொண்டார். அவர் வணிகக் கலைஞரான ஓம்கார் ஜாதவை அடையாளம் காட்டினார், அவர் சுவர் ஓவியத் திட்டத்திற்கு உதவ ஒப்புக் கொண்டார். அடையாளம் காணப்பட்ட சுவர்களில் ஒரு தொலைபேசி அலுவலகம், ஒரு பள்ளி, ஒரு மருத்துவமனை மற்றும் ஒரு மயானத்தின் சுவர்கள் கூட அடங்கும். சங்க உறுப்பினர்கள் சுமார் ரூ.1.29 லட்சம் செலவான திட்டத்திற்கான தொகையை வழங்கினர்.

தலேகான் நகராட்சி மன்றத்துடன் இணைந்து பணியாற்றிய சங்கம், காற்று, மண், நீர், நகர்ப்புற கழிவு மேலாண்மை மற்றும் மரங்களை வளர்ப்பதன் முக்கியத்துவம் உள்ளிட்ட சுவர் ஓவியங்களுக்கான முக்கிய சுற்றுச்சூழல் கருப்பொருள்களை அடையாளம் கண்டது.

இந்த திட்டத்தின்போது, ஒவ்வொரு பங்கேற்கும் பள்ளியிலிருந்தும் 10 மாணவர்கள், அவர்களது கலை ஆசிரியர்களுடன், கவனம் செலுத்த ஒரு குறிப்பிட்ட கருப்பொருள் ஒதுக்கப்பட்டது. அவர்கள் தங்கள் கருத்துக்களை காகிதத்தில் உருவாக்க 10 நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டது, மேலும் மதிப்பாய்வு மற்றும் சிறிய மாற்றங்களுக்குப் பிறகு, அவர்கள் தங்கள் வடிவமைப்புகளை சுவர்களில் உயிர்ப்பிக்க அனுமதிக்கப்பட்டனர். சுவர் ஓவியத்தில் நிபுணத்துவம் பெற்ற ஜாதவ், ஐந்து அடிப்படை வண்ணங்களிலிருந்து வெவ்வேறு ஷேடுகளை எவ்வாறு தயாரிப்பது என்று மாணவர்களுக்குக் கற்பித்தார். வண்ணக் கலவை நுட்பத்தின் கருத்தை அவர்கள் புரிந்துகொண்ட பிறகு, மாணவர்கள் சுவர்களில் தங்கள் வடிவமைப்புகளை வரைவதற்கான பணியைத் தொடங்கினர்.

திட்டத்தை மேற்பார்வையிட்ட சங்க உறுப்பினர் ஷர்மிளா ஷா கூறுகையில், “இது மிகவும் வெற்றிகரமாக அமைந்தது, நகரத்தை அழகுபடுத்தும் எந்தவொரு முயற்சியை நீங்கள் மேற்கொண்டாலும் தயவுசெய்து எங்களையும் ஈடுபடுத்துங்கள் என்று கூறி தன்னார்வலர்கள் வருகிறார்கள். கோடை விடுமுறை முடிந்ததும் ரோட்டேரியர்கள் இதுபோன்ற மற்றொரு நிகழ்வைத் திட்ட மிட்டுள்ளனர், மேலும் நாங்கள் ஆச்சரியப்படும் வகையில், ஒரு உள்ளூர் வண்ணப்பூச்சு நிறுவனம் இதுபோன்ற ஒரு நிகழ்வுக்கு வண்ணப்பூச்சு ஸ்பான்சர் செய்ய முன்வந்துள்ளது” என்றார்.

அடுத்த திட்டத்தில் ரயில் நிலையத்தில் உள்ள ஒரு அழுக்குச் சுவரை அழகுபடுத்தும்படி பல குடியிருப்பாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் என்று கார்லே மேலும் கூறினார்.■

# தொழில்நுட்ப மாற்றத்திற்கு தயாராகிறது ரோட்டரி

V முத்துகுமரன்

மாறிவரும் காலங்களுக்கு ஏற்ப, உலகளாவிய சமூகத்தில் தனது செயல்பாட்டின் மூலம் தாக்கத்தை ஏற்படுத்த ரோட்டரி, தொழில்நுட்ப மாற்றத்திலும் கவனம் செலுத்த வேண்டும் என்று RI இயக்குநர் அனிருதா ராய்சௌதுரி தெரிவித்தார். "சமீபகாலங்களில் RI-இன் 6 இணைய முகப்புகள் அதாவது மை ரோட்டரி, ரோட்டரி இன்டர்நேஷனல் வலைத்தளம், கிளப் சென்ட்ரல், ரோட்டரி ஷோகேஸ், பிராண்ட் சென்டர் மற்றும் ரோட்டரி கற்றல் மையம் ஆகியவை தொழில்நுட்ப ரீதியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இவை வெறும் தொழில்நுட்பக் கருவிகள் மட்டுமல்ல, ஆனால், தொடர்புகள் செம்மைபடுத்தப்பட்டு, எதிர்காலத்தில் நாம் திறமையாகச் செயல்பட நம்மை தயார் படுத்தும் வழிகள்" என்று RID 3233 சார்பில் சென்னையில் மூன்று நாட்கள் நடைபெற்ற "நவரத்னா" மாவட்ட மாநாட்டின் தொடக்க நிகழ்ச்சியில் பிரதிநிதிகள் இடையே பேசுகையில் அவர் கூறினார்.

டிஜிட்டல் மாற்றம் என்பது இனி ஒரு விருப்பமல்ல, ஆனால், ரோட்டரிக்கு மிகவும் தேவையானது. கடந்த பத்து ஆண்டுகளில் ரோட்டரி இன்டர்நேஷனல் வாரியம் காலத்திற்கு ஏற்றவாறு சில முக்கிய முடிவுகளை எடுத்துள்ளது. உறுப்பினர்கள் சேர்க்கை மற்றும் சேவைத் திட்டங்களில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து அறிய "ரோட்டரி கற்றல் மையம்" இணையதளத்தை பார்க்குமாறு உங்களை நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். அமெரிக்க நிதியுதவியை நிறுத்தும் அதிபர் டொனால்டு டிரம்பின் அதிரடி முடிவினால் பல அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் சுகாதாரத் திட்டங்களை வெகுவாக பாதிக்கும். ஆனால், ரோட்டரி மூத்த தலைமையும், ஊழியர்களும் இதனால் ஏற்படும் பாதிப்புகளை கருத்தில் கொண்டிருந்தாலும், போலியோ ஒழிப்பு உள்ளிட்ட சுகாதார திட்ட முயற்சிகளை எந்த தொய்வும் இல்லாமல் தொடர முடிவு செய்துள்ளனர்.

RID 3231 (DG M ராஜன்பாபு) மற்றும் 3234 (DG N S சரவணன்) இருவரும் நடத்திய மாவட்ட மாநாட்டில் பங்கேற்றதை நினைவு கூர்ந்த RI இயக்குநர், "RID 3230, 2016–17-ம் ஆண்டில் 5,000 உறுப்பினர் களுக்கு மேல் இருந்ததால் இரண்டாக பிரிக்கப்பட்டதாக கூறினார். அடுத்த 9 ஆண்டுகளில் புதிதாக தொடங்கப்பட்ட RID 3232-ல் 6,000 உறுப்பினர்களுக்கு மேல் இருந்தனர். இப்போது இந்த மூன்று மாவட்டங்களிலும் சேர்த்து மொத்தம் 12,000 உறுப்பினர்களுக்கு மேல் உள்ளனர். இது மண்டலம் ஐந்தில் மிகப்பெரியது. இவ்வளவு பெரிய வளர்ச்சிக்கு வழிவகுத்த உங்கள் அனைவரையும் நான் வணங்குகிறேன். ஆனால், இருக்கும் உறுப்பினர்களை



*PDG I S A K நாசர்; RIPR ஜான் டேனியல், அவரது மனைவி மீரா; ஜெயஸ்ரீ மற்றும் DG மகாவீர் போத்ரா; தி இந்து நாளிதழின் முன்னாள் ஆசிரியர் N ரவி; சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி பாரத சக்கரவர்த்தி; இஸ்ரோ தலைவர் V நாராயணன்; MSSRF தலைவர் சவுமியா சுவாமிநாதன்; டிஸ்கான் தலைவர் K வெங்கடேசன்; DGN ஸ்ரீராம் துவுரி; மற்றும் DGND கணபதி சுரேஷ்.*

தக்கவைத்துக் கொள்வதில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

DG மகாவீர் போத்ராவுக்கு ஒரே ஒரு குறிக்கோள்தான். அது உறுப்பினர் சேர்க்கை. அவரது சீரிய முயற்சியால் RID 3233 தற்போது மண்டலம் ஐந்தில் இரண்டாவது மிகப்பெரிய மாவட்டமாக உள்ளது. மொபைல் போனில் ரோட்டரி சக்கர ஸ்டிக்கர், ரோட்டரி கடிகாரம், ரோட்டரி மணிக்கூண்டு, அமைதி கம்பங்கள், ரோட்டரி பேருந்து நிறுத்தம், ரோட்டரியின் சேவைத் திட்டங்களை நகரப் பேருந்துகளில் விளம்பரப்படுத்துவது, திரையரங்குகளில் ரோட்டரி விளம்பரக் காட்சிகளுக்கு ஏற்பாடு செய்வது என ரோட்டரியின் நன்மதிப்பை மேம்படுத்தும் செயல்களில் ஆர்வம் காட்டினார்.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் RI அறிமுகப்படுத்திய கட்டமைக்கப்பட்ட திட்டங்களில் புதிய உறுப்பினர்களை ஈடுபடுத்துமாறு போத்ரா மற்றும் அவரது குழுவினரை ராய்சௌதுரி வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார். இ-சங்கங்கள், சாட்டிலைட் சங்கங்கள், கார்ப்பொரேட் மற்றும் நோக்கத்தின் அடிப்படையிலான சங்கங்கள் என ரோட்டரியை தொலைதூரப் பகுதிகளுக்கு விரிவுபடுத்துமாறும் அவர் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார். ரோட்டரி DEI கொள்கைகளில் (பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் உள்ளடக்கம்) உறுதி பூண்டுள்ளதால் சங்கங்கள் உறுப்பினர்களிடையே கலாசார உறவுகளை வளர்க்க வேண்டும். தங்கள் மாவட்டம் சேவை, தலைமை மற்றும் மாற்றத்தின் ஒளிவிளக்காக திகழ வேண்டுமானால் அவர்கள் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும் என்றும் கூறினார்.

### சுவையான விருந்து

RID 3233 சார்பில் நடந்த இந்த முதல் மாவட்ட மாநாடு, ஒருபுறம் ஊக்கப்படுத்தும் பேச்சாளர்கள், ஆன்மிக சொற்பொழிவாளர்கள் மற்றும் கல்வித்துறை நிபுணர்கள் எனவும். மற்றொருபுறமும் செயற்கை நுண்ணறிவு (AI) போன்ற நவீன தொழில்நுட்ப தளங்கள், ஆழமான தொழில்நுட்பங்கள் மற்றும் கேளிக்கை நிகழ்ச்சிகள் என ஒரு கலவையாக பாரம்பரியமான, ஒரு நல்ல சுவையான விருந்துபோல இருந்தது என்கிறார் RID 3211 மாவட்டம், கொல்லம் கிழக்கு ரோட்டரி சங்கத்தின் முன்னாள் ஆளுநரும் RIPR-ருமான ஜான் டேனியல்.

மாவட்டத்தின் TRF பங்களிப்பு இலக்கு 1 மில்லியன் டாலர். இதுவரை 8 CSR மானியத் திட்டங்களும், ஏராளமான சர்வதேச மானியத் திட்டங் களும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

CoG மற்றும் சங்கத் தலைவர்கள் ஆதரவுடன், “எங்களது செயல்பாடுகள் அடுத்த 10 ஆண்டுகளுக்கு பேசப்படும் வகையில் இருக்க வேண்டும் என்பதற்காக வலுவான அடித்தளத்தை அமைத்து வருகிறோம்” என்றும் போத்ரா கூறினார்.

ஒவ்வொரு சங்கத்தின் தலைவருடனும் தாம் நடத்திய காலை உணவு சந்திப்பில் உறுப்பினர்கள் வளர்ச்சி மற்றும் தாக்கத்தை ஏற்படுத்தும் சேவை திட்டங்கள் குறித்தே பேசியதாக நினைவுகூர்ந்த ஆளுநர் போத்ரா, இதுவரை ஒரு லட்சம் கைபேசிகளுக்கு ரோட்டரி சக்கரம் பொறித்த ஸ்டிக்கர்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 400 தன்னார்வலர்கள் மற்றும் 150 ரோட்டேரியன்களுடன் சுமார் 1,000 சிறப்புக் குழந்தைகள் தனி ரயிலில் ஒருநாள் பயணமாக திருப்பதிக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும் கூறினார். மேலும் வரும் ஜூன் 30-ம் தேதிக்குள் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு 1,500 ஸ்மார்ட் கரும்பலகைகள் வழங்கப்பட உள்ளதாகவும் கூறினார்.

மூன்று மாதங்களுக்கு ஒரு முறை, புதிய உறுப்பினர்களை சேர்க்கும் சங்கங்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இளம் உறுப்பினர்களை ஈர்ப்பதற்காக அடுத்த தலைமுறையினருடன் தொடர்பு என்ற அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இதுவரை சங்கங்கள் மூலம் 150 பேர் சேர்ந்துள்ளனர். மேலும் 225 பட்டய உறுப்பினர்களை ஒரே நேரத்தில் நியமித்து சென்னை ஜகான் ரோட்டரி சங்கத்தை உருவாக்கி உலக சாதனை படைத்துள்ளோம் என்றும் அவர் கூறினார்.



### பாரத் விண்வெளி நிலையம்

எதிர்கால விண்வெளிப் பயணங்களை விவரித்த இஸ்ரோ தலைவர்

N நாராயணன், இந்தியாவின் ககன்யான் விண்வெளிப் பயணத்தில் மூவர் செல்வதற்கு முன்னதாக மூன்று ஆளில்லாத விண்கலங்கள் விண்வெளிக்கு அனுப்பிவைக்கப்படும். அவை பூமியின் சுற்றுவட்டப்பாதையில் 400 கி.மீ. தொலைவில் மூன்று நாள் செலவிட்டு பாதுகாப்பாக திரும்பி வரும். இதற்காக LVM-3 ராக்கெட்டுகளை ஏவ நாங்கள் திட்டமிட்டுள்ளோம். இவை முன்னர் GSLV மார்க் III என அழைக்கப்பட்டு வந்தது என்று அவர் தெரிவித்தார். 2028-ம் ஆண்டில் விண்வெளிக்கு மனிதர்களை அழைத்துச் செல்லும் விண்கலம் தயாராகிவிடும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்திய அரசின் அனுமதியைத் தொடர்ந்து ஜப்பானின் கூட்டு முயற்சியுடன் சந்திரனின் மேற்பரப்பை ஆய்வு செய்வதற்காக சந்திரயான்-5 விண்கலம் 250 கிலோ எடையுள்ள ரோவருடன் ஏவப்படும். சந்திரனிலிருந்து மேலும் சில மாதிரிகளை எடுத்துவருவதற்காக 2027-ல் சந்திரயான்-4 ஏவப்படும். சந்திரனின் தென் துருவத்தில் நீர்மூலக்கூறுகள் (சந்திரயான்-3 விக்ரம் லேண்டர்) இருப்பதைக் கண்டுபிடித்த முதல் நாடு இந்தியாதான். உள்நாட்டு விண்வெளி தொழில்நுட்பத்தில் ஒரு பெரிய திருப்புமுனையாக இஸ்ரோ 20 டன் எடையுடன் கூடிய C-32 கிரையோஜெனிக் என்ஜினை தயாரித்துள்ளது. இது கனரக எடைகளை தூக்கிச் செல்லவும், நீண்ட விண்வெளி ஆய்வுக்கும் முக்கியமானது என்று விண்வெளித் துறை செயலராகவும் இருக்கும் நாராயணன் கூறினார். கிரையோஜெனிக் என்ஜின்கள் மறுக்கப்பட்டதால் இந்தியாவே அதனை தயாரிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டது. இதுவரை நாம் C-32 உள்பட மூன்று கிரையோஜெனிக் நிலை அமைப்புகளை வெற்றிகரமாக சோதித்து பார்த்துள்ளோம். இதன் மூலம் விண்வெளி ஆராய்ச்சியில் நமது திறமைகளை நிரூபித்துள்ளோம் என்றும் அவர் கூறினார்.

சமீபத்தில் விண்வெளியில் இண்டு செயற்கைக்கோள்களை




நிலைநிறுத்தும் மற்றும் வெளியேற்றும் பரிசோதனையில் கிடைத்த வெற்றி மூலம், விண்வெளி ஆய்வில் முன்னிலை வகிக்கும் அமெரிக்கா, ரஷியா, சீனா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் (எலான் மஸ்க் நிறவனம்) ஆகிய நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் இடம்பெற்றுள்ளது. முதல் முயற்சியிலேயே ஒரு சிக்கலான விண்வெளி தொழில் நுட்பத்தில் இந்தியா தேர்ச்சி பெற்றுள்ளது. செயற்கைக்கோளை வெளியேற்றுவதில் எந்த சிக்கலும் வரக்கூடாது என்பதற்காக 125 முறை நாம் பரிசோதனைகள் நடத்தி எந்த குறைபாடும் இல்லாமல் அதை வெற்றிகரமாக செய்து முடித்தோம்.

### தலைவர் என்பவர் யார்?

“நெருக்கடியான நேரத்தில் தலைமை வகிப்பது” என்னும் தலைப்பில் முன்னாள் IPS அதிகாரி K விஜயகுமார் பேசுகையில், “தலைவராக வரவிரும்பும் மனிதர்கள் முதலில் குழுவில் இடம் பெறவேண்டும். தலைமைக்கு வரவிரும்புபவர்கள் லட்சியநோக்கு உடையவராக இருக்க வேண்டும். சிரிக்க கற்றுக்கொள்ளுங்கள். தவறுகளை மறைக்க முற்படாதீர்கள்” என்று கூறினார்.

ஒரு சக்திவாய்ந்த தலைவர், தனக்கு கீழ் பணிபுரிபவர்களிடமும், தம்மை பின்பற்றுபவர்களிடமும் நம்பகத்தன்மையை எதிர்பார்க்கிறார். அதேபோல தலைவர் என்பவர், தனக்கு கீழ் உள்ளவர்களை வழிநடத்தை இலக்கை நோக்கிச் செல்லக்கூடியவராகவும் இருக்க வேண்டும் என்றார் குமார்.

PDG முத்து பழனியப்பன், கார்ப்பொரேட் நிறுவனங்களின் ரூ.30,000 கோடி CSR நிதியில் (2024–25) ஒரு சதவீதம்கூட இந்தியாவில் உள்ள ரோட்டரி சங்கங்களால் பயன்படுத்தப்பட வில்லை. எனினும் RID 3233-க்கு உட்பட்ட சங்கங்கள் முறையாக வழிகாட்டப்பட்டு வருகின்றன. நாங்கள் இந்த ஆண்டு 1 மில்லியன் டாலர் மதிப்புள்ள CSR மானிய உதவித் திட்டங்களை செயல்படுத்த இலக்கு நிர்ணயித்துள்ளோம். இதுவரை பல்வேறு திட்டங்களுக்காக 8,00,000 டாலரை நாங்கள் நிதியாகப் பெற்றுள்ளோம் என்றார்.

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி D பரத் சக்ரவர்த்தி, “இஸ்ரோ” தலைவர் நாராயணன், M S சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளைத் தலைவர் சௌமியா சுவாமிநாதன், கஸ்தூரி அண்ட் சன்ஸ் நிறுவன இயக்குநர் N ரவி ஆகியோருக்கு ரோட்டரி வாழ்நாள் சாதனையாளர் விருதை வழங்கினார்.

முன்னதாக இந்த ஆண்டின் தொடக்கத்தில் மாவட்டம் சார்பில் “கலங்கரை விளக்கு” என்னும் பெயரில் ஒரு நிகழ்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் மாவட்ட சங்கங்களைச் சேர்ந்த முன்னாள் தலைவர்கள் கௌரவிக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து “வளர்பிறை” நிகழ்வு நடைபெற்றது. இதில் புதிதாக சேர்ந்த 800 ரோட்டேரியன்களுக்கு பயிற்சி வகுப்பு நடைபெற்றது. ■


# ஒரு செட்டியார் தொழிலதிபரின் ஜவுளி முதல் தொழில்நுட்பப் பயணம்

B நாராயணசாமி

சித்ரா நாராயணன் எழுதிய "தி சோனா ஸ்டோரி: தி டெக்ஸ்டைல் டு டெக் ஜர்னி ஆஃப் செட்டியார் இண்டஸ்ட்ரியலிஸ்ட் C வள்ளியப்பா" என்பது ஒரு வணிக நினைவுக் குறிப்பு மற்றும் சோனா டவர்ஸையும் பெரிய சோனா குழுமத்தையும் ஒரு பன்முகப்படுத்தப்பட்ட நிறுவனமாக உருவாக்கிய மனிதனின் வாழ்க்கை வரலாறும் ஆகும்.

இப்போது நாம் அனைத்து முக்கிய நகரங்களிலும் லட்சக்கணக்கான சதுர அடி பரப்பளவில் ஆயிரக்கணக்கான ஊழியர்களை வேலைக்கு அமர்த்தும் அலுவலக வளாகங்களையும் கேம்பஸ்களையும் காண்கிறோம். இது அனைத்தும் சோனா டவர்ஸில் தொடங்கியது, இது ஒரு கண்கவர் கதை, இப்புத்தகமும் அதை நன்றாகச் சொல்கிறது: 80களின் முற்பகுதியில் ஏழு மாடி கட்டிடம் இடிந்து விழுந்த பிறகு பெங்களூரில் கட்டுமானப் பணிகள் முடக்கம், தொழில் நுட்பத்தில் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்க ராஜீவ் காந்தியின் முயற்சி, மற்றும் டெக்சாஸ் இன்ஸ்ட்ரூமென்ட்ஸ் (TI) பெங்களூரில் ஒரு தொலைநிலை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு வசதியை அமைத்தது.

வள்ளியப்பா வெற்றி பெற வேண்டும் என்று விரும்பினார் என்பது தெளிவாகிறது, TI-க்கு அவர்கள் விரும்பிய அனைத்தையும் பெறுவதை உறுதி செய்வதற்காக ஒன்றன்பின் ஒன்றாக பிரச்சினைகளைத் தீர்த்தார்; செயற்கைக்கோள் நிலையத்தை வைத்திருக்க வலுவான கூரை, அதிக திறன் கொண்ட மின்சாரத்திற்கு தடையற்ற அணுகல், விண்ட் மேப் போன்றவை. இது அவருக்கு முதல் வணிக ரீதியான ரியல் எஸ்டேட் திட்டமாகவும் இருந்தது. இதற்கிடையில், VSNL மற்றும் C-டாட் ஆகியவையும் சோனா டவர்ஸில் தங்கள் அலுவலகத்தை அமைத்தன. சிஸ்கோ, ஆரக்கிள், வெரிஃபோன் மற்றும் பல தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைத்தொடர்பு பன்னாட்டு நிறுவனங்கள் விரைவில் பின்தொடர்ந்தன, சோனா டவர்ஸ் இந்தியாவின் முதல் மென்பொருள் தொழில்நுட்ப பூங்காவாக மாறியது.



வள்ளியப்பாவின் பயணத்தின் பெரிய கருப்பொருள் புதிய துறைகளில் அவரது அஞ்சாத முயற்சிகள், பிரச்சினைகளை எதிர்த்துப் போராடும் போது விடாமுயற்சி, அம்முயற்சியில் தீர்வுகளைக் கண்டுபிடிப்பது, இறுதியாக பெரிய அளவிலும் நிலையான வகையிலும் ஒன்றை உருவாக்குவதாகும். தகவல் தொழில்நுட்பம் மற்றும் ரியல் எஸ்டேட், அதுவும் தமிழ்நாட்டிற்கு வெளியே, செட்டியார்கள் உண்மையில் இறங்கியிராத துறைகள். மேலும் அவர் சுகாதார மற்றும் நல்வாழ்வு, பயோடெக், வடிவமைப்பு மற்றும் பொறியியல் சேவைகள் போன்ற பல்வேறு புதிய துறைகளில் குழுமத்தை வழிநடத்தியுள்ளார். இவை அமெரிக்க நகராட்சிகளுக்கான தீயணைப்பு வாகனங்களை வடிவமைப்பது முதல் இஸ்ரோ சந்திரயான் திட்டத்திற்கான ஸ்டெப்பர் மோட்டார்கள் வரை அடங்கும்.

அதே நேரத்தில் அவர் பாரம்பரிய செட்டியார் நெறிமுறைகளிலும் உறுதியாக வேரூன்றியுள்ளார்: சேலத்தில் குழுமத்திற்கு கல்வித்துறையில் ஒரு பெரிய இருப்பு உள்ளது, குடும்பத்தினர் கோவில்களின் புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பிற்கு பெரிய பங்களிப்பாளர்கள், மேலும் வள்ளியப்பா ஆழ்ந்த பக்தியுள்ளவர் மற்றும் பாரம்பரியத்திற்கு அதிக இணக்கமானவர். வங்கிகளில் இருந்து தான் வாங்கிய பணத்தை திருப்பிச் செலுத்துவதில் அவர் ஒருமுகப்படுத்தப்பட்ட கவனத்துடன் இருப்பார்.

புத்தகம் முழுவதும் அவரைப் பற்றிய ஒரு பார்வையை வழங்கும் கதைகள் உள்ளன: அவர் கன்னடத்தை ஆர்வத்துடன் கற்றுக்கொள்வது மட்டுமல்லாமல், கர்நாடகாவுடன் மேலும் ஒத்திசைவதற்காக வள்ளியப்பன் என்ற தனது பெயரை வள்ளியப்பா என்று மாற்றியது, அல்லது அசைவ உணவகத்திற்கு இடத்தை வாடகைக்கு விட அவர் மறுக்கும் நிகழ்வு.

கூடுதல் அம்சங்களும் தனித்து நிற்கின்றன; அவரது அனைத்து வணிகங்களிலும் புதுமை மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் தருவது, குறிப்பாக கல்வித்துறையில், அங்கு மாணவர்கள் இந்த கண்டுபிடிப்பு மனநிலையை ஆரம்பத்திலேயே பெற வேண்டும் என்பதில் அவர் ஆர்வமாக உள்ளார்.

வள்ளியப்பா பல்வேறு தொழில்துறை சங்கங்களில் செயற்பாட்டுடன் இருப்பதுடன், பெங்களூரில் தொழில்நுட்பம், ரியல் எஸ்டேட் மற்றும் உயர் கல்வித் துறையில் நன்கு அறியப்பட்டவர். எனினும், தொழில்நுட்பத்திற்கே ஓர் அடையாளமாக மாறியுள்ள இந்த நகரத்தில், குறிப்பிடத்தக்க வகையில் குறைந்த சுயவிவரத்தை பராமரிக்கிறார். ■

| | | |
|---|---|---|
| **Title** | : | The Sona Story |
| **Author** | : | Chitra Narayanan |
| **Publisher** | : | Bloomsbury |
| **Price** | : | ₹499 |

# பெங்களூருவில் பாலின - நடுநிலை கழிப்பறை

ரஷீதா பகத்

திருநங்கைகள் சமூகத்தை உள்ளடக்கியதாகவும் அவர்களுக்கு உதவுவதற்காகவும் ஒரு பெரு முயற்சியாக, திருநங்கைகள் உட்பட அனைவரும் அணுகக்கூடிய பாலின நடுநிலை கழிப்பறை வளாகம், பெங்களூருவில், பெங்களூரு ராஜ்மஹால் விலாஸ் ரோட்டரி சங்கம் (RID 3192) சார்பில் கட்டப்பட்டுள்ளது. மெஜஸ்டிக் KSRTC பேருந்து நிலையம் அருகே உப்பர்பேட் போலீஸ் நிலையம் எதிரே அமைந்துள்ள இந்த வளாகத்தை RIDE K P நாகேஷ் திறந்து வைத்தார். இதுபோன்ற முயற்சியை இந்தியாவில் உள்ள பிற ரோட்டரி மாவட்டங்களிலும் ஏற்படுத்த விரும்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நகரில் திருநங்கைகள் சமூகத்தினருக்கு என பிரத்யேக கழிப்பறை வசதிகள் இல்லாததை கருத்தில் கொண்டு இந்த பொது கழிப்பறை வளாகம் கட்டப்பட்டுள்ளது. இந்த முயற்சி பாதுகாப்பு மற்றும் உள்ளடக்கிய சுகாதாரத்திற்கான அடிப்படை உரிமையை நிவர்த்தி செய்கிறது. மேலும் இந்திய உச்சநீதிமன்றம் 2014-ம் ஆண்டு வெளியிட்ட பொது இடங்களில் திருநங்கைகளுக்கு என தனியாக கழிப்பிடம் கட்டப்பட வேண்டும் என்ற உத்தரவுடன் ஒத்துப்போகிறது என்று RID 3192 IPDG V ஸ்ரீனிவாசமூர்த்தி கூறினார்.

நிதி திரட்டுதல், இடத்தை அடையாளம் காணுதல் மற்றும் வளாகம் கட்டும் பணிக்கு பொறுப்பு ஏற்குமாறு அவர் சங்கத்தை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார். மூன்றாம் பாலினத்தவருக்கு போதுமான கழிப்பறைகள் இல்லாத நிலையில் சுகாதாரப் பிரச்னைகள் உருவாகிறது. ஏனெனில் கழிப்பறை பயன்பாட்டை தவிர்க்க அவர்கள் அதிகம் தண்ணீர் குடிப்பதை தவிர்த்து வருகின்றனர். சமூகத்தில் ஒரு பிரிவினருக்கு அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவதால் ஏற்படும் சுகாதார பிரச்னைகளை நாம் கற்பனை செய்து பார்க்க முடியும். இந்த முயற்சியின் மூலம், அந்த இடைவெளி குறையும் என்பதுடன், எதிர்காலத்தில் இதுபோன்ற பொது கழிப்பறைகளை ஒரு மாதிரியாகக் கொண்டு அரசு செயல்படுத்தும் என்று நம்புகிறேன். பெங்களூரு ராஜ்மஹால் ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர் கீர்த்தி மேத்தா, இந்த முதல் வகையான திட்டத்தை ரோட்டரியின் DEI கொள்கையுடன் முழுமையாக இணைத்து நிறைவு செய்வதில் அளித்த உறுதியான ஆதரவிற்கு நன்றி," என்று தொடக்க நிகழ்வில் பேசிய ஸ்ரீனிவாசமூர்த்தி கூறினார்.

இந்த பொது கழிப்பறை வளாகத்தை மாற்றுத்திறனாளிகள் மற்றும் சக்கர நாற்காலியை பயன்படுத்துவோர் எளிதில் அணுக முடியும். அதற்கு ஏற்றாற்போல் கைப்பிடிகளும் போடப்பட்டுள்ளன. மேலும் இங்கு குளிக்கும் வசதியும் உள்ளது.

சுலப் இன்டர்நேஷனல், ரோட்டரியுடன் இணைந்து இந்த வளாகத்தை பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுள்ளது. சுலப் இன்டர்நேஷனல் நிறுவனம் நாடு முழுவதும் 10,000-த்துக்கும் மேலான பொது கழிப்பறை வளாகங் களைக் கட்டி பராமரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

திருநங்கைகளின் இந்த போராட்டத்தை தனிப்பட்ட முறையில்



பார்த்த ஒருவராக, முதலமைச்சர் மற்றும் இதர அமைச்சர்களைச் சந்தித்து இந்த கனவுத் திட்டத்தை நிறைவேற்ற இடைவிடாமல் உழைத்தார். பின்னர் கூட்டு முயற்சிக்காக சுலப் இன்டர்நேஷனல் நிறுவனத்தை அணுகினார். இதுபோன்ற திட்டத்தை இந்தியா முழுவதும் முன்னெடுத்துச் செல்ல முடியும் என்பது என் நம்பிக்கை என்று மூர்த்தி கூறினார்.

ரோட்டரி இன்டர்நேஷனலின் DEI பணிக்குழுவின் நிறுவன உறுப்பினர் பிரையன் ரஷ், சமீபத்தில் பெங்களூருவில் நடைபெற்ற தெற்காசிய அமைதி மாநாட்டுக்கு வந்தபோது இந்த திட்டத்தை பார்வையிட்டு வெகுவாக பாராட்டினார். "ரோட்டரி மாவட்டம் 3192 சார்பில் பாலின-நடுநிலை கழிப்பறையை அமைத்துள்ளதை அறிந்து நான் மகிழ்ச்சி அடைந்தேன்.ரோட்டரியின் பாரம்பரியத்தை இது எதிரொலிக்கிறது. 1907-ம் ஆண்டு எங்களின் முதல் சேவைத் திட்டமாக சிகாகோவில் பொது கழிப்பறை கட்டப்பட்டது. கிட்டத்தட்ட 120 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த முயற்சி அந்த நோக்கத்தை விரிவுபடுத்துகிறது. திருநங்கைகள், மூன்றாம் பாலினத்தவர்களுக்கு உள்ளடக்கிய வசதிகளை உறுதிசெய்கிறது. இந்தியா முழுவதும் இதேபோன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று நான் முழுமையாக நம்புகிறேன்" என்று அவர் தெரிவித்தார்.




*நகரம் முழுவதும் பெங்களூரு மாநகராட்சியால் கட்டப்பட்டு வரும் ஈஸி ஹைடெக் கழிப்பறையின் விளக்கப்படம்.*

இந்த திட்டத்திற்காக ரோட்டரி சங்கம் செலவழித்த நிதி குறித்து கீர்த்தி மேத்தா கூறுகையில், அந்த இடத்தில் ஏற்கெனவே ஒரு கழிப்பறை இருந்தது. "அதில் சில மாற்றங்களைச் செய்து பாலின வேறுபாடு இல்லாமல் அனைவரும், குறிப்பாக திருநங்கைகள் மற்றும் சக்கர நாற்காலிகளைப் பயன்படுத்துவோர் அணுகும் வகையில் இந்த கழிப்பறயை கட்டி முடித்தோம். இதற்காக நாங்கள் செலவிட்ட தொகை ரூ.8 லட்சம்" என்றார்.

இதன் பயன்பாடு எப்படியிருக்கிறது என்பதை நாங்கள் கண்காணிப்போம். அதன்பின் சுலப் நிறுவனத்துடன் சேர்ந்து அல்லது வேறு ஒரு அமைப்புடன் இணைந்து இந்த வசதியை மேம்படுத்துவது, விரிவுபடுத்துவது குறித்து முடிவு செய்யப்படும். இதேபோன்ற வசதியை செய்து தருவதில் சிலர் ஆர்வம் காட்டி வருகின்றனர்." என்று அவர் மேலும் கூறினார்.

இந்த ரோட்டரி திட்டத்தின் ஒரு பகுதியை எடுத்துக்கொண்ட பெங்களூரு மாநகராட்சி இப்போது 28.12 கோடி ரூபாய் செலவில் நகரம் முழுவதும் ஆண்கள், பெண்கள், ஊனமுற்றோர் மற்றும் பாலின சிறுபான்மையினருக்காக 20 சுற்றுச்சூழலுக்கு உகந்த கழிப்பறைகள் மற்றும் 40 ஹைடெக் ஈஸி கழிப்பறைகளை கட்டி வருகிறது என்றார் மூர்த்தி. புதிய தலைமுறை கழிப்பறைகள் என்றும் அழைக்கப்படும் ஈஸி கழிப்பறைகளில், சென்சார் ஃப்ளஷிங் சிறுநீர் கழிப்பறைகள் மற்றும் சுவரில் பொருத்தப்பட்ட கம்மோடுகள் ஆகியவை அடங்கும். தண்ணீரை சேமிக்க ஒவ்வொரு குழாயிலும் சென்சார்கள் பொருத்தப்பட்டுள்ளன. இந்த கழிப்பறைகள் ப்ரீகாஸ்ட் முறையில் கட்டப்பட்டு இரண்டு மாதங்களில் கட்டி முடிக்கப்படும்.■



RIDE K P *நாகேஷ் (இடமிருந்து இரண்டாவது),* DGE *எலிசபெத் செரியன்,* IPDG V *சீனிவாஸ் மூர்த்தி,* DG N S *மகாதேவ் பிரசாத் மற்றும் ரோட்டரி பெங்களூர் ராஜ்மஹால் விலாஸ் முன்னாள் தலைவர் கீர்த்தி மேத்தா ஆகியோர் பாலின நடுநிலை கழிப்பறை வளாகத்தை திறந்து வைத்தனர்.*

# ரோட்டரி ஆளுநர்களுடன் சந்திப்பு

**கிரண் ஜெஹரா**



### பிபின் சாச்சன்
விவசாய வேதிப் பொருட்கள் உற்பத்தியாளர்
RC பாடலிபுத்ரா, RID 3250

## TRF வழங்கலுக்கு முன்னுரிமை

18% உறுப்பினர்கள்தான் TRFக்கு வழங்கியுள்ளார்கள் என்பதைக் கண்ட பிபின் சாச்சன் தன் மாவட்டத்தின் வழங்கும் பாணியை ஆராய்ந்தார், ஒவ்வொரு ரோட்டரியனும் TRFக்குக் குறைந்தது $25 வழங்குவதை உறுதிசெய்தார். இதன்மூலம், இந்த மாவட்டம் TRFன் ஒவ்வொரு ரோட்டரியனும் ஒவ்வோர் ஆண்டும் (EREY) வழங்குதலில் பன்னாட்டளவில் முதல் இடம் பெற்றது. இந்த மாவட்டத்தின் 4,062 உறுப்பினர்களில் 88% பங்களித்துள்ளார்கள். இதனால் மொத்த TRF பங்களிப்பு $3.5 லட்சத்துக்குச் சென்றது, சென்ற ஆண்டின் $2 லட்சம் இலக்கைத் தாண்டியது.

ரோட்டரியன்கள் “தங்களுடைய வாழ்க்கையின் நிதி இலக்குகளை நிறைவு செய்தவர்கள். அவர்கள் நாடும் ஒரே விஷயம், நோக்கம்தான். சங்கத் தலைவர்கள் அவர்களை ரோட்டரித் திட்டங்களின்மீது காதல் கொள்ளும்படி செய்தால், அவர்கள் TRFக்கு வழங்குவார்கள், அங்கீகாரத்துக்காக இல்லை, தாக்கத்துக்காக. நாம் கொடுப்பதைத்தான் நாம் விட்டுச்செல்கிறோம்” என்பதை நினைவில் வைக்கவேண்டும்.

சங்கங்கள் பெண் உறுப்பினர்களை ஒருமனமாக வரவேற்கவேண்டும் என்று வலியுறுத்துகிறார் இவர். “உங்கள் மனைவி ரோட்டரியன் என்றால், அவரை ஒரு பெண் உறுப்பினர் என்றுமட்டும் நினைக்காதீர்கள். அவருடைய திறன்களை மதியுங்கள். பெண்களால் ஒரே நேரத்தில் பல வேலைகளைச் செய்ய இயலும், சிறந்த வழிகளில் தலைமை தாங்க இயலும்.”

இவர் 6 புதிய சங்கங்கள், 8 ரோட்டராக்ட் சங்கங்கள், 20 புதிய இன்டராக்ட் சங்கங்களைச் சேர்த்துள்ளார்.

## தாக்கத்தில் கவனம்


1963ல், சரத் சௌத்ரி பிறப்பதற்கு ஒரு வாரம் முன்னால் தான் அவருடைய தந்தையின் சங்கம் பதிவானது. அவர் இன்டராக்டராகத் (1977-81) தன் பயணத்தைத் தொடங்கினார், 29 வயதில் (1993ல்) RC ஹைதராபாத் டெக்கானில் இனைந்தார்.

1997-98ல், சராசரி உறுப்பினர் வயதாக 26ஐக் கொண்ட தன் சங்கத்தை “உலகின் முதல் 100% PHF சங்கங்களில் ஒன்றாக” வழிநடத்தினார் இவர். 2001ல் இவர் ஆண்டு வழங்கல் தலைவராகப் பொறுப்பேற்ற போது, TRF பங்களிப்புகள் முதன் முறையாக $100,000-ஐ தாண்டின. அதன் பிறகு அது $1 மில்லியனுக்கு மேல் வளர்ந்துள்ளது.

சங்கங்கள் உறுப்பினர் எண்ணிக்கையில் கவனம் செலுத்தும் ரோட்டரியன்கள் படையை (ஹேரி ரக்கிள்ஸ் தோழர்கள்) உருவாக்கவேண்டும் என்று நாங்கள் ஊக்குவிக்கிறோம். இவர்கள் ஒவ்வோர் ஆண்டும் குறைந்தது ஒரு புதிய உறுப்பினரைக் கொண்டு வரவும், அவர்களுக்கு 3 ஆண்டுகள் வழிகாட்டவும் உறுதியளிக்கிறார்கள்.”

ஒரு மிகப் பெரிய வெள்ளத்தைத் தொடர்ந்து இந்த மாவட்டம் பாதிக்கப்பட்ட 6,000 குடும்பங்களை ஆதரித்தது, 6 பள்ளிகளைப் புதுப்பித்தது. CSR திட்டங்கள் TRF வழியாகவும் நேரடியாகவும் நடை பெற்றுள்ளன. இவற்றில் சில: வலிப்புப் பராமரிப்பு மையம், குழந்தைகள் இதய அறுவைச் சிகிச்சை அரங்கங்கள், புற்றுநோய் சார்ந்த திசு ஆய்வகம், முதுகெலும்பு என்டோஸ்கோபி அமைப்புகள் மற்றும் அரசு, தொண்டு நிறுவனங்களில் நோய் கண்டறிதல் ஆய்வகங்கள்.

இந்த ஆண்டு TRF வழங்கலில் $1 மில்லியனைக் கடந்துள்ள “நாங்கள் பங்களிப்புகள் மற்றும் உறுதிப்பாடுகளில் இன்னொரு மில்லியனைத் தாண்டத் திட்டமிட்டுள்ளோம்” என்கிறார் இவர்.



### சரத் சௌத்ரி கட்ரகட்டா
மேலாண்மை
RC ஹைதராபாத் டெக்கான்,
RID 3150




**ராகுல் ஸ்ரீவஸ்தவா**
கல்வியாளர்
RC குவாலியர் லாரல்ஸ்,
RID 3053


## உறுப்பினர் தரம்

“உறுப்பினர்களைப் பொறுத்த வரை எண்ணிக்கையை உயர்த்தினால் மட்டும் போதாது. வலுவான, உறுதிப் பிணைப்புள்ள சமூகத்தைக் கட்டமைக்க வேண்டும். ஒவ்வொரு சங்கமும் வெவ்வேறு விதமானது. அனைவருக்கும் ஒரே வியூகம் பொருந்தாது. ஒவ்வொரு சங்கமும் புதிய உறுப்பினர்களைச் சேர்க்கத் தங்களுடைய சொந்த அணுகுமுறையை உண்டாக்கவேண்டும்” என்கிறார் DG ராகுல் ஸ்ரீவஸ்தவா.

சங்கங்கள் “உறுப்பினர்களின் தகவல்களைக் கவனமாக மதிப்பிட்டு, ரோட்டரியின் மதிப்பீடு களுடன் உண்மையாகப் பொருந்துகிறவர்களைமட்டும் சேர்ப்பதற்கென”த் தனிக்குழுக்களை அமைக்க வேண்டும். இந்த மாவட்டம் “இன்னும் பன்முகத் தன்மையுடனும் உள்ளடக்குதலுடனும் இருப்பதற்குப் பணியாற்றி வருகிறது. நாங்கள் ஏற்கெனவே மாற்றுத் திறனாளி உறுப்பினர்களை வரவேற்றுள்ளோம். ஆனால், திருநபர் உறுப்பினர்களைச் சேர்க்க இன்னும் நாளாகும். இந்த மாவட்டத்தில் 330 ரோட்டராக்டர்கள் உள்ளார்கள். ஆனால், RI நிலுவைத் தொகைகளால் இந்த எண்ணிக்கையை உயர்த்துவது எளிதில்லை.”

இந்த மாவட்டத்தில் உள்ள ஐந்து அனைத்து மகளிர் சங்கங்கள் “மிகச் சிறந்த திட்டங்களைச் செய்து வருகின்றன” என்று பெருமையுடன் சுட்டிக் காட்டுகிறார் இவர். இவர்கள் அன்புச் சங்கிலித் திட்டத்தின்கீழ், தேவையுள்ள சமூகங்களுக்கு உணவு, துணிகள், தையல் இயந்திரங்கள், இன்னும் பலவற்றை வழங்கி வருகிறார்கள்.

இந்த மாவட்டம் அரசுப் பள்ளிகளைப் புதுப்பிக்க ₹83,000 மதிப்புள்ள CSR முன்னெடுப்பு ஒன்றைச் செயல்படுத்துகிறது. “நாங்கள் எங்கள் $2 லட்சம் TRF இலக்கில் ₹1.3 லட்சத்தை ஏற்கெனவே எட்டி விட்டோம்” என்று சிரிக்கிறார் இவர். தோழமை தான் இவரை ரோட்டரியில் தக்கவைத்தது. “இதில் ஒன்று கூடுவது மட்டுமில்லை. மாற்றத்தைக் கொண்டு வரலாம் என்று நம்புகிற மக்கள் ஒன்று கூடுவதுதான் முதன்மையானது. உலகின் மிகச் சிறந்த மக்களுடன் நீங்கள் உண்கிறீர்கள், பகிர்கிறீர்கள், பணியாற்றுகிறீர்கள்” என்கிறார் இவர்.

## அனுபவத்தையும் இளமை ஆற்றலையும் சமநிலைப்படுத்தல்

DG சுதிர் ஜப்பாருக்கு, உறுப்பினர்களை நிலைப்படுத்துதல் “கட்டாயமான பணி. நாம் ஒருவரைச் சேர்ப்பதற்குமுன், அவர் ரோட்டரியின் மரபை, நம் உள்ளூர், தேசிய, பன்னாட்டுச் சேவைத் திட்டங்களின் தாக்கத்தை, குறிப்பாக, TRFன் சிறப்பைத் தெரிந்துகொள்ளவேண்டும்” என்கிறார் இவர்.

இரண்டாம் தலைமுறை ரோட்டரியனான ஜப்பார் 25 வயதில் தன் தந்தையின் சங்கத்தில் சேர்ந்தார். சமீபத்தில் இவருடைய மாவட்டம் தன் முதல் திருநபர் ரோட்டரியனை வரவேற்றது. சரியான தளம், நேர்விதமான அனுபவங்களை வழங்கினால், திருநபர் சமூகத்தைச் சேர்ந்த பலர் இங்கு சேர்வதற்கு ஊக்கம் பெறுவார்கள் என்று ஜப்பார் நம்புகிறார்.

இந்த மாவட்டத்தில் 85% உறுப்பினர்கள் தக்கவைத்துக்கொள்ளப்படுவது சிறப்புதான். எனினும், TRF இலக்குகளை எட்டுவது சவாலாகத் தொடர்கிறது. “எங்கள் சங்கங்களில் பலவும் பகுதியளவு நகரம், கிராமப் பகுதிகளில் இயங்குகின்றன. ஆனால், இந்த ஆண்டு, ஒவ்வோர் உறுப்பினரும் TRFக்குக் குறைந்தது  வழங்கவேண்டும் என்று நாங்கள் வலியுறுத்தியுள்ளோம்.

புதிதாகத் தொடங்கப்பட்ட திறன் மேம்பாட்டுத் திட்டம் ஒன்று பெண்கள், திருநபர்கள், மாற்றுத் திறனாளிகள், ஏழைப் பின்னணியிலிருந்து வரும் மாணவர்களுக்குத் தையல், கணினித் திறன்கள், அழகுக் கலைஞர் பயிற்சிகளை வழங்குகின்றன. கிட்டத்தட்ட 80 சங்கங்கள் கனரக வண்டிகளை ஓட்டப் பயிற்சியளிக்கின்றன. 500க்கும் மேற்பட்ட பெண்கள் தையல் பயிற்சிகளை நிறைவுசெய்துள்ளார்கள்.

160 சங்கங்கள் கருப்பை வாய்ப் புற்றுநோய்த் தடுப்பு மருந்துகளை வழங்கிவருகின்றன.




**சுதி ஜப்பார்**
கல்வி நிறுவன மேலாண்மை
RC கழக்குட்டொம்
RID 3211

# RC மொராதாபாத் ஈஸ்ட்டின் 50 ஆண்டுச் சேவை

V முத்துகுமரன்

நீங்கள் தில்லியிலிருந்து 175 கிலோமீட்டர் தொலைவில், மேற்கு உத்தரப் பிரதேசத்தில் உள்ள மொராதாபாதுக்குச் சென்றீர்களானால் அங்குள்ள கட்டடங்களிலும் பூங்காக்களிலும் ரோட்டரிச் சக்கரமும் ரோட்டரி சங்கங்களின் வெளிப்படையான திட்டங்களும் தெரிவதைக் கண்டு வியப்பீர்கள். “RI மாவட்டம் 3100-ன் கீழ் வருகிற இந்தப் பித்தளை நகரத்தில் 25 ரோட்டரி சங்கங்களும் சுமார் 500 ரோட்டரியன்களும் உள்ளார்கள்” என்கிறார் இந்த நகரத்தின் இரண்டாவது மிகப் பழைமையான, இந்த ஆண்டு தன் பொன்விழாவைக் கொண்டாடுகிற RC மொராதாபாத் ஈஸ்ட் சங்கத்தின் உறுப்பினரும் பகுதித் துணை ஆளுநருமான பிரசாந்த் சிங்கால்.

தாக்கமுள்ள திட்டங்களை நிறைவேற்றுவதால் ஊடக வெளிச்சத்தில் நனைந்துவரும் இந்தச் சங்கம் PRIP சேகர் மேத்தா முன்னிலையில் தன்னுடைய 50வது ஆண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடியது. இதில் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த 50 பயிற்சி பெற்ற பெண்களுக்குத் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. “அரசு நடத்தும் பல திறன் மையங்களில் பயிற்சி பெற்ற இந்தப் பெண்களோடு ரோட்டரியன்கள் பேசி, அவர்களுடைய பொருளாதார நிலையை அறிந்து தேர்ந்தெடுத்தார்கள். அதன்பிறகுதான், சங்க உறுப்பினர்களால் நிதியளிக்கப் படும் இந்தத் திட்டத்தால் பலன் பெறும் 50 பேரை நாங்கள் தீர்மானித்தோம்” என்கிறார் PDG மற்றும் சங்க உறுப்பினர் லலித் மோகன் குப்தா. நவம்பர் 1974-ல் 30 உறுப்பினர் களோடு இயங்கத் தொடங்கிய “நாங்கள் மொராதாபாத் மக்களில் பலரைச் சென்றடையும் நீண்ட கால, வளங்குன்றாத் திட்டங்களுக்காகப் பெயர் பெற்றுள்ளோம்.”

குப்தா தன்னுடைய மாவட்ட ஆளுநர் பொறுப்பின்போது (2004–05) மொராதாபாத் ஆசிய விவேகானந்த் மருத்துவமனையில் ஒரு ரோட்டரி இரத்த வங்கியை அமைத்தார் (GG: $50,000). “இந்த வளாகம் அப்போதிலிருந்து ஒவ்வோராண்டும் ஆயிரக்கணக்கான தீவிர நோயாளிகளுக்கு உயிர் கொடுத்துள்ளது. இந்த மருத்துவமனையை நிர்வகிப்போர் மாறியிருந்தாலும், எங்கள் இரத்த வங்கி தொடர்ந்து நன்கு இயங்குகிறது, நோயாளிகளுக்கும் மருத்துவமனைகளுக்கும் இரத்தத்தை வழங்கிவருகிறது” என்று விளக்குகிறார் இவர். அதே ரோட்டரி நூற்றாண்டில், பகவான் மகாவீர் விக்லங் சகாயதா சமித்தி ஆதரவுடன் நடைபெற்ற ஏழு நாள் செயற்கைக் கை, கால் முகாமில் 700 பேருக்குக் காலிப்பர்களும்

*PRIP சேகர் மேத்தா மற்றும் ராஷி, (வலமிருந்து) PDG லலித் மோகன் குப்தா, RC மொராதாபாத் ஈஸ்ட் தலைவர் அனில் குப்தா, DGE நிதின் அகர்வால், முன்னாள் தலைவர்கள் A K சிங்கால், N C அகர்வால் மற்றும் M P அகர்வால் பயனாளிகளுடன்.*



செயற்கைக் கால்களும் (ஜெய்ப்பூர் கால்) வழங்கப்பட்டன.

1983ல், உறுப்பினர் பங்களிப்புகளைக் கொண்டு மொராதாபாத் மாவட்ட நீதிமன்றத்துக்கு அருகிலுள்ள ஓர் அழகிய பூங்காவில் குடிநீர் அமைப்புடன் பியாவு மையம் ஒன்று உருவாக்கப்பட்டது. 1984ல், அப்போது RID 310ன் DGயாக இருந்த PRIP ராஜேந்திர சாபூ இதைத் தொடங்கிவைத்தார். "அடுத்தடுத்த ஆண்டுகளில், ஜல்ஷாலா என்று அழைக்கப்படும் இந்தப் பசுமை மையம் முதியவர்கள் தேடி வரும் இடமாகிவிட்டது. அவர்கள் இங்கு அமைக்கப்பட்டுள்ள காங்க்ரீட் இருக்கைகளில் அமர்ந்து ஓய்வெடுத்து மகிழ்கிறார்கள். நாள்தோறும் 100க்கும் மேற்பட்டோர் இந்தத் தண்ணீர் அரங்கத்தைப் பயன்படுத்துகிறார்கள்" என்கிறார் சிங்கால். "வரும் மாதங்களில், வட்ட அலுவலகத்துக்கு அருகில் நாங்கள் இன்னொரு பியாவு மையத்தை அமைப்போம்."



PDG குப்தா மற்றும் முன்னாள் தலைவர் விவேக் அகர்வால் (வலமிருந்து 2வது) ரோட்டரி இரத்த வங்கியில்.



RID 310-ன் அப்போதைய DG ராஜேந்திர சாபூ (இடது), 1984-ம் ஆண்டில் சங்கத் தலைவர் H N ஜெயின் (நடுவில்) முன்னிலையில் ஜல்ஷாலாவைத் திறந்து வைத்தார்.

**குறைப்பிரசவக் குழந்தைகளின் ரெட்டினோபதி**

டிசம்பர் 2024ல், ஒரு பன்னாட்டு நல்கையின் வழியாக ($70,000), குறைப்பிரசவக் குழந்தைகளைப் பாதிக்கிற குறைப்பிரசவக் குழந்தைகளின் ரெட்டினோபதி என்ற நோயைக் குணப்படுத்துவதற்கென, C L குப்தா கண் மருத்துவமனைக்கு உயர் தொழில்நுட்ப மருந்துகளை இந்தச் சங்கம் கொடையளித்தது. "நாங்கள் துணை மருத்துவப் பணியாளர்களுக்குப் பயிற்சி யளித்தோம், புதிதாகப் பிறந்த, நோய்வாய்ப்பட்டுள்ள குழந்தைகளுக்கு அவர்களுடைய வீடுகளிலேயே சிகிச்சை அளிப்பதற்கென முழு வசதிகளைக் கொண்ட பொலேரோ வேன் ஒன்றைக் கொடையளித்தோம்" என்று விளக்கிறார் குப்தா. இவர் ஒரு DRFC (2022-25) ஆவார்.

மீதமுள்ள 3.5 லட்சம் ரூபாயைக் கொண்டு "நாங்கள் இந்தக் கண் மருத்துவமனை ஆதரவுடன் கௌதம் புத்தா பூங்காவில் 900 பேருக்குக் கண் பரிசோதனை முகாம் ஒன்றை நடத்தினோம்". இவர்களில் 50 பேர் கண் புரை அறுவைச் சிகிச்சைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். "அவர்களுடைய போக்குவரத்து, தங்குதல், உணவு, மருந்துகள் அனைத்தும் சங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டன." முகாமில் 350 மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

இதற்கான பன்னாட்டு நல்கை உறுதியாகிவிட்டதால் ($50,000க்கு மேல்), விரைவில் கிரெஸ்ட் மருத்துவ மனையில் இரண்டாவது ரோட்டரி இரத்த வங்கி அமைக்கப்படும். 1991-ல் இந்தச் சங்கம் 63 உறுப்பினர்களைப் பெற்றதிலிருந்து "இன்றுவரை நாங்கள் உறுப்பினர் எண்ணிக்கையைத் தக்கவைத்துள்ளோம். இப்போது இங்கு 60 ரோட்டரியன்கள் உள்ளார்கள்." இதுவரை இவர்கள் TRFக்கு $150,000 கொடையளித்துள்ளார்கள். இந்தச் சங்கத்தில் 2-ம் நிலையில் உள்ள PDG குப்தா உள்பட மூன்று மிகப் பெரிய கொடையாளர்கள் உள்ளார்கள். இது RID 3100க்கு மூன்று ஆளுநர்களை வழங்கியுள்ளது. "இந்தப் புகழ் பெற்ற சங்கத்தின் உறுப்பினராக இருப்பது ஒரு நல்ல உணர்வு. ஏனெனில், சமூகத்தின் சிறந்த நபர்களுடன் பழகுவது உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும்" என்று சிரிக்கிறார் சிங்கால்.

27 முன்னாள் தலைவர்கள், மூன்று PDGகள் (லலித் குப்தா, B S மாதுர், ராகேஷ் சிங்கால்), இரண்டு பதிவு உறுப்பினர்களுக்கு (சாம்புநாத் டாண்டன், சுந்தர் மோகன்) PRIP மேத்தா நினைவுப் பரிசுகளை வழங்கிப் பெருமைப்படுத்தினார். ■

Rotary PEOPLE OF ACTION

# ரோட்டரியின் பல்வேறு திட்டங்கள்

## பெண் சாதனையாளர்கள் பெருமைப்படுத்தப்பட்டார்கள்

மகளிர் நாளன்று (மார்ச் 8) ஆறு பெண் தொழில் வல்லுனர்களுக்குத் தொழில் சார்ந்த வல்லமை விருதுகளை வழங்கிப் பெருமைப்படுத்தியது RC பாம்பே சீ ஃபேஸ். இந்த விருதுகளை வென்றோர்: டாக்டர் சாதனா K தேசாய் (பெண்ணோயியல் மருத்துவர்), சுவர்ணா ராஜ் (பவர்லிஃப்டிங், மேசை டென்னிஸ், தடகளப் போட்டிகளில் பன்னாட்டுப் பதக்கங்களை வென்றுள்ள, சக்கர நாற்காலியில் இயங்கும் விளையாட்டு வீரர்), அர்ச்சனா சந்திரா (அறிவாற்றல் குறைபாடுள்ளோருக்குக் கற்பிப்பவர்), சினு கலா (உழைத்து முன்னேறிய தொழில்முனைவர்), லைனா இம்மானுவேல், ரிம்ஜிம் அக்ரவால் (மூளைக் குறைபாடுகளைக் குணப்படுத்துவதற்கான AI கருவியை உருவாக்கியுள்ள IT தொழில் வல்லுனர்கள்).




*DG சேத்தன் தேசாய் (வலமிருந்து 3வது) மற்றும் RC பாம்பே சீ ஃபேஸ் தலைவர் மினால் துராக்கியா (நடுவில்) விருது பெற்றவர்களுடன்.*

## சம்பல்பூரில் வயதுவந்தோர் கல்வி மையங்கள்

RC சம்பல்பூர் கிரேட்டர், RID 3261, தன்னுடைய வயதுவந்தோர் எழுத்தறிவுப் பணியின்கீழ் ஐந்து வயதுவந்தோர் கல்வி மையங்களை ஆதரித்துள்ளது, கோல் இந்தியா உடனான MoUன்படி மேலும் ஐந்து மையங்களை ஆதரிக்கவுள்ளது. இந்த மையங்களில் ஒன்று, கூகுளால்கூடக் கண்டறிய இயலாத பிடசியாரி என்ற தொலைதூரக் கிராமத்தில் உள்ளது. இங்கு ஒரு குழுவை வழிநடத்திச் சென்றார் இந்தச் சங்கத்தின் தலைவர் சையத் பிலால் அக்தர் மல்லிக். அங்கு செல்ல இவர்களுக்கு வழிகாட்டியவர், ஒரு முதியவர். அங்கு, சுமார் 40 மக்கள் ரோட்டரியன்களை வரவேற்றார்கள். தாங்கள் இப்போது படிக்க, எழுத, தங்கள் கையொப்பத்தை இடக் கற்றுக்கொண்டதாக இந்தக் கற்போர் தெரிவித்தார்கள்.




*சம்பல்பூர் அருகே உள்ள பிடாசியாரி கிராமத்தில் உள்ள வயது வந்தோர் எழுத்தறிவு மையத்தில் ரோட்டேரியன்கள்.*

## ஒடிசாக் கிராமங்களில் ரோட்டரி திட்டங்கள்

ஒடிசா மாநிலத்தின் சுந்தர்கர்ஹ் மாவட்டத்திலுள்ள ஹெம்கிர் தொகுதிக் கிராம மக்கள் தொலைதூரத்தில் இருப்பதால் பல சிரமங்களை எதிர்கொள்கிறார்கள். இவர்களுக்கு உதவும்வகையில் BGR சுரங்க மற்றும் உள்கட்டமைப்பு நிறுவனத்தின் CSR நிதியைக் (ரூ.66 லட்சம்) கொண்டு பல சமூகத் திட்டங்களை நிறைவேற்றியுள்ளது RC ஜூபிளீ ஹில்ஸ், RID 3150.

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 541 மிதிவண்டிகள் வழங்கப்பட்டன. துருபுகா, மஜிபடா, சார்படா, லைகெரா போன்ற கிராமங்களில் நீர்ப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கென இந்தச் சங்கம் குழாய்க் கிணறுகள், நீர்மூழ்கு பம்புகள், சேமிப்புத் தொட்டிகள், பல வழங்கல் அமைப்புகளை நிறுவியுள்ளது.

2,000க்கும் மேற்பட்ட மக்கள்தொகையைக் கொண்ட கிரிஸ்பிரா கிராமத்தில் உள்ள சமூக மையம் புதுப்பிக்கப்பட்டுப் புதிய சிமெண்ட் தரை அமைக்கப்பட்டது. சங்கத் தலைவர் பாலகோடி ரெட்டி, PDG சாம் மொவ்வா முன்னிலையில் DG சரத் சௌத்ரி இந்த வசதிகளைத் தொடங்கிவைத்தார்.



*DG சரத் சௌத்ரி (இடது) ஒரு மாணவருக்கு மிதிவண்டியைப் பரிசளிக்கிறார்.*



*DRFC தேபாஷிஷ் தாஸ் (இடது) மற்றும் RRFC பாசு தேவ் கோல்யன் முன்னிலையில் RC கிரேட்டர் தேஜ்பூர் தலைவர் ஜெயந்த் திப்ரேவாலுக்கு DG சுக்மிந்தர் சிங் நினைவுப் பரிசு வழங்குகிறார்.*

## தேஜ்பூரில் ரோட்டரி வலிநீக்கு பராமரிப்பு மையம்

RC பிரட்நகர், RID 3292 உடன் இணைந்து, ரூ 38 லட்சம் மதிப்புள்ள ஒரு பன்னாட்டு நல்கைத் திட்டத்தின்கீழ், பாப்டிஸ்ட் கிறித்துவ மருத்துவமனையில், 15 படுக்கைகளைக் கொண்ட வலிநீக்கு பராமரிப்புப் பிரிவு ஒன்றை அமைத்துள்ளது RC கிரேட்டர் தேஜ்பூர், RID 3240. இந்த மருத்துவ வளாகத்துடன் ஒரு கருத்தரங்கு அறை, நிர்வாகப் பிரிவையும் DG சுக்மீந்தர் சிங் தொடங்கிவைத்தார். நோயாளிகளுக்கு இல்லப் பராமரிப்புச் சேவைகளை வழங்குவதற்கென ஒரு வண்டியும் மருத்துவமனைக்குக் கொடையளிக்கப்பட்டது. இந்த மருத்துவத் திட்டத்தை நிறைவேற்றுவதில் RC கிரேட்டர் தேஜ்பூர் தலைவர் ஜயந்த் டிப்ரெவல், செயலாளர் அங்கித் கேடாவட், IPDG நிலேஷ் அகர்வால் முதன்மைப் பங்காற்றினார்கள்.

# Membership Summary

Source: RI South Asia Office

As on April 1, 2025

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians (%) | Rotaract Clubs | Rotaract Members | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|---|
| 2981 | 140 | 5,990 | 5.49 | 56 | 110 | 35 | 255 |
| 2982 | 91 | 4,061 | 5.86 | 32 | 458 | 97 | 188 |
| 3000 | 148 | 6,222 | 11.59 | 92 | 1,197 | 244 | 218 |
| 3011 | 136 | 5,333 | 31.03 | 72 | 1,916 | 235 | 41 |
| 3012 | 158 | 3,940 | 24.62 | 55 | 646 | 110 | 61 |
| 3020 | 82 | 4,599 | 7.96 | 42 | 610 | 137 | 351 |
| 3030 | 103 | 5,552 | 16.25 | 62 | 967 | 510 | 400 |
| 3040 | 102 | 2,364 | 14.81 | 35 | 758 | 63 | 216 |
| 3053 | 76 | 3,186 | 17.58 | 23 | 330 | 40 | 131 |
| 3055 | 84 | 3,445 | 12.37 | 48 | 664 | 58 | 397 |
| 3056 | 85 | 3,772 | 25.05 | 21 | 187 | 107 | 201 |
| 3060 | 100 | 5,142 | 15.64 | 52 | 1,840 | 79 | 154 |
| 3070 | 116 | 3,105 | 15.43 | 35 | 287 | 73 | 64 |
| 3080 | 111 | 4,401 | 13.54 | 59 | 1,961 | 212 | 127 |
| 3090 | 134 | 2,609 | 6.17 | 24 | 364 | 359 | 174 |
| 3100 | 115 | 2,202 | 10.49 | 17 | 112 | 41 | 151 |
| 3110 | 137 | 3,742 | 11.97 | 21 | 208 | 104 | 114 |
| 3120 | 90 | 3,790 | 15.73 | 34 | 471 | 43 | 58 |
| 3131 | 136 | 5,469 | 35.66 | 122 | 2,599 | 305 | 236 |
| 3132 | 99 | 3,855 | 14.81 | 32 | 380 | 199 | 227 |
| 3141 | 123 | 6,609 | 28.69 | 122 | 3,505 | 219 | 247 |
| 3142 | 116 | 4,046 | 22.96 | 56 | 1,649 | 140 | 99 |
| 3150 | 106 | 4,097 | 12.86 | 84 | 1,682 | 126 | 130 |
| 3160 | 78 | 2,472 | 8.94 | 26 | 94 | 97 | 82 |
| 3170 | 143 | 6,637 | 15.05 | 89 | 1,073 | 203 | 184 |
| 3181 | 89 | 3,769 | 11.12 | 40 | 444 | 133 | 122 |
| 3182 | 87 | 3,746 | 10.95 | 47 | 278 | 113 | 105 |
| 3191 | 90 | 3,349 | 19.89 | 74 | 1,788 | 199 | 36 |
| 3192 | 82 | 3,380 | 22.01 | 62 | 1,644 | 163 | 40 |
| 3201 | 173 | 6,745 | 10.11 | 112 | 1,981 | 118 | 98 |
| 3203 | 100 | 5,218 | 7.44 | 47 | 759 | 157 | 39 |
| 3204 | 84 | 2,834 | 9.92 | 26 | 276 | 23 | 22 |
| 3211 | 162 | 5,280 | 9.03 | 13 | 206 | 33 | 135 |
| 3212 | 120 | 4,671 | 10.81 | 89 | 607 | 215 | 153 |
| 3231 | 94 | 3,645 | 7.22 | 32 | 396 | 108 | 421 |
| 3233 | 88 | 3,320 | 18.34 | 58 | 1,709 | 55 | 63 |
| 3234 | 79 | 3,204 | 24.09 | 64 | 1,588 | 95 | 42 |
| 3240 | 100 | 3,509 | 17.01 | 43 | 753 | 72 | 249 |
| 3250 | 114 | 4,403 | 23.55 | 37 | 527 | 77 | 192 |
| 3261 | 100 | 3,426 | 24.37 | 18 | 112 | 37 | 46 |
| 3262 | 118 | 3,922 | 16.37 | 84 | 802 | 652 | 294 |
| 3291 | 144 | 3,793 | 27.55 | | | 94 | 775 |
| **India Total** | **4,489** | **174,854** | **16.15** | **2,157** | **37,938** | **6,180** | **7,338** |
| 3220 **Srilanka** | 72 | 2,102 | 16.79 | 86 | 3,678 | 142 | 78 |
| 3271 **Pakistan** | 108 | 1,479 | 20.76 | 103 | 418 | 275 | 28 |
| 0063 (3272) **Pakistan** | 76 | 1,162 | 19.45 | 48 | 285 | 23 | 49 |
| 0064 (3281) **Bangladesh** | 247 | 5,280 | 17.27 | 185 | 1,003 | 120 | 211 |
| 0065 (3282) **Bangladesh** | 140 | 2,879 | 8.65 | 167 | 1,102 | 26 | 48 |
| 3292 **Nepal** | 158 | 5,601 | 19.07 | 179 | 5,374 | 127 | 141 |
| **S Asia Total** | **5,290** | **193,357** | **16.22** | **2,925** | **49,798** | **6,893** | **7,893** |

## இந்திய துணைத்தலைவருடன் PRIP மேத்தா சந்திப்பு

PRIP சேகர் மேத்தா மற்றும் ராஷி இந்தியாவின் துணை ஜனாதிபதி ஜக்தீப் தன்கர் மற்றும் அவரது மனைவி சுதேஷ் ஆகியோரை புதுடெல்லியில் சந்தித்தனர். 45 நிமிட சந்திப்பில், மேத்தா இந்திய எழுத்தறிவு இயக்கத்தின் முன்முயற்சிகளை எடுத்துரைத்தார் மற்றும் இந்தியாவில் சாத்தியமான ரோட்டரி மாநாடு குறித்து துணை ஜனாதிபதிக்கு விளக்கினார்.



*இந்தியாவின் துணை ஜனாதிபதி ஜகதீப் தன்கர் மற்றும் அவரது மனைவி சுதேஷ் ஆகியோருடன் PRIP சேகர் மேத்தா மற்றும் ராஷி.*

## பார்வையற்றோருக்கு Smart கண்ணாடி

ITC ஃபில்ட்ரோனா உடனான CSR முன்னெடுப்பின்கீழ், கண் பார்வைக் குறைபாடுள்ள 25 கல்லூரி மாணவர்களுக்கு Smart கண்ணாடிகளை வழங்கியது RC பெங்களூர் லேக்சைட், RID 3191.



*பயனாளிகளுடன் மாவட்ட CSR கமிட்டி இயக்குநர் காசிநாத் பிரபு மற்றும் சங்கத் தலைவர் அபிலாஷா பண்டிட்.*

## குக்கீக்களும் கேக்குகளும்

RC கோயம்பத்தூர் மொனார்க்ஸ், RID 3201, AIHSHEW ரோட்டராக்ட் சங்கம் இணைந்து தொடங்கிய “தி பேக்கிங் ஜர்னல்” தொழிற்பயிற்சித் திட்டத்தில் இதுவரை இரண்டு வகுப்புகள் பயிற்சி பெற்றுள்ளன, 29 மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.



*ஒரு பேக்கிங் வகுப்பு.*

## தாய்மார்களுக்கான நலப்பராமரிப்பு

RC லேக் ஆர்ரோஹெட், USA, RID 5330, உடனான GGயின்கீழ், ஏழைத் தாய்மார்கள், கர்ப்பிணிப் பெண்களுக்கான நலப் பராமரிப்பை மேம்படுத்துவதற்கென, வனடொன்க்ரி-யில் உள்ள ஷாலினிதாய் மெகெ மருத்துவமனை, ஆய்வு மையத்துக்கு 4D மீயொலி இயந்திரத்தைக் கொடையளித்தது RC நாக்பூர் சவுத் ஈஸ்ட், RID 3030.



*DG ராஜீந்தர் சிங் குரானா (வலமிருந்து இரண்டாவது) மற்றும் சங்க உறுப்பினர் ராஜீவ் வார்பே (இடது) அல்ட்ராசவுண்ட் இயந்திரத்தை மருத்துவமனையிடம் ஒப்படைத்தல்.*



## RID 3000

### RC கரூர் யங் ஜென்

பெருங்குடல் புற்றுநோயால் துன்புறும் நோயாளிகளுடைய என்டோஸ்கோபி-க்கென நிதி திரட்டுவதற்காக, ரோட்டரி, ரோட்டராக்ட் சங்கங்கள், JCI, BNI, யங் இந்தியன்ஸ், YES, ரவுண்ட் டேபிளிலிருந்து 16 அணிகள் இரண்டு நாள் கிரிக்கெட் போட்டியொன்றில் பங்கேற்றார்கள்.

Rotary PEOPLE OF ACTION

# சங்கச் செய்திகள்





## RID 3056

### RC ஜெய்ப்பூர் ஈஸ்ட்

சங்கனெர் ரயில் நிலையத்துக்கு எதிரிலுள்ள கச்சி பஸ்டி அரசுத் தொடக்கப் பள்ளியில், தொழிலாளர்களுடைய குழந்தைகளான 130 மாணவர்களுக்குக் ஸ்வெட்டர்கள் வழங்கப்பட்டன.

## RID 3080

### RC சிம்லா மிட்-டவுன்

ஐந்து கிராமங்களில் வசிப்போருக்கு LED தெரு விளக்குகள் வழங்கப்பட்டன. சம்மர் ஹில் அரசு உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு அறைச் சூடாக்கிகள் வழங்கப்பட்டன.





## RID 3090

### RC ஸ்ரீ கங்காநகர் சிட்டி

மகாத்மா காந்தி பெண்கள் பள்ளியில் நடைபெற்ற கண் பரிசோதனை முகாமில் 175 மாணவர்கள் பரிசோதிக்கப் பட்டார்கள், 35 மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

## RID 3011

### RC தில்லி சஃப்தர்ஜங்

மகளிர் நாளன்று, இந்தச் சங்கத்தின் திறன் மையமான மகிளா பிரதிரக்ஷா மண்டலில் பெண்கள் இயற்கை ஹோலி வண்ணங்களைத் தயாரித்து விற்றார்கள். சங்கத் தலைவர் பிரியா ஓபெராய் முன்னெடுப்பில், அன்மோல் சகாரா என்ற NGO இந்தப் பயிற்சியை வழங்கியது.






## RID 3141

### RC பாம்பே க்வீன் சிட்டி

BP, சர்க்கரை, BMI பரிசோதனைகள், அக்குபஞ்சர், புற்றுநோய் கண்டறிதல், ஃபிசியோதெரப்பி, தோல் பராமரித்தல் நடைபெற்ற இரண்டு நாள் மருத்துவ முகாமில் (ரூ.25 லட்சம்) 2,000க்கும் மேற்பட்ட நோயாளிகள் பலன் பெற்றார்கள்.

## RID 3132

### ரோட்டரி ஈ-கிளப் எம்பவரிங் யூத்

நெவாசா பகுதியில் சரண்பூர் விருத்தாசிரமம் என்ற முதியோர் இல்லத்தில் வசிக்கும் ஐம்பது முதியவர்களுக்கென புதிய கழிப்பறைத் தொகுதி (ரூ.25,000) தானே-வைச் சேர்ந்த Rtn ஆர்த்தி ம்ஹாத்ரெ, அமெரிக்காவைச் சேர்ந்த சாருஷீலா ஜோஷி ஆதரவில் அமைக்கப்பட்டுள்ளது.

# ஒரு நோக்கத்துடன் மறுபயன்பாடு

பிரீதி மேஹரா

*தூக்கி எறியும் பொருள்களுக்கு மறுவாழ்வு கொடுங்கள்.*

புதிய மில்லேனியத்தில் சுற்றுச் சூழல் கவலைகளுக்கு அழகியல் ரீதியாகவும் ஆக்கப்பூர்வமாகவும் பதிலளிக்க விரும்புவோர் அகராதியில் மறுபயன்பாடு நுழைந்துள்ளது. மறுபயன்பாடு என்பதை தவறாக நினைத்து குழப்பிக் கொள்ளக்கூடாது. மறுபயன்பாடு என்றால் எதையாவது மீண்டும் பயன்படுத்துதல் என்று பொருள். எடுத்துக்காட்டாக, ஊறுகாய் வைத்திருந்த ஜாடி காலியாகிவிட்டால் மீண்டும் ஊறுகாய்களை நிரப்பி வைக்கலாம். அல்லது அதை தூக்கி எறியாமல் ஜாம் வைப்பதற்காகப் பயன்படுத்தலாம்.


ஒரு பழைய பியானோ கருவி புத்தக அலமாரியாக மாறியிருக்கும்! உங்கள் குழந்தைகள் பியானோ வாசிக்க கற்றுக்கொள்வதற்காக நீங்கள் அதை ஒரு சிறந்த கருவியாக மாற்றவில்லை. ஆனால், புத்தகங்களைக் காட்சிப் படுத்துவதற்கு ஒரு புதிய நோக்கத்தை நீங்கள் வழங்குகிறீர்கள்.

1950–60-களில் மறுபயன்பாட்டுக்கு ஒரு நல்ல உதாரணம் சண்டீகரில் உள்ள பாறைத்தோட்டம். 40 ஏக்கர் பரப்பளவில் விரிவடைந்துள்ள இந்த இடத்தில் தொழில்துறை, வீடுகளிலிருந்து தூக்கி எறியப்பட்ட பொருள்களிலிருந்து வடிவமைக்கப் பட்டுள்ளது. இதை உருவாக்கியவர் நேக் சந்த் சைனி என்னும் அரசு அதிகாரி. இவர் நகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் வேண்டாம் என தூக்கி எறியப்பட்ட கழிவுப் பொருள்களை சேகரித்து இந்த தோட்டத்தை உருவாக்கியுள்ளார். அந்த நிலப்பரப்பு ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்ட நீர்வீழ்ச்சிகள், நிலப்பரப்பில் அழகிய சிற்பங்கள் மற்றும் பழைய பாட்டில்கள், உடைந்துபோன டைல்ஸ், பீங்கான் பானைகள், உடைந்த குழாய்கள், மின்கழிவுகள் இவற்றால் உருவாக்கப்பட்ட அலங்கரிக்கப்பட்ட பாதைகள் என அற்புதமாக காட்சியளிக்கிறது.

இப்போது நம்மில் விதிவிலக்காக ஒரு சிலருக்கு மட்டுமே மறைந்த நேக் சந்த் சைனி உயிர்பித்தது போன்ற அற்புதத்தை உருவாக்கும் கலைத்திறனும் பொறுமையும் இருக்கும். எனினும் நமது மூதாதையர் வீட்டின் மாடியில் கிடக்கும் நிராகரிக்கப்பட்ட மின்விசிறி, மரச்சாமான்கள் அல்லது பெட்டிகள் இருந்தால் அதற்கு ஒரு புதிய நோக்கத்தையும் வாழ்வையும் கொடுக்க முடியும். அத்தகைய செயல் நமக்கு மகத்தான படைப்பை உருவாக்கிய திருப்தியைத் தரும்.

பெங்களூருவில் உள்ள எனது தோழி ஒருவர் தனது வீட்டு தாழ்வாரத்தில் ஒரு ஊஞ்சலைக் காட்டினார். அது ஆந்திராவில் தனது மூதாதையர் வீட்டில் வேலைப் பாடுகளுடன்கூடிய கதவிலிருந்து வடிவமைக்கப்பட்டது. மிக நேர்த்தியாக, புதுப்பொலிவுடன் இருந்தது. இதுபோன்ற பழைய

*சண்டிகரின் ராக் கார்டனில் மறுபயன்பாட்டு சிற்பங்கள்.*





வீடுகளில் நீங்கள் பல பொக்கிஷங்களை கண்டுபிடிக்கலாம். அவற்றை நீங்கள் மீண்டும் பயன்படுத்த முடியும். கேரளாவைச் சேர்ந்த மற்றொரு நண்பர் என் நினைவிற்கு வந்தார். உலோகத்தால் செய்யப்பட்ட மிகப்பெரிய சமையல் பாத்திரத்தின் திறந்த வாய் பகுதியை கண்ணாடியால் மூடி மிகநேர்த்தியாக அதை தனது அறையின் மேஜையாக மாற்றியிருந்தாள்.

ஒரு நடுத்தரமான சூட்கேசை (பெட்டி) மறுபயன்பாட்டின் மூலம் நான்கு மரக்கால்களை கொடுத்து நுரை பஞ்சுகளை திணித்து உட்காருவற்கு ஒரு நல்ல நாற்காலியாக மாற்றலாம். இப்போது நீங்கள் செய்ய வேண்டியது எல்லாம் அந்த நாற்காலியை அறையின் வசதியான இடத்தில் சுவறை ஒட்டி வைத்து ஓய்வெடுப்பதுதான்.

இதேபோல, இரண்டு மர ஏணிகளை உங்களின் கற்பனையைப் பயன்படுத்தி புதுமையான புத்தக அலமாரியாக மாற்றலாம். இரண்டு ஏணிகளையும் கிடைமட்டமாக வைத்து, ஒன்றன்பின் ஒன்றாக வைத்து ஆணி அடித்து படிகளை புத்தகம் வைக்கும் இடமாகப் பயன்படுத்தலாம். அது நன்றாக வேலைசெய்வதை நீங்கள் பார்க்கலாம்.

தில்லியில் ஒருவர் வீட்டில் தனித்துவமான மறுபயன்பாட்டை நான் கண்டேன். பழைய டென்னிஸ் ராக்கெட்டில் உள்ள வலைபோன்ற நரம்புகளை எடுத்துவிட்டு அதில் கண்ணாடியைப் பொருத்தி அறையில் ஆங்காங்கே மாட்டியிருந்தார்கள். அது மிகவும் அழகாக இருந்தது.

இந்திய குடும்பங்கள் பாரம் பரியமாக மறுபயன்பாடு செய்வதில் கைதேர்ந்தவர்கள். கிராமங்களில் நமது பெண்கள் பழைய ஆடைகளை தங்கள் கைத்திறமையினால் புதியனவாக மாற்றுவதில் வல்லவர்கள். பஞ்சாபில், பழைய துணிகளைச் சேகரித்து அவற்றை ஒரே அளவிலான சிறுதுண்டுகளாக கிழித்து அடுக்கு அடுக்குகளாக தைத்து மெல்லிய மெத்தைகளாக தயாரிப்பார்கள். இவற்றை குளிர்காலத்தில் நாம் போர்வை போல பயன்படுத்திக் கொள்ளலாம். இவற்றை தண்ணீரில் நனைத்து துவைத்து காயவைத்தும் பயன்படுத்தலாம்.

கிழிந்த துணிகளைப் பற்றி பேசும் போது எனது அத்தையின் நினைவு எனக்கு வந்தது. அவர், பழைய புடவைகளின் ரவிக்கைகள், பெட்டிக் கோட்டுகள், மெல்லிய மஸ்லின் துணிகளை சேகரித்து வைத்திருப்பார். குடும்பத்தில் யாருக்காவது குழந்தை பிறப்பதாக இருந்தால், அவர், தனது பொக்கிஷத்தை கொண்டுவந்து பழைய துணிகளை அரை கச்சையாக (டயபர்) தயாரித்து குழந்தைக்கு மறுபயன்பாடு செய்வார். இது வசதியானதாக இருக்கலாம். ஆனால், சுற்றுச்சூழல் பாதுகாப்பானதா என்றால் இல்லை என்றே சொல்ல வேண்டும். அவை மக்காத செயற்கை நூலிழைகளினால் தயாரிக்கப் பட்டவை. மேலும் உலகின் மிகப் பெரிய மாசுபடுத்தி. இப்போது நகர்ப்புற இந்தியாவில் டயபர்களை கடைகளில் வாங்கி பயன்படுத்தும் பழக்கம் வேகமாக பரவி வருகிறது. மென்மையான துணியில் அரைகச்சை தயாரித்து பின்னர் மீண்டும் மீண்டும் துவைத்துப் பயன்படுத்துவதை நாம் மறந்து வருகிறோம்.




மேலும் ஆடைகளை வாங்கி அணிந்து சிலமுறை பயன்படுத்தி விட்டு அதை பின்னர் நிராகரித்து விட்டு புதிய டிசைன்களில் ஆடைகளைத் தேடுகிறோம். இப்படி நிராகரிக்கப்பட்ட பழைய ஆடைகள் அல்லது துணிகள் மறுபயன்பாடு இல்லாமலே குப்பைக்குச் செல்கிறது.

பிரச்னை என்னவென்றால், நாம் ஏதாவது ஒன்றை செய்ய அவசரப் படுகிறோம் அல்லது ஒரு பொருளை வாங்குவதற்கு முன் அதனால் என்ன பயன் என்பதை சிந்தித்துப் பார்ப்பதில்லை. அவசரம்தான் நம்கண் முன் நிற்கிறது. நமது பூமி நாளுக்கு நாள் வெப்பமடைந்து வருகிறது. குப்பைக் கிடங்குகள் நிரம்பி வருகின்றன. ஆறுகள், நதிகள் மற்றும் கடல்கள் மாசுபடிந்து வருகின்றன. காற்று சுத்திகரிப்பான் இல்லாமல் நாம் வீட்டில் இருக்க முடியவில்லை. இத்தகைய பேரிடர்களை நாம் எதிர் கொள்ளும்போது மறுபயன்பாடு, மறு சுழற்சி செய்து மீண்டும் பயன்படுத்துதல் என்னும் உறுதி மொழியை நாம் ஏன் ஏற்கக்கூடாது?

*எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதிவருகிறார்.*






# குஜ்ஜு மால்!

*இது குறைந்த தீயில் பாலில் உலர்ந்த பழங்களை மெதுவாக கொதிக்க வைத்து, அது ஓரளவு கெட்டியாகி வெளிர் இளஞ்சிவப்பு நிறமாக மாறும் வரை செய்யப்படும் ஒரு உணவு, தெய்வீக சுவையான இனிப்பு.*



**சந்தியா ராவ்**

எங்கள் இளமை பருவத்தில், எனது நண்பரும் நானும் ஒவ்வொரு முறை சந்திக்கும்போதும் இந்த அற்புதமான குஜராத்தி கீரை செய்தோம், அந்த நேரத்தில் யாராவது எங்களை பார்க்க வந்தால் அவர்கள் அதிர்ஷ்டசாலிகள்! அவர்களால் அதை சுவைக்க முடியும். அவர் அகமதாபாத்தில் வசிக்கும் ஒரு அத்தையிடமிருந்து இந்த செய்முறையைப் பெற்றார்; நாங்கள் அதற்கு குஜ்ஜு மால் என்று பெயரிட்டோம். சலில் திரிபாதியின் “தி குஜராத்திஸ்: எ போர்ட்ரெயிட் ஆஃப் எ கம்யூனிட்டி” என்ற புத்தகத்துடன் இந்த பெயரை தொடர்புபடுத்தினால் அது சரியாக பொருந்துகிறது. புத்தகம் அனைத்து சுவைகளும் கலந்த ஒரு அருமையான உணவு போன்றது. அவ்வப்போது சற்று “கசப்புச் சுவையும்” ஒரு வாய் கிடைக்கும்.

குஜராத்தியாக இருப்பதையும், அது வெளிப்படும் எண்ணற்ற வழிகளையும் பற்றிய திரிபாதியின் கணக்கு, சுமார் 650 பக்கங்கள் வரை நீண்டு செல்லும் ஒரு அற்புதமான எழுத்துக்களின் மாயஉலகமாகும், ஒவ்வொரு பக்கமும் ஆர்வத்துடன் சுவைக்க தகுதியானது. அதனால்தான், இந்த மாதக் கட்டுரையை நீங்கள் மனதார வாசிக்க வேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஏப்ரல் 2022 கட்டுரையிலிருந்து சலில் திரிபாதியின் பெயரை உங்களில் சிலர் நினைவில் வைத்திருக்கலாம்: “தி கர்னல் ஹூ வுட் நாட் ரிபெண்ட்: தி பங்களாதேஷ் வார்அன்ட் இட்ஸ் அன்குவயட் லெகஸி.” அவர் மிகவும் மதிக்கப்படும் பத்திரிகையாளர், அற்புதமான எழுத்தாளர் மற்றும் ஒரு குஜராத்தி. இந்தப் புத்தகம் பலதரப்பட்ட அம்சங்கள் மற்றும் அமைப்புகளைக் கொண்ட விரிவான ஆய்வுகளின் விளைவாக உருவானது. மேலும், குஜராத்தியராக இருந்த தனிப்பட்ட அனுபவத்திலிருந்தும், குஜராத்து சார்ந்த அனைத்துடனும் அவர் கொண்டுள்ள ஆழமான தொடர்புகளிலிருந்தும் இந்த நூல் தனது உயிரணுவை பெற்றுள்ளது. முன்னுரையிலிருந்து பின்வரும் குறிப்பு குஜராத்தியின் வரையறைக்கு சரியான சூழலை வழங்குகிறது: மொழியைப் பேசுபவர், அதில் எண்ணக்கூடியவர், அதில் கனவு காண்பவர், அதில் சிந்திப்பவர்; பெரும்பான்மையினரால் குஜராத்தி பேசப்படும் இடத்திற்குச் சென்றவர்; மற்ற மொழிகளைப் பேசினாலும் குஜராத்தை தங்கள் வீடாக மாற்றிக் கொண்டு தங்களின் சிறுபான்மை அடையாளங்களைப் பாதுகாப்பவர்கள்; மற்றும் உலகின் வேறு எங்கும் வாழ்ந்தாலும் குஜராத்தி பாரம்பரியத்தைக் கொண்டவர்கள். குஜராத்தி ஒரு மொழி மட்டுமே, அது ஒரு மதம் அல்ல, ஒரு சாதி அல்ல, எனவே இந்த பக்கங்களில் நீங்கள் சந்திக்கும் குஜராத்திகள் சமூகத்தின் அனைத்து அடுக்குகளுக்கும் சொந்தமானவர்கள், மேலும் இந்துக்கள், முஸ்லிம்கள், பார்சிகள், சமணர்கள், பௌத்தர்கள், தலித்துக்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் பிற இனங்களுடன் அடையாளம் காண்பவர்கள் மற்றும் எந்த நம்பிக்கையும் இல்லாதவர்கள் என அனைவரும் இதில் அடங்குவர்.

இது அபிப்பிராயமிக்க அல்லது உணர்ச்சி பூர்வமான ஓவியம் அல்ல. திரிபாதி தன் உள்ளிருந்து வெளியே வரைகிறார், அங்கு அவர் கதாபாத்திரங்களின் ஒரு பகுதியாக இருக்கிறார், அதே நேரத்தில் கட்டமைப்பிலிருந்து வெளியேறி தெளிவான கணக்குகள் மற்றும் அவதானிப்புகளைப் பகிர்ந்து கொள்கிறார். பன்னிரண்டு முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இந்த புத்தகம், குஜராத்திகள் யார், அவர்கள் எப்படி இருக்கிறார்கள், அவர்கள் எங்கிருந்து வந்தார்கள், அவர்கள் இந்தியாவிற்கு உள்ளேயும் வெளியேயும் எங்கு வாழ்கிறார்கள், அவர்களின் வேலை மற்றும் வேலை நெறிமுறைகள், அவர்களின் அரசியல், அவர்களின் படைப்பாற்றல், அவர்களின் தொண்டு மற்றும் வழிபாடு, அவர்களின் உணவு, அவர்களின் பொழுதுபோக்கு மற்றும் அவர்களின் குறைகள் கூட இதில் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவின் கீழும் உள்ள அத்தியாயங்கள் பொதுவாகக் குறுகியவை, ஆனால் வாசகர்கள் நிரம்பிய உரையை படிக்க தயாராக இருக்க வேண்டும்! இருப்பினும், எழுத்து மிகவும் தெளிவானது, இது புனைகதை படிப்பது போன்று சுவாரஸ்யமானது.

திரிபாதி தனது மக்களின் நடைமுறை மற்றும் அவர்களின் தைரியத்தை நமக்குக் காட்டும்போது, மற்றவர்களைப் பார்த்து சிரிக்கும் அவர்களின் விருப்பத்தையும் அவர் சுட்டிக்காட்டுகிறார். எங்கள் அஸ்மிதா என்ன? என்ற ஒரு அற்புதமான – மற்றும் அசாதாரணமாக நீண்ட – அத்தியாயத்தில், குஜராத்தியின் தன்மைகளை விவரிக்க அடிக்கடி பயன்படுத்தப்படும் கருத்தைப் பற்றி திரிபாதி விவாதிக்கிறார்: ஒருவரின் அடையாள உணர்வு, தன்னைப் பற்றிய விழிப்புணர்வு, பெருமை ஆனால் ஆணவம் அல்ல. அவர் இந்த கருத்தை குஜராத்தின் வரலாற்று சூழலில் பயன்படுத்துகிறார், மேலும் காந்திய அறிஞர் திரிதீப் சுஹ்ருத்தின் வார்த்தைகளை மேற்கோள் காட்டுகிறார், அவருடைய வார்த்தைகள் இன்றைய வாழ்க்கையில் வெவ்வேறு நிலைகளில் எதிரொலிக்கின்றன: அஸ்மிதா சூழலைப் பொறுத்தது. பெருமை என்பது சிறந்ததே, ஆனால் அந்தப் பெருமையில் ஒரு அகந்தை கலந்திருக்கிறதா? அடையாள உணர்வு இருப்பது நல்லதே, ஆனால் அது மனதைக் குறுகச் செய்கிறதா? மற்றும் விழிப்புணர்வு முக்கியமானதே, ஆனால் அது நம்மை தாமே நேர்மையானவர்கள் என்று எண்ண வைக்கிறதா? மற்றும் மனசாட்சி—அது விலக்குடையதா அல்லது உள்ளடக்கியதா?

சுமார் 90 அத்தியாயங்களை மேலோட்டமாகப் பார்க்கும்போது, தலைப்புகள் எவ்வாறு ஒரு கதைக் களத்தை வரைபடமாக்குகின்றன என்பதை நீங்கள் காண்கிறீர்கள். நாங்கள் எப்படி இருக்கிறோம் என்ற பிரிவை எடுத்துக் கொள்ளுங்கள். இங்கே குஜராத்தி யார்? நீங்கள் என்ன? நீங்கள் யார்? நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?; எங்களைப் போல் பணக்காரர்கள்: பாட்டியாக்கள், கபோல்கள் மற்றும் லோஹனாக்கள்; எங்களை விட பணக்காரர்கள்: ஜெயின்கள்; நாங்கள் அவர்களை நேசிக்கிறோம், அவர்கள் எங்களை விரும்புவார்கள் என்று நம்புகிறோம்: பார்சிகள்; எங்களுடைய படேல்கள்; எங்களுக்கு சமமானவர்கள் அல்ல: தலித்துக்கள்; எங்களால் பின்னுக்குத் தள்ளப்பட்டவர்கள்: ஆதிவாசிகள் மற்றும் அறிவிக்கப்படாத பழங்குடியினர்; அவர்களும் இல்லை, நாங்களும் இல்லை: மேய்ச்சல் சமூகங்கள் மற்றும் நாடோடிகள்; அவர்கள், நாங்கள் இல்லை: முஸ்லிம்கள்; எங்களில் மீதமுள்ளவர்கள் எங்கே? போன்ற தலைப்புகள் அதில் உள்ளன.

குஜராத்தின் வரலாறு, இந்தியாவிற்கு உள்ளேயும் வெளியேயும் இடம்பெயர்வு முறைகள், மக்களின் வணிக உணர்வு, அரசியல் எவ்வாறு செயல்படுகிறது, காந்தி மற்றும் பிறர், இலக்கியம் மற்றும் கலை, நம்பிக்கை மற்றும் வழிபாடு, சமையல் மற்றும் சைவ உணவு பழக்கங்கள், பாலியல் நடைமுறைகள், கலவரங்கள். இவை அனைத்தும் விரிவாகக் கையாளப் படுகின்றன, இருப்பினும் அதன் திறமையான மற்றும் மென்மையான உரையால் உங்களை தொடர்ந்து படிக்க வைக்கிறது.

இங்கே, நான் ஒரு மறுப்பை வழங்க வேண்டும்: இந்த புத்தகத்தை என்னால் கீழே வைக்க முடியாமல் போனதற்கான காரணம் இதுவாக இருக்கலாம் – என்னை நம்புங்கள், அதை கையில் வைத்திருப்பது சாதாரண விஷயமல்ல! – குஜராத்துடன் எனக்கு தனிப்பட்ட தொடர்புகள் இருக்கிறது. எனது முதல் பணிக்காக 46 ஆண்டுகளுக்கு முன்பு அகமதாபாத்திற்கு வந்தேன். எனக்கு யாரையும் தெரியாது. அகமதாபாத்திற்கு நேரடி ரயில் இல்லை. நான் கருணையுடன் இருப்பதாக நினைத்து, மக்களிடம் இந்தியில் பேசினேன், ஆனால் வருத்தமான பார்வைகளை மட்டுமே சந்தித்தேன். ஆனால் நான் ஆங்கிலத்திற்கு மாறியதும் முகங்கள் புன்னகையுடன் மலர்ந்தது! முதல் மூன்று மாதங்கள் பழங்குடிப் பெண்களுக்கான விடுதியில் கழிந்தன, அங்கே அவர்கள் என் மீது பாசத்தை பொழிந்தார்கள். அங்குதான் நான் பல்வேறு ரோட்லாக்கள் மற்றும் பெரிய டம்ளர் சாஸ் ஆகியவற்றிற்கு அறிமுகப்படுத்தப்பட்டேன்! பேருந்து ஜன்னலுக்கு வெளியே அடிக்கடி பார்க்கும் போது, போக்குவரத்து நிறுத்தங்களில் பொறுமையாக காத்திருக்கும் ஒட்டகங்களையும் நான் கண்டிருக்கிறேன்!

இது ஒரு புத்திசாலித்தனமாக எழுதப்பட்ட தொகுப்பு, மக்கள் எவ்வாறு வேலை செய்கிறார்கள் என்பதை அறிய ஆர்வமுள்ள எவரும் கண்டிப்பாக படிக்க வேண்டும். நான் பொதுவாக நேரடியாக வாசிப்பவள்; பக்கம் பக்கமாகத்தான் செல்லுவேன். ஆனால் இந்தப் புத்தகத்தில் எந்தப் பக்கம், எந்தப் பகுதியையும் திறந்து வாசிக்கலாம். திரிபாதி முழு புத்தகத்திலும் அந்தத் துடிப்பையும் ஓட்டத்தையும் குறையாமல் வைத்திருப்பது ஒரு அதிசயம். நான் அறிந்த குஜராத்தும், அது உள்ளடக்கியதும் இப்போது இருப்பதற்கும், அது உள்ளடக்கியதாகக் கூறப்படுவதற்கும் மிகவும் வித்தியாசமானது. குஜராத் அப்போது தன்னைத்தானே வளர்த்துக் கொண்டிருந்தபோது, உலகம் முழுவதிலுமிருந்து சிறந்த மனங்கள் வந்து தங்கள் பங்களிப்பை வழங்கினர், கட்டிடக் கலைஞர்கள் பக்மின்ஸ்டர் ஃபுல்லர், லே கார்பூசியர் மற்றும் லூயிஸ் கான், நடன இயக்குனர் மெர்ஸி கன்னிங்ஹாம், புகைப்பட கலைஞர் ஹென்றி கார்டியர்-ப்ரெஸ்ஸன் போன்றவர்கள். பின்னர் தாகூர் மற்றும் சரோஜினி நாயுடு போன்ற இந்திய ஜாம்பவான்களும் பங்களித்தனர். பின்னர் சாராபாய்க்கள் மற்றும் லால்பாய்க்கள் போன்ற தொலைநோக்கு குடும்பங்களும் பங்களித்தனர், அவர்களில் பலர் இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகம், தேசிய வடிவமைப்பு நிறுவனம் மற்றும் அகமதாபாத் ஜவுளி தொழில் ஆராய்ச்சி சங்கம் போன்ற முன்னோடி நிறுவனங்களை அமைத்தனர். விஞ்ஞானி விக்ரம் சாராபாயின் மனைவி மிருணாளினி தனது நடன அகாடமியான தர்பணாவை அமைத்தார், இது தென்னிந்திய கலை வடிவமான பரதநாட்டியத்தில் எண்ணற்ற இளைஞர்களுக்கு பயிற்சி அளித்தது.

தவறான தகவல்கள் மற்றும் தவறான கதைகளின் தாக்குதலை எதிர்க்க இந்த புத்தகத்தில் உள்ள பல விஷயங்கள் நமக்கு உதவும். நிச்சயமாக, சலில் திரிபாதி ஒரு இலக்கியப் பெருஞ்சாதனையை செய்திருக்கிறார்.

பின்குறிப்பு: குஜ்ஜு மால் குளிர்ந்த நிலையில் உட்கொள்ள சிறந்தது.

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.

# நீச்சல்: வெற்றியாளர்களின் விளையாட்டு

பரத் — ஷலன் சவூர்

1945ல், ஹிரோஷிமா-வில் அணுகுண்டு வீசப்பட்டபிறகு, யசுஹிரோ அகுமட்சு-வுக்குக் கதிர்வீச்சு தொடர்பான உடல்நலமின்மை உண்டானது. அவருடைய இரத்தத்தில் வெள்ளணுக்கள் மிகக் குறைவாக இருந்தன. இந்த ஆபத்தான நிலையைச் சரியாக்குவதற்கு எந்த மருத்துவச் சிகிச்சையும் இல்லை என்றார்கள் மருத்துவர்கள். 30 ஆண்டுகளுக்குப் பிறகு, 1975ல், அகுமட்சு தொடர்ச்சியாக நீச்சலடிக்கத் தொடங்கினார். ஆறு ஆண்டுகள், 2000 கடல்சார் மைல்கள் கடந்தபிறகு, அவர் முழுமையாகக் குணமாகிவிட்டார்.

தண்ணீரின் இயல்பு, மிதக்கச் செய்தல். அதில் எதைப் போட்டாலும் சரி, யாரைப் போட்டாலும் சரி, தண்ணீர் அதை அல்லது அவரை மிதக்க வைக்கும். பல நேரங்களில் இந்தப் பொதுப் புத்திதான் உயிர்வாழ்தலுக்கான அடையாளம். அதனால், நீங்களோ இன்னொருவரோ தண்ணீரைக் கண்டு அஞ்சினால் அவர்கள் தங்களுக்குள் சொல்லிக்கொள்ளவேண்டிய முதல் விஷயம், நான் ஏன் அஞ்சவேண்டும்? இது வெறும் தண்ணீர்தானே! இன்று காலைதான் நான் இதைக் குடித்தேன். ஆம். தண்ணீர் குடிப்பது மிக நல்லது. அது உங்கள் உடல்நலத்தை நன்கு பாதுகாக்கும்.

### நீச்சல் அறிவியல்

மிதக்கும் தன்மை என்பது, புவியீர்ப்பு விசையின் கீழ்நோக்கிய இழுப்பைச் சார்ந்துள்ளது. உடலால் வெளியேற்றப்படும் தண்ணீரால் மேல்நோக்கிய உந்தல் உருவாக்கப்படுகிறது. இதுதான் ஆர்க்கிமிடீஸ் கொள்கை. தண்ணீரின் அடர்த்தி, ஒரு கனசென்டிமீட்டருக்கு ஒரு கிராம். அதனால், தண்ணீரைவிடக் குறைந்த அடர்த்தி கொண்ட பொருட்கள் மிதக்கும். அதைவிடக் கூடுதல் அடர்த்தி கொண்ட பொருட்கள் மூழ்கும். பொதுவாக மனித உடலின் இயல்பான அடர்த்தி 0.98 முதல் 0.99 கிராம். அதனால், பெரும்பாலான மனிதர்கள் மிதப்பார்கள். அநேகமாக நீங்களும் மிதப்பீர்கள்.

நம்முடைய மிதப்பு மையம் (BC) என்பது தொப்புளில் இருந்து ஐந்து செமீ மேலே உள்ளது. நம் கை,



கால்களை நம்முடைய BCஐ நோக்கி இழுப்பதன்மூலம் தண்ணீரில் உடல் சமநிலைக் கட்டுப்பாடு கூடுகிறது. உங்கள் உடலைப் பின்னால் எஞ்சின் உள்ள ஒரு வண்டியாக எண்ணிக்கொள்ளுங்கள். உங்கள் இடுப்பிலிருந்து தொடங்கும் கால்கள்தான் ஆற்றல் அளிக்கும் எஞ்சின் மற்றும் பின் சக்கரங்கள். கைகள்தான் வழிசெலுத்தும் சக்கரம் மற்றும் முன் சக்கரங்கள். இவை சமநிலை, திசையைப் பெற உதவுகின்றன.

நான் ஐந்து வயதில் (அதுதான் சரியான வயது) நீச்சல் கற்றாலும் (என் தந்தைக்கு நன்றி), 1984ல் இதழியலிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு தான் நான் தீவிரமாக நீந்தத் தொடங்கினேன். லோகண்ட்வாலா-வில் உள்ள, நீச்சல் குளத்தைக் கொண்ட ஹைலாண்ட் பார்க்-குக்கு நாங்கள் இடம் மாறியது நலத்தை மனத்தில் வைத்துத்தான். அப்போது ஓர் இதய வல்லுனர் 40 வயதுக்கு முன்பாகவே எனக்கு உயர் இரத்த அழுத்தம் இருப்பதாகச் சொல்லியிருந்தார். அநேகமாக, என் மரபணுக்கள், நாள்தோறும் வேலை அழுத்தம், நெடுநேரம் பயணம் செய்தல் போன்றவை அதை உண்டாக்கியிருக்கலாம். அந்த நல்ல மருத்துவர் வழக்கமான மருந்துகளைப் பரிந்துரைத்தார். நான் ஒரு நீச்சல் திட்டத்தை உருவாக்கினேன். சிறிது காலத்தில், நான் நாள்தோறும் நிறுத்தாமல் 45 நிமிடங்களுக்கு நீச்சலடிக்கத் தொடங்கினேன். கோவிட் 19 வரும் வரை இது தொடர்ந்தது. தவறு ஒன்று: நான் தண்ணீர் குடிப்பதைக் கவனிக்கவில்லை. அதனால், ஒரு முறை நான் தீவிர நீரிழப்புக்கு ஆளானேன். அது என் உடலை இரும்புப் பலகைபோல் இறுக்கமாக்கிவிட்டது. பாடம்: நாள்தோறும் குறைந்தது மூன்று லிட்டர் தண்ணீர் குடியுங்கள்.

கோவிட் 19 நோய்ப்பரவல் உலகெங்குமுள்ள மனித உயிர்களை மாற்றியது. நான் நீச்சலை விட வேண்டியிருந்தது. நான் கோவிட் நோய்ப்பரவல் வந்து நான்கு ஆண்டுகளுக்குப்பிறகு, மீண்டும் நீச்சலைத் தொடங்கினேன். என்னால் ஐந்து நிமிடங்கள்கூடத் தொடர்ச்சியாக நீச்சலடிக்க இயலவில்லை. என்னுடைய முதல் நீச்சல் காலத்தில் 45 நிமிடங்கள் தொடர்ந்து நீச்சலடித்தது இப்போது ஒரு கனவைப்போல் தெரிந்தது. தவறு: இப்போது நான் ஒவ்வொரு சுற்றுக்குப்பிறகும் கடிகாரத்தைப் பார்த்தேன். பாடம்: சும்மா கடிகாரத்தைப் பார்ப்பது நேர விரயம்தான். ஏனெனில், அது வேலையைக் கெடுக்கிறது, நேரம் செலவிட்டு, உழைப்பைக் கொடுத்துக் கடினமான முறையில் பெறப்படும் பொறுமை, விடாமுயற்சி, பயிற்சியை நுட்பமாகக் குறைத்து மதிப்பிடுகிறது. இது போதும் என்று எப்போதும் சொல்லாதீர்கள். எல்லா வயதைச் சேர்ந்தவர்களும், எல்லா விளையாட்டுகளைச் சேர்ந்தவர்களும், தடகள வீரர்களும், உங்களைப்போல் பயிற்சி பெறுகிறவர்களும் மனத்தைத் தளர்த்திக் கொள்வதற்காக நீந்துகிறார்கள். என்னைப் பொறுத்த வரை, குளிர்ச்சியாக இருப்பதுதான் என்னுடைய புதிய விதிமுறை.

Watching what and how much you eat is imperative. Stick to a balanced diet. Aerobic exercises do not directly address the stomach. Hence, refer to our earlier essay on tummy trimming and toning. Abdominal exercises are in a class of their own.

| * Aerobic activity | Time span (in minutes) | Distance or intensity |
|---|---|---|
| Walking | 42 | 4.8km |
| Jogging | 7.45 | 1.6km |
| Inch stepping/Rebounding | 20 | 70 steps per minute |
| Outdoor cycling | 21 | 9.6km |
| Armchair cycling | 70rpm | 20 minutes |
| Swimming | 15 | 549 metres |

*Frequency: 5 days a week.

### சிவப்புக் கொடி

எல்லா நீர்நிலைகளும் பாதுகாப்பாகத் தோன்றுகின்றன. ஆனால், அந்தத் தோற்றம் உங்களை ஏமாற்றிவிடலாம். அந்தக் கவர்ந்திழுக்கிற அழகிய பரப்புக்குக் கீழே, அல்லது அதைத் தாண்டி ஆபத்து காத்திருக்கலாம். காயப்படுத்தும் கூரான பாறைகள், இழுக்கும் அடி நீரோட்டங்கள், புரட்டும் அலை... நீங்கள் பொது இடங்களில் நீச்சல் செய்யும் முன் உள்ளூர் மனிதர் ஒருவருடன் பேசுங்கள். அத்துடன், ஒரு வழிகாட்டி/நன்கு நீந்துபவரை உங்களுடன் அழைத்துச்செல்லுங்கள்.

நீச்சலடிப்பது ஒரு மிகச் சிறந்த பயிற்சியாகும். அதிக எடைக் குத்துச்சண்டைப் போட்டிகளில் உலக அளவில் சிறந்து விளங்கிய வரும், குத்துச்சண்டைப் போட்டி களில் மொத்தம் 83 வீழ்த்தல்களை (நாக்-அவுட்கள்) நிகழ்த்தியவரும், 49–0 என்கிற சாதனையுடன் தோல்வியின்றி ஓய்வு பெற்ற ஒரே வீரருமான ராக்கி மார்சியானோ நீச்சல் குளத்தில் குதித்துக் களைப்பு வரும்வரை தண்ணீரைக் குத்துவார். தண்ணீர் காற்றைவிட அடர்த்தியான ஊடகமாக இருப்பதால், அவருக்குக் கூடுதல் எதிர்ப்பு கிடைக்கும். இது ராக்கியின் குத்துகளை இன்னும் வலுவாக்கியது. சில்வஸ்டர் ஸ்டாலன் ராக்கியின் வெற்றியைப் பயன்படுத்திக்கொண்டார். அந்தப் பெயரில் அவர் வெளியிட்ட திரைப்படங்களின் வரிசை பெரிய வெற்றியடைந்தது.

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life Simply மற்றும் Spritiual You Are Naturally Divine என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.




## RID 3170

### RC தார்வாட் ஹெரிடேஜ்

இந்தச் சங்கத்தின் பதிவு நாள் இரவில், பெல்காமில் உள்ள கரிகட்டி அரசுப் பள்ளிக்கு உயர்ந்த, அறிவார்ந்த பலகையைக் (ரூ.1.5 லட்சம்) கொடையளித்தார் DG சரத் பாய். இந்த டிஜிட்டல் பலகையை Rtn ஜோதி ஜீவன்னவர் ஆதரித்தார்.

Rotary PEOPLE OF ACTION

# சங்கச் செய்திகள்





## RID 3211

### RC கோழென்சேர்ரி

கேரள நல அமைச்சர் வீணா ஜார்ஜ் “பிரணாமா இறுதிச் சடங்கு நிகழ்வு மேலாண்மை” அமைப்பைத் தொடங்கிவைத்தார். இதில் இரண்டு AC மருத்துவ உதவி வண்டிகள், ஓர் இறுதி ஊர்வல வண்டி, இரண்டு நடமாடும் பிணவறை வண்டிகள், மையமான இடத்தில் அமைந்த கட்டடத்தில் அனுபவம் உள்ள பணியாளர்கள் உள்ளார்கள்.

## RID 3231

### RC குடியாத்தம்

இந்தச் சங்கம் குடியாத்தத்தில் நடத்திய கண் பரிசோதனை முகாமில் 200க்கும் மேற்பட்டவர்கள் பலன் பெற்றார்கள். சுமார் 140 பேருக்குக் கண் புரைச் சிகிச்சை அளிக்கப்பட்டது. கண் பார்வைக் குறைபாடுள்ளவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.





## RID 3234

### RC மெட்ராஸ் சென்ன பட்னா

ஜவகர்லால் நேரு உள் அரங்கத்தில் நடைபெற்ற ரோட்டரி மேசை டென்னிஸ் லீகின் 4வது பருவத்தில், தலா 13 வீரர்களைக் கொண்ட 12 குழுக்கள் நட்பாகப் போட்டியிட்டார்கள்.

## RID 3201

### ரோட்டரி ஈ-கிளப் மெட்ரோ டைனமிக்ஸ்

கோவனூர் பஞ்சாயத்து ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு ஏழை மாணவர்களுக்குப் பயன்படும் அறிவார்ந்த பலகை (ரூ.1.2 லட்சம்) கொடையளிக்கப்பட்டது.




## RID 3250

### RC பாட்னா கன்கர்பாக்

பாட்னா-வின் பரபரப்பான சாலையொன்றில், பாதுகாப்பான, ஒழுங்கான வண்டி யோட்டுதல்பற்றிய விழிப்புணர்வை உண்டாக்கும் அறிவிப்புப் பலகை நிறுவப்பட்டது. போக்குவரத்து நிறுத்தங்கள், போக்குவரத்து விதிமுறைகளை மீறுவோருக்கான தண்டனைகளைப்பற்றிய பதாகையும் அமைக்கப்பட்டது.



## RID 3261

### RC வயின்கங்கா பலகட் திவஸ்

தலைமை மருத்துவ நல அலுவலர் அலுவலகம், ஜபல்பூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையுடன் இணைந்து பலகட் மாவட்ட மருத்துவமனையில் நடைபெற்ற, 18 வயதுக்குக் குறைவான குழந்தைகளுக்கான இரண்டு நாள் ஹெர்னியா, ஹைட்ரோசெலெ, டங்-ட்டை சரிசெய்தல் முகாமில் எழுபது அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டன.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

# RI தெற்காசிய அலுவலகத்திலிருந்து செய்தி

**RY 2025–26-க்கான மாவட்ட அறக்கட்டளை பதவிகளை நியமிக்கவும்**

2025–26க்கான நிதி திரட்டும் இலக்குகளை வெற்றிகரமாக அடைய, DGEகள் கிளப் தலைவர்களிடையே அறக்கட்டளைக்கு முன்னுரிமை அளிப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு முழுமையான குழுவை நிறுவ வேண்டும். எண்டோவ்மென்ட்/முக்கிய பரிசுகள் (DE/MGC), CSR, வருடாந்திர நிதி துணைக்குழு, நிதி திரட்டும் துணைக்குழு மற்றும் போலியோபிளஸ் துணைக்குழு மற்றும் பால் ஹாரிஸ் சொசைட்டி ஒருங்கிணைப்பாளர் ஆகியவற்றிற்கான உங்கள் மாவட்டத் தலைவர்களை நியமிக்கவும். My Rotary-ல் உள்நுழைந்து, “Manage” என்பதற்குச் சென்று, District Administration தேர்ந்தெடுத்து, இந்த சந்திப்புகளை RI-க்கு புகாரளிக்கவும், இதனால் உங்கள் அனைத்து நிதி திரட்டும் முயற்சிகளையும் ஆதரிக்கக்கூடிய அத்தியாவசிய அறிக்கைகள் மற்றும் தகவல்களுக்கான அணுகலை அவர்கள் பெறுவார்கள்.

**சங்க உறுப்பினர்கள் சார்பாக பட்டியலிடப்பட்ட பங்களிப்பு**

சங்கங்கள் தங்கள் உறுப்பினர்கள் சார்பாக காசோலை அல்லது வரை வோலை (DD) மூலம் பங்களிப்பை வழங்கும் விருப்பத் தேர்வு உள்ளது. அத்துடன் அவர்களின் தனிப்பட்ட பங்களிப்புகளைக் குறிக்கும் உறுப்பினர்கள் பட்டியலும் இதில் அடங்கும். இந்த விருப்பத் தேர்வின் கீழ்:

- சங்கம் அல்லது அதன் அறக்கட்டளை பட்டியலிடப்பட்ட பங்களிப்பாக ஒற்றை காசோலை அல்லது வரைவோலையை வழங்கும்.
- காசோலையை யார் வழங்கினாலும், சங்கம் அல்லது அதன் அறக்கட்டளை PAN எண்ணை வழங்க வேண்டும்.
- உறுப்பினர்களின் பட்டியலுடன் அவர்களது ID மற்றும் அவர்களின் பங்களிப்புகளை சங்கம் தெளிவாக குறிப்பிட வேண்டும்.
- தனிப்பட்ட பங்களிப்பாளர்கள் சார்பில் கொடுக்கும் தொகை, காசோலையில் குறிப்பிடப்பட்ட மொத்த தொகையுடன் பொருந்த வேண்டும்.
- RISAO-வின் நிதித்துறை மூலம் சங்கம் மற்றும் அறக்கட்டளைக்கு வரி ரசீது வழங்கப்படும்.
- சங்கம் வழங்கிய பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களின் அடிப்படையில், தனிப்பட்ட உறுப்பினர் தங்கள் உறுப்பினர் ID-யை பயன்படுத்தி கடன் பெறுவார். இதில் தனிப்பட்ட உறுப்பினர்களுக்கு வரி ரசீது வழங்கப்படாது.

RISAO-வில் அத்தகைய பங்களிப்புகளைச் சமர்பிப்பதற்கான கடைசி தேதி மே 31, 2025 என்பதை நினைவில் கொள்ளவும். பட்டியலிடப்பட்ட பங்களிப்புக்கான காசோலை அல்லது வரைவோலை எந்த ஒரு தனிப்பட்ட நபரின் கணக்கில் அல்லாமல் சங்கம் அல்லது சங்கத்தின் அறக்கட்டளை கணக்கில் இருந்து எடுக்கப்பட வேண்டும்.

## 2024–25 Annual Fund (AF) Challenge

**Brought to you by TRF Trustee Bharat Pandya and Zones 4, 5, 6 & 7 RRFCs**

| | Champion | Platinum | Gold | Silver |
|---|---|---|---|---|
| **For District** | District achieving AF per capita of $200 or more | 100% members contributing $25 or more to AF, or the district reaching an AF per capita of $175 or more | At least 75% members contributing $25 or more to AF, or the district reaching an AF per capita of $150 or more | At least 50% members contributing $25 or more each to the AF, or the district reaching AF per capita of $100 or more |
| **For Club** | NA | Minimum $25 contribution by each member along with on AF per capita of $200 | Minimum $25 contribution by each member along with AF per capita of $100 | Minimum $25 contribution by each member |
| **Eligibility criteria** | To be eligible for district award, the district must achieve 100% clubs giving with minimum $100 from each club | | | |

**பால் ஹாரிஸ் சொசைட்டி விருது**

ஒவ்வொரு மண்டலத்திலிருந்தும், அதிக புதிய PHS உறுப்பினர்களைக் கொண்ட மாவட்டம் (குறைந்தபட்சம் 20 புதிய PHS உறுப்பினர்கள்) இந்த விருதுக்கு தகுதி பெறுவார்கள்.

# உங்களுக்கு விருப்பமான மாநாடு



கல்காரியில் நடைபெறும் ரோட்டரி சர்வதேச மாநாட்டில் கலந்து கொள்ள திட்டமிடும் உறுப்பினர்கள், திட்டக் கூட்டாளர்களைக் கண்டுபிடித்து RI இன் பணிகளைப் பற்றி அறிந்து கொள்வதில் ஆர்வமாக இருப்பதாகக் கூறுகிறார்கள்.

கடந்த கால மாநாடுகளைவிட உலகம் முழுவதிலிருந்து அதிக எண்ணிக்கையில் நண்பர்களை பார்க்க முடியும் என்ற எதிர்பார்ப்புடன் இருப்பதாக ரோட்டரியின் செய்திச் சேனலான வாட்ஸ் ஆப் தளம் தெரிவிக்கிறது. மேற்கு எல்லைப்புற பகுதி நகரமான கல்காரியில் கௌவ்பாய் தொப்பிகளை (வடஅமெரிக்காவில் உள்ள கௌவ்பாய்கள் அணியும் ஒருவகை தொப்பி) அணிவதில் ஆர்வமாக இருப்பதாக பெரும்பாலானவர்கள் கூறியுள்ளனர்.

வாழ்நாள் முழுவதும் தொடர்புகளை உருவாக்கிக் கொள்வதற்கும், புதிய கண்ணோட்டங்களை கண்டறிவதற்கும் ஒரு இடமாக மாநாடு இருக்கும் என்பதால் வருகிற ஜூன் 21-முதல் 25 வரை நடைபெறும் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு தலைவர் ஸ்டெஃப்னி உர்ச்சிக் கேட்டுக் கொள்கிறார்.

கல்காரி என்பது நாம் விரும்பும் எளிதில் பயணம் செய்யக்கூட இடமாகும். பரபரப்பான இந்த நகர மையம் சுற்றிப்பார்ப்பதற்கு வசதியானது. மாநாட்டு ஏற்பாட்டுக் குழுவின் துணைத் தலைவர் மார்க் ஸ்டார்ரட்டுக்கு விருந்துக்கான ஏற்பாடுகளைச் சிறப்பாக செய்து வருகிறார்.

மாநாட்டின் பிரதான நிகழ்வுக்கு தொடர்பான வேலைகள் இன்னமும் செய்ய வேண்டிய நிலையில், அனைத்து உறுப்பினர்களுக்கும் இந்த நிகழ்வு மறக்கமுடியாத அனுபவமாக இருக்கும் என்றும் மார்க் ஸ்டார்ரட் கூறுகிறார். ■

# மும்பையில் சக்கர நாற்காலி கூடைப்பந்து போட்டி

ரோட்டரி செய்திக்குழு



RID 3141 டிஸ்எபிலிட்டி டு எபிலிட்டி அவென்யூ, RC காட்கோபர் வெஸ்ட் உடன் இணைந்து, காட்கோபரில் உள்ள YMCA மைதானத்தில் மகளிர் சக்கர நாற்காலி கூடைப்பந்து போட்டியை நடத்தியது. "ரோட்டரியின் அனை வரையும் உள்ளடக்கும் முயற்சியை முன்னிலைப்படுத்துவதற்கும், ஊனமுற்ற பெண்களின் நெகிழ்ச்சி, உறுதிப்பாடு மற்றும் விளையாட்டுத் திறனை கொண்டாடுவதற்கும் இந்த நிகழ்வை நடத்தினோம். அவர்களில் பலர் சக்கர நாற்காலியில் இருந்து விழுந்தும் நொடிகளில் எழுந்து மீண்டும் விளையாடத் தொடங்கினர்" என்று அவென்யூ தலைவர் கலா ஸ்ரீதர் கூறினார்.


இந்த நிகழ்வு இந்திய சக்கர நாற்காலி கூடைப்பந்து கூட்டமைப்பு, மகாராஷ்டிரா சக்கர நாற்காலி கூடைப்பந்து சங்கம் மற்றும் சக்கர நாற்காலி விளையாட்டு சங்கம் ஆகியவற்றின் வழிகாட்டுதலின் கீழ் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு தன்னார்வ தொண்டு நிறுவனமான ப்ராஜெக்ட் மும்பை பரிசுத் தொகையை வழங்கியது மற்றும் ACC-RED அனுகல் பங்காளராக ஆதரவளித்தது. ■

LBW



# வீட்டு உணவின் சுவை...



TCA ஸ்ரீனிவாச ராகவன்

2018 முதல், கோவிட் ஆண்டான 2020 தவிர, நானும் என் மனைவியும் ஒவ்வொரு ஆண்டும் சுவிட்சர்லாந்துக்குச் சென்று வருகிறோம். ஏனெனில் என் மகன் அங்கு பொருளாதார நிபுணராகப் பணியாற்றுகிறான். ஒவ்வொரு ஆண்டும், வந்த சில நாட்களுக்குள் என் மனைவி சமையலறையில் இந்தியப் பொருட்கள் இருக்கிறதா என்று பார்ப்பார். பின்னர் 3-ம் நாள், என்ன இல்லை மற்றும் இந்தியாவில் இருந்து நாங்கள் கொண்டு வராதது ஆகியவற்றை கடைக்குப் போய் வாங்குவோம். என் மகன் வசிக்கும் லாசானில், இலங்கைத் தமிழர்களுக்குச் சொந்தமான நிறைய கடைகள் உள்ளன. அவர்களில் ஒன்றிரண்டு பேர் இப்போது எங்களை, குறிப்பாக என் மனைவியை அடையாளம் கண்டுகொள்கிறார்கள். என் மனைவி மசாலா மற்றும் பிற பொருட்களைத் தேட அவர்கள் எங்களிடம் உரையாடுகிறார்கள். நாங்கள் இந்தியாவை விட்டுப் போனது போலவே இல்லை. வாசனைகள் கூட நம் ஊரில் உள்ளதைப் போலவே இருக்கின்றன.

இந்த முறை நாங்கள் ஒரு வியட்நாமிய உணவகத்தில் தெற்காசிய தோற்றம் கொண்ட ஒரு பரிமாறுபவரை முதன்முறையாக சந்தித்தோம். என் மனைவியின் பலத்த ஆட்சேபனை இருந்தபோதிலும், அவர் எங்கிருந்து வருகிறார் என்று நான் கேட்டேன். அவர் இலங்கை என்றார். இது ஆச்சரியமாக இருந்தது, ஏனெனில் நமது துணைக்கண்டத்தைச் சேர்ந்தவர்களில் இதுபோன்ற வேலைகளைச் செய்பவர்கள் பொதுவாக பங்களாதேஷைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். நான் அவரிடம் இலங்கையில் எங்கே என்று கேட்டேன், அவர் யாழ்ப்பாணம் என்று பதிலளித்தார். நான் அவரிடம் தமிழில் பேச ஆரம்பித்ததும், அவரது முகம் மலர்ந்தது. நாங்கள் நீண்ட நேரம் பேசினோம், அதன் விளைவாக அவர் தமிழ் உணவை சாப்பிட ஆசைப்பட்டார். புளியிலிருந்து தயாரிக்கப்படும் காரமான வத்தக்குழம்பை நான் குறிப்பிட்டதும் அவர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்.

சில வாரங்களுக்குப் பிறகு, 55 ஆண்டுகளுக்கு முன்பு எங்கள் வகுப்பிற்குப் பாடம் எடுத்த பொருளாதார வரலாற்றுப் பேராசிரியரைப் பார்க்கச் சென்றேன். எங்கள் உரையாடல் 1930-களின் நாணய மாற்று விகித சர்ச்சையிலிருந்து தமிழ் மசாலாப் பொருட்களுக்கு விரைவாகத் திரும்பியது, அதாவது அபத்தமானதிலிருந்து உன்னதமானதற்குச் சென்றது போல. அவருக்கு மிகவும் விரும்பமானது வேப்பிலைக்கட்டி என்ற பொடி, இது தமிழ்நாடு மற்றும் கேரளாவை ஒட்டியுள்ள பகுதியிலிருந்து வருகிறது. வழக்கமான மாங்காய் ஊறுகாயான மாவடுவைப் பற்றி நான் சொன்னதும், அவர் மிகவும் உற்சாகமடைந்தார். எனது அடுத்த வருகையின்போது அதை நான் கொண்டு வருவதாக அவருக்கு உறுதியளித்தேன்.

தங்கள் சொந்த மாநிலங்களில் வசிக்காத மற்ற இந்தியர்களுடனும் எனக்கு இதுபோன்ற அனுபவங்கள் இருந்தன. ஏர் இந்தியாவில் ஒரு நீண்ட விமானப் பயணம் எனக்கு நினைவிருக்கிறது, அதில் மகாராஷ்டிராவைச் சேர்ந்த ஒரு விமானப் பணியாளர் இருந்தார். அவர் பஞ்சாபில் வசித்து வந்தார். புறப்பட்ட பிறகு, நள்ளிரவு வாக்கில் நான் நிறைய விஸ்கி குடித்துவிட்டு சில மணி நேரம் கழித்து மிகுந்த தாகத்துடன் எழுந்தேன். தண்ணீர் குடிக்க விமானத்தின் பின்புறம் சென்றேன், அந்த விமானப் பணியாளர் தனியாக அமர்ந்திருப்பதைக் கண்டேன். நாங்கள் பேச ஆரம்பித்தோம், அவர் அக்ரி மசாலா என்ற ஒன்றிற்காக மிகவும் ஏங்குவதாக தெரிந்தது. நான் அதைப் பற்றி கேள்விப்பட்டதே இல்லை. அது மிகவும் காரமாக இருக்கும் என்றும், மீனுடன் நன்றாக இருக்கும் என்றும் அவர் கூறினார். பஞ்சாபுக்கு நல்ல உணவு பற்றி எதுவும் தெரியாது என்றார் அவர். பின்னர் அவர் தனது பாக்கெட்டிலிருந்து ஒரு சிறிய ஜிப்லாக் பையை எடுத்து எனக்குக் கொடுத்தார். "சார், சாப்பிட்டுப் பாருங்க" என்றார். விமானத்தில் அவர்கள் பரிமாறிய சுவையற்ற காலை உணவோடு அதை நான் சாப்பிட்டேன். அது ஆம்லெட்டில் இருந்த முட்டைகளை நன்றாக உரைப்பாக்கியது.

ஆனால் உணவு நினைவுகளில் 40 ஆண்டுகளுக்கு முன்பு எங்கள் வீட்டிற்கு மதிய உணவுக்கு வந்த கொரியரை எதுவும் மிஞ்ச முடியாது. என் மனைவி சமீபத்தில் கொரிய மொழி மற்றும் ஆய்வுகள் பேராசிரியராக இருந்து ஓய்வு பெற்றார். 1980-களில் அவர் கொரிய கடல்பாசி மற்றும் அசல் பாரம்பரிய கிம்ச்சி ஆகியவற்றை வைத்திருந்தார், இப்போது அவர்கள் உங்களுக்கு பரிமாறுவது போன்ற குறைக்கப்பட்டதல்ல. அவர் இரண்டையும் மேகி நூடுல்ஸ் உடன் கலந்து அந்த கொரியருக்கு பரிமாறினார். நான் மிகைப்படுத்தவில்லை, அவர் உணர்ச்சிவசப்பட்டு அழ ஆரம்பித்தார். அந்த இரண்டையும் சாப்பிடாமல் தான் மிகவும் ஏங்கியதாக கூறினார். என் மனைவி அவர் மீது இரக்கம் கொண்டு கடல்பாசி மற்றும் கிம்ச்சி முழுவதையும் அவருக்கு பரிசாகக் கொடுத்தார். பாரம்பரிய கிம்சியின் வாசனை சில நேரங்களில் மிகவும் உறுத்தலாக இருக்கக் கூடும். ■





# Rotary
District 3212



THE MAGIC OF ROTARY

# Yadhumanaval

EMPOWERING GIRLS

The voice of Yadhumanaval is a war cry against women illiteracy, gender inequality, gender bias and sexual harrassment.

Yadhumanaval is the voice of the voiceless and voiced less. It is for the women, by the women and of the women.

Rotary strongly encourages partnership with like-minded Institutions and Corporates which support Rotary's Programmes. Empowering girls has been a major focus of Rotary in the recent years.

Therefore the coming together of Rotary District 3212 and IDHAYAM, to empower young adults through a confidence building Programme specially designed by an illustrious life skills facilitator, Dr. Jayanthasri Balakrishnan, titled 'Yadhumanaval', is a great blessing indeed.

## Jayanthasri Balakrishnan



" SHE PAVES A PATH FOR GIRL CHILDREN TO BECOME STRONGER VERSIONS OF THEMSELVES THROUGH HER MESMERIZING TALK. "

No. of Occurrences
**109**

No. of Beneficiaries
**1,41,600**

## Get in Touch


Yadhumanaval
Project Chairman
Rtn D.Vijayakumari
+91 94887 66388

**IDHAYAM**
PROMISE OF HEALTH AND HAPPINESS

LEKHA ads/May 25/Rotary/BIW

ADVT.

Registered No. TN/CCN/677/2025-2027 | Total number of pages in this monthly
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP/611/25-27 | issue, including cover, 84. Price: ₹40
Regd with RNI TNTAM/2018/76372. Rotary News Tamil Published 1st week of every month. Posted at Egmore RMS Patrika Channel. Date of posting: 9–15 every month.


Rotary District 3212




THE MAGIC OF ROTARY

A COMPREHENSIVE
ENTREPRENEURSHIP DEVELOPMENT WORKSHOP
3500 MINUTES



RYLA
BE AN ENTREPRENEUR

BUSINESS PLAN | POWER SPEAKERS | CONTINUOUS HANDHOLDING | INVESTORS MEET | MARKETING STRATEGIES

STOP WORRYING ABOUT JOB(S)
START PRODUCING JOB(S)

ROTRACTORS | 3rd / 4th YEAR UG STUDENTS
1st / 2nd YEAR PG STUDENTS
Course completed GRADUATES & POST GRADUATES
Between the age of 18 to 28



PER BATCH
32
Participants
Only



On Board
1402
Through
45 Editions

Top 2 from Every batch
FLY TO SINGAPORE
Free of cost.





UPCOMING BATCH DATES
47.0: 16th, 17th & 18th MAY 2025
48.0: 20th, 21st & 22nd JUNE 2025
49.0: 18th, 19th & 20th JULY 2025
50.0: 22nd, 23rd & 24th AUG 2025



INVESTMENT
Rs.3500
Including Accommodation, Food, T-Shirt, Certification, E-Book, CREA Programs.



ENROLL RYLA
CONTACT
94431 66650
94433 67248

VENUE
Hari's Hotel
NH 44, Near Tirumangalam
Toll Plaza, Kappalur,
Thirumangalam, Madurai

So Far 45 Batches Completed 1402 Certified
252 Starters... & Counting

IDHAYAM SAY IDHAYAM • SPELL HEALTH | PG | Srinidhi Building Sustainable Relationship | K.V. Ramaswamy MEMORIAL TRUST

ADVT.